# திருவான்மியூர் திருத்தலம்



# திருவான்மியூர் திருத்தலம்

ஆக்கியோன்,

**எம். இராஜகோபாலன்**
M. A. (வரலாறு) M. A. (தமிழ்),
Certif. in Epigraphy, C. A. I. I. B. (I), C. J. M. C.



ஹரிஓம் நமோ நாராயணாய :

**This book in Published with the Financial
§Assistance of Tirumala Tirupathi
Devasthanams Under their Scheme,
"Aid to Publish Religious Books"**

| | |
|---|---|
| Title of the Book | TIRUVANMIYUR THIRUTHALAM |
| Author and | M. Rajagopalan |
| Publisher | (A4, Anand) MICO Colony<br>Besant Nagar,<br>Madras-600 090<br>Phone : 4911556 (Res) |
| Language | — Tamil |
| Edition | — First |
| Date of Publication | — Feb. 1995 |
| Copy Right | — Author |
| Paper Used | — Seshasayee |
| Size of the Book | — Demmy |
| Printing Types | — 10 Point |
| Number of Pages | — 1?4 (10+24 Pages Art Paper) |
| Number of Copies | — 1200 |
| Price | — Rs. 22 (Twenty two) |
| Printed at | — Surya Achagam, 16, Pillayar Koil St, Ms-41. |
| Binding | — Paper Back |
| Artist (Cover Page) | — Selvi. B. Kala |
| Photographs Printed at | — Esskay Art Printers, Triplicane Madras-5 |

Subject : A detailed Study of the
Marundeesvara Temple of
Tiruvanmiyur.

# பொருளடக்கம்


புகைப்படங்கள் 4

**நூல்**

1. நுழைவாயில் 33
2. திருக்கோயில் அமைப்பு 36
3. தலவரலாறு 44
4. வரலாற்று நோக்கில் திருவான்மியூர் 71
5. கலைச் சிறப்பு 75
6. கல்வெட்டுகள் 78
7. திருவான்மியூர் பற்றிய இலக்கியங்கள் 84

பூஜைகளும் திருவிழாக்களும் 122

8. இன்றைய நிலை 129
9. பாம்பன் ஸ்வாமிகள் வாழ்க்கை வரலாறு 131


அட்டையிலுள்ள படங்கள்
முன்பக்கம்

கிழக்கு இராஜகோபுரம், வான்மீகர், காமதேனு, திருக்குளம்

பின் பக்கம்


மேற்கு இராஜகோபுரம்



ஸ்ரீ விநாயகர்




அஸ்திரதேவர்



செல்லியம்மன்


பழனியாண்டவர்


நரசிம்மர்


சரபேஸ்வரர்



கமலவிநாயகர்



உற்சவர்




கமலவிநாயகா



கிழக்கு வாயில் கோபுரம்

வான்மீகி முனிவர்




ஆலயத்தின் உட்புறத் தோற்றம்




விஜயகணபதி, சுப்பிரமணியர் சந்நிதிகள்




தல விருட்சம்



திரிபுரசுந்தரி திருமண மண்டபம்




தியாகராஜஸ்வாமி திருமண மண்டபம்



மருந்தீஸ்வரர் (மூலவர்)




ஸ்ரீ விநாயகர்



திரிபுரசுந்தரி அம்மன்



திருஞானசம்பந்தர்　　திருநாவுக்கரசர்　　சுந்தரர்



மாணிக்கவாசகர்



கஜலக்ஷ்மி




அருணகிரிநாதர்



காலபைரவர்



வீரபாகு



வள்ளி, முத்துக்குமாரஸ்வாமி, தெய்வயானை



சண்டிகேஸ்வரர்



நான்முகன்




மகாவிஷ்ணு



தட்சிணாமூர்த்தி



துர்க்கை



தியாகர் (தனி அம்மன்)



பள்ளியறைச் சொக்கரும் அம்மனும்



திருஞானசம்பந்தர்



திருநாவுக்கரசர்



சுந்தரர்



மாணிக்க வாசகர்



சந்திரசேகரர்



அம்மன்




சுக்கிரவார அம்மன்




தியாகராஜர்




அம்மன்




திருநீலகண்ட நாயனார்



பிரதோஷ நாயகர்



விநாயகர்



நான்முகன்



மகாவிஷ்ணு



சண்டிகேஸ்வரர்



வள்ளி



சுப்பிரமணியர்



தெய்வயானை


நடராஜர்


சிவகாமி அம்மன்


அதிபத்த நாயனர்



குதிரை வீரன் (தூண் சிற்பம்)




அம்மனின் சிற்பம் (தூண்)



ஸர்ப்பத்தின் மீது நடனமாடும் விநாயகர் (தூண் சிற்பம்)



கண்ணப்ப நாயனர்



சூரியன்



வான்மீக முனிவர்

# திருவான்மியூர் திருத்தலம்

## 1. நுழைவாயில்

தருமமிகு சென்னை மாநகரின் தென் எல்லையாக விளங்கும் திருவான்மியூரில் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. அண்மைக் காலத்தில் திருவான்மியூருக்கு அருகேயும், அதனைச் சுற்றிலும் அமைந்துள்ள பகுதிகளும் மிகவும் வளர்ச்சியடைந்து வருவதால் இவ்வூருக்குச் சென்னையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அதிக அளவில்பேருந்துகள் விடப்பட்டுள்ளன. வருவாய்த் துறையின் கணக்கின்படி இப்பகுதி 140 சுரோத்திரியம் கிராமம் எனவும், மாநகராட்சியில் கணக்கின்படி 150வது வட்டம் என்றும், தபால்துறையின் கணக்கின்படி - 600 041 என்றும் வழங்கப்படுகிறது. பழைய ஏட்டுச் சுவடிகளையும், நூல்களையும் சேர்த்து வைத்துள்ள டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல் நிலையமும், ஆடல், பாடல், ஓவியம் போன்ற கலைகளைப் பேணும் கலாக்ஷேத்திரம் என்ற மையமும், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் ஜீவசமாதியும் இப்பகுதியில் உள்ளன.

இத்தகைய பெருமைகளையுடைய திருவான்மியூரைத் தலபுராணம் போற்றுகிறது. பிறவிக்கடலில் உழன்று தவிக்கும் பாமர மக்களின் அறியாமையை அகற்றி, வீடுபேறு அளிக்கவல்ல மருந்தீஸ்வரர் எழுந்தருளியுள்ளதால் இவ்வூர் துறவிகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. காசியில் உயிர் நீத்தாலும், திருவாரூரில் பிறந்தாலும், சிதம்பரத்தைக் கண்டாலும், திருவண்ணாமலையை மனதால் நினைத்தாலும் முக்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. திருவான்மியூரில் பிறந்தாலும், இறந்தாலும் முக்தி பெறலாம். இத்தலத்தைக் கண்ணால் கண்டாலும், மனதார நினைத்தாலும் வீடுபேறு அடையலாம். ஞானம், கல்வி, செல்வம் போன்றவற்றில் உயர்வடைந்துள்ள திருவான்மியூரை மூவுலகோரும் நாடுவர். கல்வியறிவு, செல்வம், நல்ல குடும்பம் ஆகியவற்றை விரும்பும் அன்பர்கள் திருவான்மியூர்

சென்றால் அவர்களது விருப்பம் நிறைவேறும். இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ள இத்தலத்திற்கு நிகர் எதுவுமில்லை.

எல்லா திருத்தலங்களும் பெருமைமிக்கதாக உள்ளபோதிலும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பதிகங்கள் பாடப் பெற்ற தலங்களைப் பெருமதிப்புடன் துதிப்பதுண்டு. இத்தலங் களைப்பாடல் பெற்ற தலங்கள் என வழங்குவர். பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 274 :- (சோழ நாடு 190 (காவிரியின் வடகரை 63; தென்கரை 127); பாண்டிய நாடு 14; நடுநாடு 22; இலங்கை 2; தொண்டை நாடு 32; வடநாடு 5; துளுவ நாடு 1; மலைநாடு 1; கொங்குநாடு 7) தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் திருவான்மியூர் 25வது தலமாகும்.

இன்றைய ஆந்திர மாநிலத்தின் ஒரு பகுதி, சென்னை மாநகர், செங்கல்பட்டு மாவட்டம், வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களின் சில பகுதிகள் ஆகியன இணைந்த நிலப்பரப்பு முற்காலத்தில் தொண்டை நாடு என வழங்கப்பெற்றது. இந்நாட்டின் எல்லைகளை ஒரு பழம்பாடல் தெரிவிக்கிறது:

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்குமவரியணி கிழக்குச் — சீர்களுயர்
தெற்குப் புனாகை திகழிருபது காத
நற்தொண்டை நாட்டெல்லை நாடு

தலபுராணத்திலுள்ள திருநாட்டுப்படலம் என்ற பகுதி தொண்டை நாட்டைச் சிறப்பிக்கிறது.

**திருவான்மியூர்த் தல மாண்பு**

எல்லா திருத்தலங்களும் வழிபாட்டிற்கு உகந்த போதிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் ஒருங்கே நிறைந்து விளங்கும் தலங்களுக்கு அதிகச் சிறப்பு அளிக்கப் படுகிறது. திருவான்மியூர் இந்த மூன்று அம்சங்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்கின்றது. அகத்தியருக்கு மூலிகைகளின் உபயோகம் பற்றிய பூரண அறிவையளித்த மருந்தீஸ்வரரைப் பிணியாளர்கள் உளமார வழிபட்டு நோய் நீங்கப் பெறுகின்றனர். சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் தனக்கேற்பட்ட நோயை நீக்குமாறு மருந்தீஸ்வரரை வழிபட்டதாகச் செவிவழிச் செய்தி கூறப்படு கிறது. பிறவியான பிணிக்கு மருந்தளித்துத் துன்பத்தையகற்றும்

நல் மருத்துவராகவே இப்பெருமானைத் தேவாரப் பாடல்களும் சிற்றிலக்கிய நூல்களும் போற்றுகின்றன. இங்குள்ள மூலமூர்த்தி தானாகவே உதித்த சுயம்புமூர்த்தியாக இருப்பது இப்பதிக்குரிய சிறப்பாகும். உலோகம், கல், மரம், மண் போன்ற பொருட்களால் தோன்றிய சுயம்பு மூர்த்திகள் சிற்ப, ஆகம விதிமுறைகளுக்கு உட்படமாட்டார்கள். தலங்களைத் தேவமுனிகள் உருவாக்கியவை (தேவரிஷி நிர்மித க்ஷேத்திரம்), மானுடர்களால் உண்டாக்கப்பட்டவை (மனுஷ்ய நிர்மித க்ஷேத்திரம்), சுயம்பு லிங்க க்ஷேத்திரம் என்று மூவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். இவற்றுள் சுயம்புலிங்க க்ஷேத்திரமே பிரதானமாகக் கருதப் படுகின்றது.

இத்தலத்தில் தியாகராஜரின் உலோகத் திருமேனி பிரசித்தி பெற்றது. பௌர்ணமி நாட்களிலும், வேறு சில விசேட நாட்களிலும் தியாகராஜரின் பதினெட்டு வகையான திருநடனக் காட்சிகள் சிறப்பாக நடைபெறும். அப்பர், சம்பந்தர் ஆகியோரின் பாடல்களைப் பெற்றுள்ள இத்தலத்தின் மீது பல தரப்பட்ட புலவர்களும், பக்திமான்களும் இலக்கியங்களை இயற்றியுள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் சிறந்த வழிபாடு தலமாக விளங்கும் பெருமை இத்தலத்திற்கு உண்டு. பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் இங்கு வெகு விமரிசையாக நிகழும். இத்தகைய பெருமைகளையுடைய இத்தலத்திலுள்ள திருக்கோயிலில் இவ்வட்டார மக்கள் பெறும் ஈடுபாடு கொண்டுள்ளனர். மாதாந்திர விழாக்களும், விசேட நாட்களும் உபயதாரர்கள் உதவியுடன் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.

# 2. திருக்கோயில் அமைப்பு

திருவான்மியூரின் மையப் பகுதியில் சுமார் $1^1/_2$ ஏக்கர் நிலப் பரப்பில் திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு, மேற்கு ஆகிய வாயில்களின் மீது இரு ஐந்து நிலை கோபுரங்கள் அழகிய வண்ணச் சுதை யுருவங்களைத் தாங்கியவாறு மிகப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. கிழக்குக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றவுடன் ஒரு சிறு நான்கு கால் மண்டபமும், அதனையடுத்துள்ள பலிபீடமும் தென்படுகின்றன.

**விநாயகர் :—**

தேம்படிந்துளருந் திங்கட் சேகரற் சேர்ந்து விண்ணிற்
றாம்படிந்தென்றும் விண்மீன்றங்கி வாழ்தகைமைமானுங்
கும்படிக்கோட்டைச் சூழ்ந்த பொறிமுகங்கொளு
முன்னோனை
தாம்படிந்துய்வாமென்று நலமெலா நண்ணப்பெற்றே
(தலபுராணம்)

கிழக்குக் கோபுரத்திற்கு நேர் எதிராக உள்ள விஜய கணபதியின் சந்நிதி 1985ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்கு முன்னர் கட்டப்பட்டது. இச்சந்நிதியில் விஜய கணபதி நான்கு திருக்கரங்களுடன் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார்.

இச்சந்நிதி மேலுள்ள விமானத்தில் பாலகணபதி, தருண கணபதி, பிங்கள கணபதி, உச்ஜிஷ்ட கணபதி, விஜய கணபதி, விக்ன கணபதி, க்ஷிப்ர கணபதி, ஊர்த்துவ கணபதி, ஹேரம்ப கணபதி ஆகிய திருவுருவங்கள் வண்ணச் சுதையால் அமைக்கப் பட்டுள்ளன. ஆலயத்தின் தெற்கு மூலையில் மடைப்பள்ளியை அடுத்து ஸ்ரீ விநாயகரின் சந்நிதி உள்ளது. இங்கு உருவத்தால் மாறுபட்ட மூன்று விநாயகர்களின் திருவுருவங்களைக்காணலாம். முருகப்பெருமானின் சந்நிதிக்கு முன்புறமும், தியாகராஜர் சந்நிதிக்கு முன்னரும், சுவாமி சந்நிதியின் வடமேற்கு முனையிலும் விநாயகரின் அழகிய திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. சுவாமி சந்நிதியின் கருவறையின் புறச் சுவரிலுள்ள கோஷ்டத்தில் நடன கணபதி தோன்றுகிறார்.

முருகப்பெருமான் :—

மகமாறுடைய விமயவர்கண் மகிழ்முலைகையழற்கீந்த
வகமாறுடைய வகரர்களையணி வேலதனுக் கிரையாக்கிச்
சுகமாறுடைய குஞ்சரியின்றுணைத் தோடமுலி மணந்திட்ட
முகமாறுடைய பெருமான்றன்முளரித்தாளை முன்னுதுமே''
(தலபுராணம்)

விஜய கணபதியின் சந்நிதியையடுத்து முருகப்பெருமானின் தனி சந்நிதி முன் மண்டபத்துடன் அமைந்துள்ளது. வேல், சேவல் கொடி ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தியவாறு நின்ற கோலத்தில் இவர் காட்சியளிக்கிறார். இருபுறமும் வள்ளி, தெய்வயானை ஆகிய இரு தேவியர் இச்சா, கிரியா சக்திகளாக விளங்குகின்றனர். இச்சந்நிதிக்கு முன்புறம் முருகப்பெருமானின் வாகனமான மயிலைக் காணலாம். மருந்தீசரின் சந்நிதி மண்டபத்தின் மேற்குப் பகுதியில் முத்துக்குமாரசாமிப் பெருமான் வள்ளி, தெய்வயானையுடன் காட்சி கொடுக்கிறார். உருவத்தால் இவர்கள் சிறியவர்கள். முருகருக்கு அருகே அவரது வாகனமான மயில் உள்ளது.

இனி தியாகராஜரின் சந்நிதியுள்ள மண்டபத்தினுள் நுழையலாம். இம் மண்டபத்தின் முடிவிலுள்ள சந்நிதியில் தியாகராஜர், அம்மன், தனி அம்மன் ஆகிய உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. இச்சந்நிதியின் வாயில் ஓரமாக விநாயகரும், அருகேயுள்ள தூண்களில் ஆஞ்சநேயரும், அவருக்கு எதிராகத் தண்டபாணியும் காட்சி தருகின்றனர். ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சார்த்தியும், இராமநாமத்தை எழுதி மாலையாக அணிவித்தும் வழிபடும் பக்தர்கள் ஏராளம்.

மூலவர் :—

இம்மண்டபத்திலுள்ள நுழைவாயில் வழியாக மருந்தீசர் சந்நிதி அமைந்துள்ள மண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்தின் மையப்பகுதியிலுள்ள சந்நிதி, கருவறை, அர்த்தமண்டபம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறையின் முன்னர் இருபுறமும் இரு துவாரபாலர்கள் கதாயுதத்தை ஏந்தியவாறு காவல் புரிகின்றனர்; மூலஸ்தானத்தில் மருந்தீஸ்வரர் சுயம்பு லிங்கமாக அருள் பாலிக்கிறார். முழுமுதற்கடவுளான சிவபெருமான் வடிவமின்றி அருவநிலையிலுள்ள போதிலும் அடியவர்களுக்கு அருள் வழங்கும் எண்ணத்துடன் 64 வகையான வடிவங்களை எடுத்துள்ளார். இவ்வாறு கண்ணுக்குப் புலப்படக் கூடிய உருவ வடிவத்தையும், கண்ணுக்குத் தென்படாத அருவத்

தையும் ஒரே அமைப்பில் காட்டும் அடையாளமே சிவலிங்கமாகும். இந்த உண்மையைச் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடுகிறது.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்,
(சாக்கிய நாயனார் புராணம்)

ஓம் என்ற பிரணவ மந்திரத்தைச் சிவலிங்கம் குறிப்பதாகத் திருமூலர் இயம்புகிறார்.

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம்
இலிங்கத்துள் வட்டம் நிறையு முகாரம்
இலிங்க மகாரம் நிறை விந்து நாதமே
(திருமந்திரம்)

சிவலிங்கம் அனைத்துப் பொருட்களும் அரனாரிடம் தோன்றி அவரிடமே ஐக்கியமாவதையுணர்த்துகிறது. சிவலிங்கம் மும்மூர்த்திகளின் இணைப்பாகவே விளங்குகிறது. இதன் கீழ்ப்பகுதி படைத்தல் தொழிலைப் புரியும் பிரம்மதேவனுக்குரியது. நவசக்திகளாகத் திகழும் இடைப்பகுதி திருமாலுக்கு உகந்தது. உச்சிபாகம் முழுமுதற் கடவுளான அரனாருக்கு உரியது. இத்தகைய பெருமைகளையுடைய சிவலிங்க வடிவில் சிவாலயங்களிலுள்ள மூலஸ்தானத்தில் சிவபெருமான் காட்சியளிக்கிறார்.

திருவான்மியூர் திருக்கோயிலிலுள்ள மூலவர் வான்மீகநாதர், பால்வண்ண நாதர், மருந்தீஸ்வரர், வேதபுரீஸ்வரர் போன்ற திருநாமங்களைப் பெற்றுள்ளார். வான்மீக முனிவரால் வழிபடப் பெற்றதால் வான்மீகநாதர் என்ற பெயர் ஏற்பட்டது. காமதேனு தினமும் பாலாபிஷேகம் செய்து துதித்ததால் பால்வண்ணநாதர் என்ற திருநாமம் நிலைத்தது. உலகில் தோன்றியுள்ள நோய்களின் தன்மையையும், அவற்றைத் தீர்க்கக் கூடிய மூலிகைகளின் இயல்புகளையும் அகத்திய முனிவருக்கு உபதேசித்ததால் மருந்தீஸ்வரர், ஔஷதீஸ்வரர் ஆகிய பெயர்கள் உண்டாயின. நான்கு வேதங்களும் பூசித்ததால் வேதபுரீஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது. பாற்கடலில் தோன்றிய அமுதத்தால் வானவர்கள் இவருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டதால் அமுதேசர் என்ற பொருளையுடைய மருந்தீசர் என்ற பெயர் நிலைத்தது. இத்தகைய பெருமைகளையுடைய மூலவர் சுமார் 1 அடி உயரம் உடையவர்; சற்றே சாய்ந்த தோற்றமுடையவர். காமதேனுவின் கால்குளம்புகள் உண்டாக்கிய வடுவை அவரது திருமேனியில் இன்றும் காணலாம்.

***பரிவார தெய்வங்கள்***

இம்மண்டபத்தின் தெற்குப் பகுதியில் விநாயகருடன் துவங்கி அனைத்து நாயன்மார்களும், தொகையடியார்களும் முறையாக வரிசையில் இடம் பெற்றுள்ளனர். இவ்வரிசையின் இறுதியில் சைவ சமயத்திற்குப் பெரும் தொண்டுகள் பல புரிந்த நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் ஆகியோரின் திருவுருவங் களையும் காணலாம். வலமாக வரும்போது மேற்குப் பகுதியில் நாகலிங்கங்களும் விநாயகரும், அவர்களையடுத்து சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் இடம் பிடித்துள்ளனர். இந்நான்கு உருவங்கள் கம்பீரமாகவும், வடிவழகுடனும் விளங்குகின்றன. மூடியுள்ள வாயிலையடுத்து கஜலக்ஷ்மி மலர்ச்செண்டை ஏந்தியவாறு அமர்ந்துள்ளார். இருபுறமும் குடமேந்திய யானைகளைக் காணலாம். இதனை யடுத்து வீரபாகு, அருணகிரிநாதர் ஆகியோர் இருபுறம் தோன்ற தேவியருடன் 'முத்துக்குமாரசாமிப் பெருமான்' காட்சியளிக் கிறார். வாள், கேடயத்துடன் தானைத் தலைவருக்குரிய மிடுக்குடன் வீரபாகுவும், ஓலைச்சுவடி, ஆணி ஆகியவற்றை ஏந்தியவாறு சாந்தமூர்த்தியாக அருணகிரிநாதரும் தோன்று கின்றனர். மண்டபத்தின் வடபகுதியில் உற்சவத் திருமேனிகள் அனைத்தும் பாதுகாவலாக வைக்கப்பட்டுள்ளன. இவர்களை யடுத்துள்ள சபையில் நடராஜரின் பிரம்மாண்டமான உலோகப் படிமத்தைத் தரிசிக்கலாம். அருகே சிவகாமசுந்தரியும், மாணிக்கவாசகரும் இடம் பெற்றுள்ளனர். சபையையடுத்து 108 சிவலிங்கங்கள் 12 வரிசைகளில் அமைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வரிசையின் நடுவிலுள்ள சில சிவலிங்கங்கள் மட்டும் சற்று பெரிதாக உள்ளன. இப்பகுதியின் இறுதியில் சூலம், உடுக்கை, சர்ப்பம் ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தியவாறு 'காலபைரவர்' நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். மண்ட பத்தின் கிழக்குப் பகுதியில் ஐந்து பெரிய இலிங்கங்கள் நிறுவப் பட்டுள்ளன. இவற்றுள் முதலாவதாகவும் உருவத்தால் பெரிய தாகவும் தோன்றும் கேதாரேஸ்வரரைத் தீபாவளி காலத்தில் கேதார கௌரி விரதமிருப்போர் பூசிப்பது உண்டு. அண்ணாமலையாரும் அபீதகுசாம்பாளும் (உண்ணாமலை யம்மை) இப்பகுதியில் உள்ளனர். இவ்வரிசையின் இறுதியில் சூரிய பகவான் நின்றகோலத்தில் காட்சி கொடுக்கிறார். இக்கோயிலில் நவகிரகங்கள் இடம் பெறவில்லை.

பிற பிரதான சிவாலயங்களிலுள்ளது போலவே இக்கோயி லிலும் கருவறையின் புறச்சுவர்களிலுள்ள கோஷ்டங்களில் சில உருவங்களை இடம்பெறச் செய்துள்ளனர், வடபுறச் சுவரில்

முதலாவதாக எருமைத் தலையையுடைய மகிஷனை ஒடுக்கும் கோலத்தில் சூலாயுதடாணியான துர்க்கை எழிலுருவத்துடன் காட்சியளிக்கிறார். செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளிலும், வேறு விசேட நாட்களிலும் அதிக அளவில் பக்தர்கள், குறிப்பாக மகளிர் துர்க்கையம்மனை வழிபடுவதுண்டு. பக்தர்களின் உபயத்தில் துர்க்கையம்மனுக்குச் சந்தனம், மஞ்சள் போன்ற வற்றால் காப்பு அணிவித்தலும், புதிய மேலாடையைச் சார்த்துவதும் உண்டு. எலுமிச்சை பழத்தின் மூடியில் எண்ணெய், திரி ஆசியவற்றை இட்டுத் தீபம் ஏற்றி வழிபடும் மகளிர் ஏராளம். துர்க்கையின் சந்நிதிக்கு எதிராகக் கோமுகிக்கு அருகே சண்டேஸ்வரர் தியானத்தில் அமர்ந்தவாறு தோன்று கிறார். இதே வரிசையில் சற்று தள்ளியவாறு மற்றொரு சண்டேஸ்வரரின் உருவம் தனியாக உள்ளது. இவ்வுருவம் அப்பைய தீக்ஷிதரைக் குறிப்பிடுவதாக ஒரு கருத்து உள்ளது.

அடுத்த கோஷ்டத்தில் நான்முகன் நின்றகோலத்தில் அட்சமாலை, கெண்டி ஆகியவற்றை ஏந்தியவாறு காட்சியளிக் கிறார். கிழக்கு நோக்கியுள்ள கோஷ்டத்தில் மகாவிஷ்ணு சங்கு, சக்கரங்களை ஏந்தியவாறு நின்ற கோலத்தில் தோற்றம் அளிக்கிறார். தென்புறக் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கலாம். சிங்கங்களால் தாங்கப்படும் சிறு மண்டபம் போன்ற அமைப்பில், கல்லால மரத்தின் அடியில் அமர்ந்தவாறு இரு புறங்களிலும் உட்கார்ந்துள்ள சனகாதியர்களுக்கு ஞான உபதேசம் நல்கும் நல்லாசிரியராக இவர் உருக்கொண்டுள்ளார். தென்முகக் கடவுளின் காலடியில் 'அபஸ்மாரம்' என்ற அரக்கன் வீழ்ந்த நிலையில் காட்சியளிக்கிறான். அஞ்ஞானத்தை வென்று மெய்ஞ்ஞானம் உயரிய நிலையிலுள்ளதை இந்த உருவமைப்பு வெளிப்படுத்துகிறது.

சிறுமண்டபத்தின் தூண்களில் பிட்சாடனர் போன்ற சிறு சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தில் தட்சிணாமூர்த்தியின் பெருமையை வெளிப்படுத்தும் பாடலை இச்சந்நிதிக்குக் கீழ் எழுதியுள்ளனர். அடுத்த கோஷ்டத்தில் விநாயகரின் அழகிய திருமேனி சிற்ப வடிவில் அமைந்துள்ளது.

மருந்தீசரை உளமாரத் துதித்துவிட்டு மண்டபத்தை விட்டகன்று வெளிப் பிரகாரத்தை வலம் வரலாம். தென்மேற்கு மூலையில் சில நாகர்களின் உருவங்கள் சிறு சந்நிதியில் இடம் பெற்றுள்ளன. மேற்குக் கோபுரத்திற்கு நேர் எதிராகக் கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவற்றைக் காணலாம். இங்கு

உள்ள உட்கதவு பிரதோஷ காலத்தில் திறக்கப்படும். அப்போது இவ்வாயிலுக்கருகேயுள்ள நந்திதேவருக்கு அபிஷேக மும், விசேட பூஜைகளும் நிகழும்.

**தல விருட்சம் :—**

பிரகாரத்தை வலம் வரும்போது கோயிலின் வடமேற்கு மூலையில் வாகன மண்டபமும் அதனருகே சிறு நந்தவனமும் இருப்பதைக் காணலாம். இதே இடத்தில் தலவிருட்சமான வன்னிமரம் உள்ளது. மரத்தைச் சுற்றி உயர்த்த மேடை உள்ளது. மேடையின் நான்கு புறங்களிலும் உள்ள சுற்றுச் சுவர்கள் மீது நந்தியின் உருவங்களும், மரத்தினருகே பக்தர்கள், பிரார்த்தனைகளுக்காகச் செலுத்திய காணிக்கைப் பொருட்களும், விநாயகர், நாகர் போன்ற திருவுருவங்களும் உள்ளன. மேடை மீது ஏறாமல் அதனைச் சுற்றி வலம் வரவும் பாதை போடப்பட்டுள்ளது. மேடையின் மீது ஏறியவாறு சுற்றி நோக்கினால் கோயிலின் கோபுரங்கள், விமானங்கள் ஆகியவற்றை ஒருங்கே தரிசிக்கலாம்.

ஆதியில் சுயம்புவாகத் தோன்றிய லிங்கங்கள் மரங்களினடி யிலேயே கோயில் கொண்டிருந்தன. காலப்போக்கில் வனங் களையழித்து நகரங்களை உருவாக்கியபோது பிரம்மாண்டமான ஆலயங்கள் தோன்றின. அப்போது ஆதியில் தோன்றிய லிங்கமும் அதற்கு நிழல் அளித்த மரமும் பாதுகாக்கப்பட்டன. அத்தகைய மரங்களே காலப்போக்கில் தலவிருட்சம் என்று போற்றப்பட்டன. ஆதியில் திருவான்மியூரில் வன்னி மரத்தடியில் சுயம்புவாக உதித்த லிங்கத்தை வான்மீக முனிவர் கண்டெடுத்து வழிபட்டதாலும், அகத்தியருக்கு இதே வன்னிமரத்தடியில் சிவபெருமான் திருமணக் கோலத்தைக் காட்டியதாலும் வன்னிமரமே இங்கு தலவிருட்சமாகப் போற்றப் படுகிறது. பங்குனிப் பெருவிழாவின் ஒன்பதாம் நாளன்று அகத்தியருக்குத் திருமணக் கோலத்தில் காட்சியளித்த நிகழ்ச்சி நினைவுகோரப்படுகிறது. ஆனால் தி. சு. வேலுசாமிபிள்ளை இயற்றிய ''தேவார சிவத்தல வெண்பா'' என்ற நூலில் புன்னை மரம் தலவிருட்சமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அம்மன் சந்நிதி :—**

கிழக்குக் கோபுரத்தின் அருகே தெற்கு நோக்கியவாறு அம்மன் சந்நிதி ஒரு தனிக்கோயிலாகவே தோற்றமளிக்கிறது. இச்சந்நிதியில் முன்மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபத் துடன் கூடிய கருவறை, பள்ளியறை, சக்கிரவார அம்மன் சந்நிதி ஆகியன உள்ளன. முன்மண்டபம் ஒரு அற்புதமான சிற்பக்கூட

மாகும். மகாமண்டபத்திலும் பல அற்புதமான சிற்பங்கள் உள்ளன. கருவறையில் திரிபுரசுந்தரி அம்மன் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் அருள் நல்குகிறாள். இருகரங்களில் அங்குசமும், பாசமும், மிளிர்கின்றன. மற்றிரு கரங்கள் அபயம் அளிக்கும் நிலையிலுள்ளன. இந்த அம்மனுக்கு முதலில் சொக்க நாயகி என்றும் பெயர் இருந்தது. விசேட காலங்களில் சந்தனம், மஞ்சள் போன்ற பொருட்களால் காப்பிடப்பட்டுக் கண்ணைப் பறிக்கும் அணிகள், உடைகள் ஆகியவற்றுடன் ஜொலிக்கும் அன்னையைக் காணும் கண்களே பாக்கியம் செய்தவை. அன்னைக்கு முன்னர் சிம்மவாகனம் உள்ளது. அருகே ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் கிழக்குப் பகுதியில் உற்சவரான சுக்கிரவார அம்மன் தனி அறையில் காட்சி தருகிறாள். வெளிமண்டபத்தூண் ஒன்றில் தவம்புரியும் காமாட்சி யன்னையின் உருவம் உள்ளது. அம்மன் கோயிலுக்கு அருகே ஆலய அலுவலகம் உள்ளது.

**வெளிப்புறம் :—**

இவ்வாலயத்தின் கிழக்கு வாயிலுக்கு அருகே சித்திரைத் திருக்குளமும் அதன் கரையில் இராமநாதர் (லிங்கம்) சந்நிதியும் உள்ளன. திருவாதிரை நாளன்று இப்பகுதியில் அம்பலவாணரின் நடனம் நிகழும். கிழக்குக் கோபுரத்திற்கு நேர் எதிராக முழுமையாகக் கட்டி முடிக்கப்படாத ஒரு கோபுரம் எலும்புக் கூடு போலக் காட்சி தருகிறது. இதனையடுத்து 16 கால் மண்டபமும், பவனி மேடையும் அமைந்துள்ளன. பவனி மேடையில் பங்குனித் திருவிழாவின்போது நான்கு நாட்களுக்குத் தியாகரின் நடனம் நடைபெறும்.

**சுற்றுக்கோயில்கள் :—**

ஆலயத்தைச் சுற்றி நான்கு மாடவீதிகள் முறையாக அமைந்துள்ளன. அவற்றின் எல்லைகளாக நவசந்திகள் என்ற ஒன்பது முனைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாடவீதிகளின் முனைகளில் விநாயகரின் சிறு கோயில்கள் உள்ளன. இவ்வூரின் கிராம தேவதைகளான புத்திராங்கண்ணியம்மன், செல்லியம்மன் ஆகியோர்களின் சிறு கோயில்கள் அருகே அமைந்துள்ளன. இவ்வூருக்குப் பெயரை வழங்கிய வான்மீக முனிவருக்கான சிறு கோயில் மகாபலிபுரம் வரை செல்லும் கடற்கரைச் சாலையின் புறத்தே அமைந்துள்ளது.

**தல விநாயகர் :—**

முற்காலத்தில் இத்தலத்திற்குரிய விக்னேஸ்வரர் திருமுடி விநாயகர் என்ற பெயருடன் கோயிலின் வாயிலுக்கருகே கோலம் கொண்டிருந்ததாகக் கூறுவர். அருணகிரிநாதர் திருவான்

மியூருக்கு வருகை புரிந்தபோது இப்பெருமானே வழிகாட்டியாக விளங்கினாராம். திப்புசுல்தானின் காலத்தில் இவரே வாளால் வெட்டுப்பட்டதாகவும் ஒரு செய்தி உள்ளது. பின்னர் இவ்வுரு வத்தைச் செப்பனிட்டனராம். தற்போது 'துண்டிமரப் பிள்ளையார்' என்ற பெயருடன் ஆலயத்தின் தென்புறத்தில் இவர் கோலம் கொண்டுள்ளார்.

**தீர்த்தங்கள் :—**

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத தண்ணீரை யளிக்கக்கூடிய ஆறு, ஏரி, நீர் நிலைகள் ஆகியவற்றின் கரைகளில் அதிகாலம் முதல் நாகரீகங்கள் தோன்றின. இயற்கையின் சக்தி களை இறைவனாகப் போற்றி வந்த மக்கள் தண்ணீரையும் தெய்வத்தன்மை வாய்ந்ததாக வழிபட்டு வந்தனர். ஆலயங் களைச் சுற்றியமைந்துள்ள குளம், ஏரி, ஆறு, கிணறு போன்ற வற்றைப் புண்ணியம் நிறைந்த தீர்த்தங்களாகப் போற்றும் வழக்கம் இதன் பின்னரே தோன்றியது.

திருவான்மியூரிலுள்ள தீர்த்தங்களைச் சிவபெருமானே தனது சடையிலிருந்து வெளிப்படுத்தியதாகத் தலபுராணம் இயம்பு கிறது. வான்மீக முனிவருக்கு அரனார் காட்சியளித்தபோது சடையிலுள்ள கங்கையிலிருந்து சிந்திய ஐந்து நீர்த்துளிகள் ஜென்ம நாசனி, காமநாசனி, பாபநாசனி, ஞானதாயினி, மோட்ச தாயினி என்ற ஐந்து தீர்த்தங்களாக உருவாயின. கிழக்கு வாயிலி னருகே அமைந்துள்ள சித்திரைத் திருக்குளமே ஜென்மநாசனி யாகும். இதில் இந்திரனும், இரட்சசுவும் நீராடி வழிபட்டு நற்கதியடைந்தனர். ஆலய மடைப்பள்ளியில் உள்ள கிணறு காம நாசனியாகும். இதில் நீராடிப் பூசித்த சந்திரன் சாப விமோ சனம் பெற்றான். கிழக்கு வாயிலுக்குச் சற்று தள்ளியமைந் துள்ள பெரிய திருக்குளமே பாபநாசனி எனப்படும். பார்த்த சாரதி இதில் மூழ்கி வழிபட்டுப் பேறு பெற்றார். ஞானதாயினி என்ற இத்தீர்த்தம் 'மங்கல ஏரி' என் பெயருடன் வான்மீக முனிவரின் சிறு கோயிலுக்கே அருகே இருந்தது. அண்மையில் இந்த ஏரி மூடப்பட்டது. அம்மன் சந்நிதிக்கு எதிரேயுள்ள கிணறு மோட்சதாயினியாகும். இக்கிணற்று நீரே சுவாமியின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆலயத்திற்குக் கிழக்கில் ஜென்மநாசனியும், தெற்கில் காமநாசனியும், மேற்கில் பாபநாசனியும், வடக்கில் ஞானதாயினியும் அமைந்துள்ள தாகவும், இவற்றிற்கு நடுவில் மோட்சதாயினி உள்ளதாகவும் தலபுராணம் செப்புகிறது. இவை தவிர சூரியன், யமன், நான் முகன் ஆகிய மூவரும் உண்டாக்கிய தீர்த்தங்கள் பற்றிய செய்தி களும் தலபுராணத்தில் இடம் பெற்றுள்ளன.

# 3. தலவரலாறு

***திருவான்மியூர்த் தலபுராணம் :—***

வட மொழியில் முதலில் தோன்றிய திருவான்மியூர்த் தல புராணத்தைத் தமிழில் இயற்றியவர் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர (யதீந்திரர்) முதலியார். இந்த நூலில் 19 படலங்களும், 1022 விருத்தங்களும் உள்ளன, 1895 ஆம் ஆண்டு (மன்மத வருடம், வைகாசி மாதம்) சென்னை இந்து யூனியன் அச்சுக்கூடத்தில் இந்நூல் முதலில் அச்சாகியது. தற்போது மூல நூலின் சில பழைய பிரதிகளே நூலகங்களில் உள்ளன. இதனை உரை நடை வடிவில் சுருக்கமாக அவ்வப்போது வெளியிட்டுள்ளனர்.

தல புராணத்தில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. அந்நூலிலுள்ள சில பாடல்களும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

***வான்மீக முனிவர் அருள்பெறுதல்***

பிரமதேவனின் நேர்வழித் தோன்றலான பிரசேதச முனிவர் கானகத்தில் ஒரு தவக்குடிலில் வாழ்ந்து வந்தார். குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு போல அவருக்கு ஒரு மகன் இருந்தார். கானகத்தில் வசித்துவந்த வேடுவர்களுடன் பழகி அவர்களுக்கே உரிய உயிர்க்கொலை, களவு, வழிபறி போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார். ஒருமுறை வேட்டையிலிருந்து திரும்பிய முனிகுமாரரின் கண்களுக்கு ஒரு அபூர்வமான காட்சி தென்பட்டது. தலைகீழாக நின்றவாறு ஒரு தவசி தவத்தில் மூழ்கியிருந்தார். முனிவர்களை அறவே வெறுத்த முனிகுமாரர் அவர்மீது அம்பு எய்தபோது அக்கணை இரண்டாகப் பிளந்தது. தவசியைக் கொல்ல எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் வீணாகப் போகவே முனிகுமாரருக்கு அவர்மீது பயம்கலந்த பக்தி உண்டாயிற்று. சிறிது மனமாற்றமும் ஏற்படவே முனிவர் தவத்தை முடிக்கும்வரை காத்திருந்தார்.

நிஷ்டையிலிருந்து விழித்த முனிவர் நடந்தவற்றையும், முனிகுமாரரின் மனநிலையையும் அறிந்தார். முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பலனாக இப்பிறவியில் இந்த வேடருக்கு நற்கதி கிடைக்கும் என்றும் உணர்ந்தார். ஐம்புலன்களையும் அடக்கித் தவம்புரியும் வழியை முனிகுமாரருக்குக் கற்றுக் கொடுத்தார். கங்கையின் கரையில் முனிகுமாரர் ஆசிரமம் அமைத்துக் கடுமையான தவத்தை இயற்றி வந்தார். அவரைச் சுற்றிச் செடி கொடிகள் மட்டுமின்றிப் புற்றும் வளர்ந்தது.

இராமகாதை தோன்றிய வரலாற்றைச் சத்தியலோகத்தில் நான்முகன் மூலம் நாரதர் அறிந்தார். பூவுலகில் நான்கு வானரங்கள் நாள்தோறும் உணவுக்கு முன்னர் தவறாமல் சிவபூஜை புரிந்துவந்தன. சிவராத்திரியின் மகிமையையும், அதற்குரிய விரதங்களையும் அறிந்த அந்த வானரங்கள் சிவராத்திரி வழிபாடுகளைப் புரிய விரும்பின. அன்று புலத்திய முனிவர் சிவாலயத்தின் கதவை அடைத்துக்கொண்டு உட்புறத்தில் சிவபூஜை புரிந்து வந்தார். மூன்று ஜாமங்கள் ஆகியபோதும் கதவு திறக்கப்படவில்லையாதலால் கோபமுற்ற வானரங்கள் கதவைத் திறந்து உள்ளே சென்றன. தவம் தடைப்பட்டதால் கோபமுற்ற புலஸ்தியர் நான்கு வானரங்களும் உடனே உயிர் துறக்குமாறு சபித்தார். தாங்களே புலஸ்தியரின் குலத்தை நாசமாக்குவதாகப் பதில் சாபம் அளித்துவிட்டு வானரங்கள் உயிர் துறந்தன. மறுபிறவியில் புலஸ்தியர் இராவணனாகவும், வானரர்கள் சுக்ரீவன், அங்கதன் போன்றவர்களாகவும் அவதரித்தன. பிரதோஷ காலத்தில் சிவ வழிபாட்டில் ஈடுபடாமல் அலட்சியமாக இருந்த மகாவிஷ்ணு பூமியில் இராமராக அவதரித்தார்.

புற்றில் தவம்புரிந்து வந்த வான்மீக முனிவர் நாரதர் மூலம் இராமகாதையை அறிந்தார். உலகினருக்கு நன்மை தரக்கூடிய அக்காதையைக் கற்றோர் மெச்சும் அற்புதக் காப்பியமாக வான்மீக முனிவர் வடித்தார். ஒருமுறை சிறந்த சிவபக்தரும், சிரஞ்சீவியுமான மார்க்கண்டேய முனிவரைச் சந்தித்த வான்மீக முனிவர் பலகாலம் தான் யோக நிலையில் தவமியற்றிய விவரங்களை உரைத்தார். ''பல்லாண்டுகள் மௌன நிலையில் தவமிருப்பதால் பெரிய பயன் இல்லை. மலை, மரம், செடி, கொடி போன்ற உயிரினங்களும் இவ்வாறே மௌனநிலையில்'' இருக்கின்றன. ஒருநாள் நடத்தும் சிவபூஜைக்கு இது ஈடாகாது, என்று கூறிய மார்க்கண்டேயர் சிவபூஜையின் மகத்துவத்தை விவரித்தார்.

கோடியா யிரமாண்டு குறித்தயோ குற்றிடினு
நாடியே மகநூறு நலம் பெறவே யிழைத்திடினுந்
தேடி வானவர் பூசை செய்திடினுமறைபல்ல
பாடியே புரியுமெங்கள் பரன்பூசைக் கொவ்விடுமோ

அரிய பசுக்கதை கடமையாயிரமாயிரமாகத்
தெரிவுறவே பாடிடினுந் தேர்ந்தடைவ திலையொன்றுங்
கரிய மிடற்றுக் கடவுட் கண்ணுதலாம் பதிசரிதம்
புரிபவருக்கேற்ற வொரு புண்ணியந்தானுண்டு கொலோ.

குடங்கையினீருறக் கொண்டு கூவிள நற்றழை யொன்றாற்
றடங்கலந்த சிவலிங்கந்தனைப் பூசை புரிபவரே
மடங்கொன்று மறலிபய மகிதலத்திலே யொரீஇ
நடங்குலவு நம்பர மனல்லடியைச் சாருவரால்

எவரேனுஞ் சிவபூசை யியற்றாமே யூணயர்வார்
பவங்கோடிப் பிறப்பேற்றுப் பசியாந்தீப் பிணியுழன்றங்
கவமானத் துடனிறந்தங் கருநரகத் துள்ளழுந்தி
யவமேறுந் தீமைகளை யம்மம்ம வனுபவிப்பார்.

கண்ணுதலார் சிவலிங்கங் காண்டலொடுங் காதலிப்போ
ரண்ணல் சாதனமாதியன்புமிகப் பூண்டிடுவா
ரெண்ணரிய வடியவரை யெதிர்கொண்டங் குபசரிப்பார்
விண்ணவரும் போற்றிடவே விமலனடி மேவுவரால்

சங்கரனார் சிவலிங்கந்தன்பாலி லெஞ்ஞான்றும்
பொங்குவிழி நீர் சொரியப் பூசை புரியடியவரா
மங்கள மாரவர் வடிவை வண்மையுறத் தரிசிக்கி
னிங்குலகிற் சென்மவலை யிடைப்புக்கு வாழ்வர் கொலோ''

தான் உய்வதற்கு ஏற்ற வழியைக் காட்டுமாறு வான்மீகர் வேண்டினார். பூவுலகைச் சுற்றி வருமாறு கட்டளையிட்ட மார்க்கண்டேயர், அவ்வாறு சுற்றும்போது ''யான் இங்கு இருக்கிறேன்'' என்ற அசரீரி ஒலி கேட்கும் இடத்தைச் சிறந்த சிவத்தலமாகக் கொண்டு வழிபடுமாறு அறிவுரை அளித்தார். அவ்வாறே க்ஷேத்திராடனம் புரிந்து வரும்போது, கீழைக் கடற்கரைக்கு அருகேயுள்ள ஒரு இடத்தில் அசரீரி ஒலி எழுந்தது. அந்த இடத்திலுள்ள சுயம்பு லிங்கத்தை வான்மீகர் வழிபட்டு வரும்போது ஒருமுறை வன்னி மரத்தடியில் சிவபெருமான் சகல பரிவாரங்களும் சூழக் காட்சியளித்தார்.

"மங்கள நாயக போற்றி; மங்கையொரு பாலமரு மணாள
போற்றி,
கங்கை செஞ்சடையதனிற்கலை மதியம் பூண்டிலகு
கபால போற்றி
மங்கை யொளிர்மான் மழுவிலை பாசமணிந்தருளுமரனே
போற்றி
பங்கயன் மான் முதலோர்கள் கழல் விழையப் பார்த்த
பரம்பரம போற்றி",

என்று போற்றித்துதித்த வான்மீக முனிவர் சில கோரிக்கைகளை ஈசனிடம்விடுத்தார். "இறைவா! தெரிந்தோ தெரியாமலோ நான் செய்த தவறுகளை மன்னித்து அருள்புரியுங்கள். தங்கள் திருவடி என்ற மலரில் எனது மனம் என்ற வண்டு அமர்ந்து இறையருள் என்ற மதுவைப் பருக விரும்புகிறேன். வீடு பேறு தரக்கூடிய தங்களதுபாதாரவிந்தங்களை நான் பிறதவசிகளுடன் தொடர்ந்து வழிபட அருள்வீராக. தங்களை நினைத்து வழிபட்டவுடன் எனது பாவங்களை நீக்கிய இத்தலம் என் பெயரால் திருவான்மியூர் என்று வழங்கப்பட வேண்டும். இதே பதியில் தாங்கள் உமையன்னையோடு நிரந்தரமாகக் கோயில் கொண்டு தங்களை நாடும் அன்பர்களுக்கெல்லாம் அருள்புரிய வேண்டும்."

ஈசனின் சிரசிலுள்ள கங்கையிலிருந்து சிந்திய ஐந்து நீர்த்துளிகள் ஐந்து தீர்த்தங்களாக உருவெடுத்தன. வடக்கிலுள்ள ஞானதாயினியில் நீராடித் தன்னை என்றும் வழிபடுமாறு மாதொருபாகன் கட்டளையிட்டார். ஆண்டுதோறும் இதே நாளில் (பங்குனி மாதப் பௌர்ணமி) தன்னை வழிபடுவோருக்கு நற்கதியளிப்பதாகவும் ஈசன் உறுதியளித்தார். இச்சம்பவத்திற் கேற்ப பங்குனி மாதத்தில் பௌர்ணமியை இறுதி நாளாகக் கொண்டு பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. திருவொற்றியூர் தல புராணத்திலும் வான்மீக முனிவர் திருவான்மியூரில் வழிபட்டு இறையருள் பெற்ற சம்பவம் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

### இரட்சசு என்ற வானரன் அருள் பெறுதல்

நான்முகனின் சத்தியலோகத்திலுள்ள கலியாண தீர்த்தம் புனிதம் வாய்ந்தது. அதன் புனிதத்துவம் கெடாமலிருக்கும் பொருட்டு அத்தீர்த்தத்தில் நீராடும் ஆண்மகன் பெண்ணாகவும், பெண் மகள் ஆணாகவும் மாறுவார்கள் என்று நான்முகன்

சாபம் அளித்திருந்தார். நான்முகனின் அம்சமாகத் தோன்றிய இரட்சசு என்ற வானரன் இதனையறியாமல் கலியாண தீர்த்தத்தில் இறங்கியதால் பெண் உருவம் அடைந்தான். இதனால் வெட்கமும், வேதனையும் அடைந்த இரட்சசு அருகிலுள்ள காளிதேவியின் கோயிலில் வழிபட்டான். உரிய காலத்தில் நான்முகன் நல்வழிகாட்டும் வரை ஆறுமாதம் ஆணாகவும், ஆறு மாதம் பெண்ணாகவும் உருவம் மாறும் என்று காளி வரமளித்தாள். இவ்வாறு உருமாறி அல்லலுற்ற இரட்சசுவை நான்முகனின் கட்டளையின் பேரில் நாரதர் பூவுலகில் திருவான்மியூரிலுள்ள ஜென்மநாசனியில் நீராடி அரனாரைத் துதிக்குமாறு வழிகாட்டினார். அவ்வாறே இரட்சசு நீராடியபின்

"உலகநாயகனே போற்றி யும்பர் தம்பிரானே போற்றி
யிலகுமான் கணிச்சியேந்து மிணைமலர்க்காத்தாய் போற்றி
குலவிய வருந்த வத்தர் குறைதவி ரெந்தாய் போற்றி
யலகில்சீ ரைய போற்றி யண்ணலே போற்றி போற்றி

மங்கைநாயகனே போற்றி மறைமுதற் பொருளே போற்றி
திங்களும் பணியும் வைகுந்திகழ் சடையாள போற்றி
பொங்கு வெண்டலையணிந்த புண்ணிய முதலே போற்றி
சங்கரா போற்றி போற்றி சதாசிவ போற்றி போற்றி"

என்று பாடித் துதித்தான். அரனார் அவன் முன்தோன்றி அருளினார். சுயஉருவம் பெற்றபின் இரட்சசு சத்தியலோகம் திரும்பினான்.

**பார்த்தசாரதி வழிபட்ட வரலாறு**

துவாபரயுகத்தில் பூமியின் பாரத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் கண்ணன் என்ற மானிடனாக அவதரித்த திருமால் பலவகையான விளையாட்டுக்களையும், வீரதீரச் செயல்களையும் புரிந்தார். பார்த்தனுக்குச் சாரதியாக நின்று யுத்த அரங்கில் தேரைச் செலுத்தினார். எதிரில் ஆசான், உறவினர், ஆகியோரைக் கண்டு பாசவயப்பட்டுப் போரிட மறுத்த தனஞ்ஜயனைப் பகவத் கீதை உபதேசித்துப் போரில் ஈடுபடச் செய்தார்.

குடமுறு வானமுற்றுங் குலவிய வானாமாபோன்
றிடமிகு சீவகோடி செறியுமப் பிரமமாகு
மடமையி னிஃதோராதார் மயங்கியே பேதித் தென்றும்
புடவியிற் கருமத்துள்ளாப் புந்தி கெட்டழிவரன்றே

பிரமமே நானுமாவன் பிரமமே நீயு மாவை
பிரமமே நின் கைவாளி பிரமமே யொன்னலார்கள்
பிரமமே சமரதாகும் பிரமமே வெற்றியாகும்
பிரமமே தோல்வியாகும் பிரமமே யாவுங் காண்டி

ஏகமதுற்ற வந்த வினையிலிப் பிரமந்தானே
போகம தாக நின்று பொலிந்திடு மதனையூட்டு
மாகலி னேனோ வாளாயடர் தரு தட்டிற் சாய்ந்து
மோகமதுற்றாய் போரில் முனைகுவாய் முன்னமென்றான்.

கீதோபதேசத்தால் மனம் தெளிந்த அருச்சுனன் போரில் முழு மனதுடன் ஈடுபட்டான். பார்த்தசாரதியின் உதவியுடன் பாண்டவர்கள் போரில் வென்றனர். போர்முடிந்து திரும்பும் போது கண்ணன் தனக்குச் சிவதீட்சையளித்த உபமன்னியு முனிவரைச் சந்தித்தார். "கண்ணபிரானே! உலகின் நன்மைக்காகவே அவதரித்த தாங்கள் அக்காரணத்தை உத்தேசித்து பாரதப் போர் நடக்கக் காரணகர்த்தாவாக இருந்தீர்கள். இருப்பினும் அப்போரில் ஏற்பட்ட உயிர்க் கொலைகளுக்கும், வஞ்சகச் செயல்களுக்கும் தாங்களே ஓரளவு பொறுப்பேற்க வேண்டும். மேலும் தாங்கள் உபதேசித்த கீதையின் உட்பொருளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் அதனை அப்படியே மானுடர்கள் பின்பற்றத் துவங்கினால் முயற்சி, தெய்வபக்தி, இறையுணர்வு ஆகியவற்றைப் புறக்கணிக்க நேரிடும். இத்தகைய செயல்களுக்குரிய பாவம் தங்களையே சாரும். இதனைப் போக்குவதற்குச் சிவலிங்க வழிபாடே முறையான வழி. வாயால் சொல்ல முடியாத அளவு பெருமையுடைய பாவநாசனி என்ற தீர்த்தம் திருவான்மியூரி லுள்ளது. அதில் நீராடி அரனாரை வழிபட்டால் உனது பாவம் நீங்கும்" என்று முனிவர் அருளினார்.

"எண்ணரிய பவமனைத்துமிம்மையினே யொழிந்திடற்
கங்கிருள் சேர்கண்டத்
தண்ணலார் சிவலிங்கத் தரிசனமே யல்லாமலவனி மீது
விண்ணுழையும் வேறுவகை விரகொன்றை யெவரேனும்
விளம்பக் காணேன்

சிறந்த திருவான்மியூர்ப் பவநாசத்தடப் பெருமை
செப்பற்பாற்றோ
திறந்திகழு மருந்தீசன் றிருப்பெயரைக் கேட்டவருந்
தெய்வமாவ
ரறந்திகழு நின்றனக்கிங்குரைத் திட்ட
வெளியேனுமனகமுற்றே
னிறந்ததையும் புயலவண்ண வொல்லை
சிவேணத்திசையினேடு சென்றான்''

உபமுன்னியு முனிவரின் உபதேசப்படியே பார்த்தசாரதி திருவான்மியூரிலுள்ள பாவநாசனியில் நீராடி அரனாரை வழிபட்டார். சிவபெருமானும் நேரில் காட்சியளித்து அருளினார். ''கண்ணா! மண்ணின் பாரத்தைக் குறைக்கத் தாங்கள் புரிந்த செயல்கள் உலக நன்மைக்காக இருந்த போதிலும் அது நலஞ்சேர் வழி அன்று. வேதவுண்மைகளை அதன் உண்மையான பொருளில் உணர்த்தாமல் தனஞ்சயனை வேறு வழியில் செல்லச் செய்தீர்கள். இதனால் தங்களைப் பற்றிய பாவம் நீங்கியது''. கண்ணபிரானும் அண்மையிலுள்ள அல்லிக்கேணி என்ற இடத்தில் தங்கியவாறு அரனாரைப் பூசிக்கலானார். அப்பகுதி இன்று திருவல்லிக்கேணி என வழங்கப்படுகிறது. திருவான்மியூரில் பங்குனித் திருவிழாவின் மூன்றாம் நாளன்று இரவில் பார்த்தசாரதி சிவனாரின் அருளைப் பெற்ற சம்பவம் நினைவுறுத்தப்படுகிறது.

### சந்திரன் பாபவிமோசனம் பெறுதல்

அத்திரி முனிவரின் மைந்தனான சந்திரன் சிறு பிராயம் முதல் பேரழகனாகத் திகழ்ந்தான். உரிய காலத்தில் கல்வி, கேள்விகளில் பயிற்சி பெற வானவர்களின் ஆசானான வியாழ பகவானிடம் சந்திரனை அத்திரி முனிவர் அனுப்பினார். வியாழ பகவானும் சந்திரனைத் தனது இல்லத்தில் பிரியமுடன் தங்கச் செய்து கல்வி கற்பித்து வந்தார். ஒருமுறை விருத்திராசுரனை வஞ்சகமாகக் கொன்றதால் பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப் பெற்ற இந்திரன் அப்பழியிலிருந்து விடுபட அசுவமேத யாகத்தை நடத்தினான். அந்த யாகத்தை முன்னின்று நடத்தும் பொறுப்பு பிரஹஸ்பதியை அடைந்தது. யாகத்திற்குச் செல்லுமுன்னர் கணவனைப் பிரிந்திருக்கும் பத்தினி கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைத் தனது இல்லத்தரசி யான தாரையிடம் உணர்த்திவிட்டுச் சென்றார்,

பல நாட்களாகவே தாரையும் சந்திரனின் எழிலுருவம் மீது மோகம் கொண்டிருந்தாள். சந்திரனும் தாரையின் பொலிவைக் கண்டு மயங்கினான். நெருப்பும், பஞ்சும் போலக் கட்டுக்காவலின்றி விடப்பட்ட இருவரும் தங்களது நிலை மறந்தனர். கற்ற கல்வியும், பெற்ற ஞானமும் காமன் கணை முன் செயல் இழந்தன. விதிவசத்தால் இருவரும் முறை தவறினர். யாகம் முடிந்து திரும்பிய பிரஹஸ்பதி நடந்த தவறைக் குறிப்பாலுணர்ந்தார். ஆயகலைகளைப் பயின்றும் மிருகம் போல உணர்ச்சி வயப்பட்ட சந்திரனைக் காசநோய் பற்றுமாறு சாபமிட்டார். இதனால் சந்திரன் ஒளிகுன்றித் தனது கலைகளை இழக்கத் துவங்கினான். நடந்தவற்றையறிந்த நாரத முனிவர் காமத்தின் தன்மைகளையும், அதன் வயப்பட்டு அல்லலுற்ற ஆன்றோர்களின் சரிதங்களையும் விளக்கினார்.

''காமமே பொய்யதனைச் சொற்றிடற்கு நிமித்தமெனக்
கருதலாகுங்
காமமே கொலையதனைப் புரிந்திடற்கு
வாயிலெனக் கரைதலாகுங்
காமமே களவதனை யாடிடற்கு வாயிலெனக் கழறலாகுங்
காமமே தீமையனைத்தினுக்கு மொரு தாராக
மாக்காணலாமே.

காமத்தாற் சதக்கிருதனுடலமெலா மாயிர
மாங்கண்களுற்றான்
காமத்தானிதிக் கிழவனிரு விழியிலொரு விழியைக்
கடிது நீத்தான்
காமத்தாற் கடன் வண்ணன் பெற்ற பெருஞ்சாபங்கள்
கணக்கினுண்டோ
காமத்தால் விளையிடும்பை யெண்ணிலவாம்''

நாரதரின் அறிவுரையின் பேரில் சந்திரன் திருவான்மியூரை அடைந்து காமநாசனியில் நீராடி மாதொருபாகனை உளமார வழிபட்டுப் பாவமன்னிப்பு கோரினான்,

''நறைமலர்க்கொன்றை வேய்ந்த நாதனே சரண நீலக்
கறையணி கண்ட முற்ற கடவுளே சரண நான்கு
மறையினுந் தேடிக் காணா மகிபனே சரண நாயே
னறையுனிற் சரணந் தன்னி லண்டினேனாள வேண்டும்

முனிவரர் மூவர் போற்று முன்னவா சரணமேழைக்
கினிவரும் வினையை மாற்றற் கேற்றவா சரண மென்றுங்
கனிவருஞ் சிந்தையாரிற் கலந்தவா சரணமோன
நனிதருஞ் சரணஞ் சார்ந்து நண்ணினே னாள வேண்டும்''

மனதார வழிபட்ட சந்திரன் முன் காட்சியளித்த அரனார் அவனுக்குப் பாவமன்னிப்பு அளித்தார். பழைய பொலிவை மீண்டும் பெற்ற சந்திரன் சிவபிரானைத் துதித்தவாறு தனது இருப்பிடத்திற்குச் சென்றான். பங்குனித் திருவிழாவின் நான்காம் நாளன்று இச்சம்பவம் நினைவுறுத்தப்படுகிறது.

**சூரியனின் இடர் களைதல்**

நாள்தோறும் சூரியன் உதயமாகும்போது மந்தேகம் என்ற தீவைச் சார்ந்த அறுபதினாயிரம் கோடி அரக்கர்கள் தொடர்ந்து தொல்லைகள் அளித்ததால் கதிரவனால் தனது பணியைச் செவ்வனே புரிய இயலவில்லை. இதனால் செய்வதறியாது தவித்த ஆதவன்முன் ஒரு அசரீரி ஒலித்தது. சம்புத்தீவில், பாலாற்றின் வடக்கில், சமுத்திர தீரத்திலுள்ள திருவான்மியூர் என்ற தலத்தில் வழிபடுமாறு அத்தெய்வ வாக்கு கூறியது.

யண்ணலே யசுரரார்ப்ப வமரிளை யாற்றா தோடே
டெண்ணலர் தம்மை யெற்றி யீர்த் திடற் கேற்ற தாய
நண்ணிய சூழ்ச்சி சொல்வே னாடுமென் றொலித்த தன்றே

சொல்லிய வகையே செய்யிற் றுன்னலர் பாறி மாய
வெல்லுவ துடனே ஞான விபவமு மடைவை கண்டாய்
தொல்லுல கதனிற் றென்பாற் றோன்றிடுஞ் சம்புத் தீவி
னல்ல புத்தேளிர் மோனர் நண்ணுகந் தருவர் போற்ற

பந்தியின் குடுமி யோக்கிப் பகர் வெளிக் கங்கை மூழ்கி
நந்தியெம் பெருமான் குன்ற நடுவினிற் றிரிந்து வல்லைத்
தந்தியின் கோடு சந்து தனியகில் மணிபொன்னாதி
யுந்திய கரையின் மோதி யோட்டுறும் பாலி ஞாங்கர்

தேன்வழி கற்பகத்தார் தேயரி பிரமனாதி
வான்மலிய மரரியாரும் வந்தடி பணிந்து போற்ற
கான்குழல் மனைய ராக்கங் ககனவைப் பீந்த செல்வ
வான்மியூர்க் கேத்திரத்தை வணங்கிடி லிரிவ ரன்னார்''

உலகிற்குத் தான் புரிய வேண்டிய கடமையை விடுத்துத் திருவான்மியூர் செல்ல இயலாது என்று தினகரன் வருந்தினான். சூரியனின் சகோதரனான அசனியைத் (இடி) திருவான்மியூருக்குத் தனது பிரதிநிதியாக அனுப்பி வழிபடச் செய்யுமாறு

நாரதர் ஆலோசனை வழங்கினார். அவ்வாறே அசனியும் திருவான்மியூர் சென்று சூரிய தீர்த்தம் என்ற புனலை உருவாக்கி அதில் நீராடியவாறு ஈசனை வழிபட்டான். சிவனாரின் நல்லருளால் சூரியன் மந்தேகத் தீவிலுள்ள அவுணர்களை வென்றான். இரவில் திருவான்மியூர் ஈசனை வழிபட்டுத் தனது நன்றியைத் தெரிவித்தான். இரவில் சூரியன் பூசித்ததால் இக்கோயிலிலுள்ள மூலவர் மேற்கு நோக்கியவாறு எழுந்தருளி யுள்ளார், சூரிய தீர்த்தத்தின் பெருமையைத் தலபுராணம் போற்றுகிறது.

> ''ஓதுமக்கனன் மனைவி யறவினர்கள் சுற்றத்தார்
> தீதறு 5ற் பெருங்கல்வி திரவியம் பல் விளைவாதி
> யேது தமக் கேய்கவென வெண்ணிடினு மத்தடத்துப்
> போதொன்றினின் மூழ்கிற் பொலிந்திடுவர் புண்ணியரே
>
> இத்தடத்துக் கூலமதி லிருந்தோங்குந் தருக்களின்
> முத்தொளிர்நீர் படுதலினான் மோக்கத்தை யுற்றிடுமே
> னித்தமுமங் கதின்மூழ்கி நிலைவான்மி யூருறைவார்
> சுத்தநல மாட்சியராச் சோதி சொரூபரேயாவர்''.

பங்குனித் திருவிழாவில் மூன்றாம் நாளன்று சூரியன் அருள்பெற்ற சம்பவம் நினைவுறுத்தப்படும்.

### இந்திரன் சாபம் நீங்கி நற்கதி பெறுதல்

பிரமதேவன் உவந்தளித்த வரங்களால் அதிக வலிமையும், செருக்கும் அடைந்த அகிதவுஷ்டிரன் என்ற அசுரன் வானுலகை வென்று தேவேந்தரனைப் பதவியிலிருந்து விரட்டினான். தோல்வியுற்று ஓடிச்சென்ற இந்திரனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாததால் வானவர்கள் பூவுலகில் செங்கோலாட்சி புரிந்து வந்த முசுகுந்தச் சக்கரவர்த்திகளைத் தஞ்சமடைந்தனர். தேவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கிய முசுகுந்தன் அகிதவுஷ்டிரனைப் போரில் வென்று விரட்டியடித்தான். இந்திரன் வரும்வரை தேவலோகத்தின் ஆட்சிப் பொறுப்பையும் முசுகுந்தனே ஏற்க வேண்டியிருந்தது.

அகிதவுஷ்டிரனால் விரட்டியடிக்கப்பட்ட இந்திரன் இமய மலைச் சாரலில் தவக்குடிலில் தவமியற்றி வந்த பிருகுமுனிவரிடம் தஞ்சமடைந்தான். முனிவரும் வானவர்கோனிடம் கருணை காட்டி அபயமளித்தார். ஒருமுறை காமவயப்பட்ட இந்திரன் பிருகுமுனிவரின் மகளிடம் முறை தவறி நடந்து கொண்டான் உரிய நெறியிலிருந்து வழுவிய தேவேந்திரனை அசுரனாக

மாறுமாறு பிருகு முனிவர் சபித்தார். தனது நடத்தைக்கும், அதன் விளைவாக எழுந்த சாபத்திற்கும் வருந்திய தேவேந்திரன் சாபவிமோசனத்தை எதிர்பார்த்தவாறு அலைந்து திரிந்து வந்தான்.

கணவனைப் பிரிந்து வாடிய இந்திராணிக்கு நான்முகன் ஆறுதல் கூறினார். இந்திரனுக்குச் சாபவிமோசனமளிக்கும் மார்க்கத்தை நாரதரிடம் கூறியனுப்பினார். கானகத்தில் அசுர உருவில் திரிந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்ட நாரதர் அவன்மீது கமண்டல நீரைத் தெளித்து வெறியைத் தணித்தார். பின்னர் திருவான்மியூருக்கு இழுத்துச் சென்று ஜென்மநாசனியில் நீராட்டினார். புனித நீர் பட்டவுடன் இந்திரன் சாபம் நீங்கிச் சுயநிலையையடைந்தான். அத்தலத்தில் வன்னி மரத்தடியில் கோயில் கொண்டிருந்த சிவபிரானை வழிபட்டுப் போற்றினான்.

சுந்தர முகங்களைந்துந் தூயவன் புயங்க ளெட்டு
நந்தமர் செவியிரண்டு நண்ணிய விழிகண் மூன்றுஞ்
சந்திரன் றவழுங் கங்கைச் சடைமுடியழகுங்காட்டி
யந்தியின் மேனியோடு மமர்ந்திடு மமல போற்றி

அஞ்செழுத் தோதா தோதியளி திருநீறு பூசி
மிஞ்சிய மணிகள் பூண்ட மெய்யடியார்கடங்கள்
சஞ்சித வினையை மாற்றித் தனிப்பெருங் கருணை காட்டி
யஞ்சலென் றருளு மெங்க ளண்ணலே போற்றி போற்றி

சிவபெருமான் இந்திரன் முன் காட்சியளித்துச் சாபவிமோசனம் அளித்தார். பழைய உருவத்தையடைந்த இந்திரனும் தேவலோகம் சென்று முசுகுந்தனிடமிருந்து ஆட்சியை ஏற்றான். அரனார் இந்திரனின் சாபத்தை நீக்கிய சம்பவம் பங்குனிப் பெருவிழாவின் ஆறாம் நாளன்று சிறப்பிக்கப்படுகிறது.

**நான்முகன் திருவிழா கொண்டாடிய சம்பவம்**

நான்முகன் படைப்புத் தொழிலைத் துவங்கி அது நிறைவுறும் காலத்தை ஒரு கற்பம் என்று குறிப்பிடுவர். ஒரு புதிய கற்பத்தின் துவக்கத்தில் திருமாலின் திருநாபிக் கமலத்தில் தோன்றிய பிரமன் அக்கற்பத்தில் படைப்புத் தொழில் சிறப்பாக நடைபெற வழிகாட்டுமாறு மகாவிஷ்ணுவிடம் வேண்டினார்.

அனைத்து உயிரினங்களுக்கும் அன்னையாகவும் பிதாவாகவும் உள்ள சிவபெருமானை வழிபடுமாறு திருமால் அறிவுறுத்தினார். தான் வழிபடுவதற்கு ஏற்ற இடத்தைக் காட்டுமாறு பிரமன் கேட்டுக் கொண்டார். முற்காலத்தில் வேதங்கள் பூசித்து அருள்பெற்ற திருக்கழுக்குன்றத்திற்கும், பார்வதிதேவி மயில் உருவம் கொண்டு வழிபட்டு உய்வுற்ற திருமயிலைக்கும் இடையே அமைந்துள்ள திருவான்மியூரே பிரமன் வழிபடுவதற்கு ஏற்ற இடம் என்று உணர்த்திய திருமால் அத்தலத்தின் பெருமைகளை எடுத்தியம்பினார்.

சிவபுர மண்ணிற் போந்து திருத்தல மாயிற்றென்கோ
நவமிகு கயிலைக் குன்ற நன்னில மாயதென்கோ
வவனியில தன்பே ரேனு மஞ்செவி கேட்கிலாரே
தவமுடைத் தேவரேனுஞ் சவமெனச் சாற்றலாமே

வேதமோர் நான்குங் கூடி வியன்கிரியான வந்த
வோதருந் தலமவாசி யுயரிய மயிலதாகக்
காதலோ டன்னை யேற்றுங் கபாலியந் தலமுதக்கு
பாதொரு பாகன் வைகும் வான்மியூர் நடுவுண்டாமால்''

திருவான்மியூரில் முறைப்படித் தவமியற்றிய பிரமன் முன் அரனார் தோன்றி விரும்பும் வரத்தையளிக்க ஒப்புக்கொண்டார். நான்முகனின் வேண்டுகோளின்படியே படைக்கும் தொழிலை நன்கு செயலாற்ற அருளிய ஈசர் இதே தலத்தில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அதன் நீரால் முறைப்படி அபிஷேகம் செய்து வழிபடுவதுடன், ஒரு திருவிழாவையும் நடத்துமாறு ஆணையிட்டார். அவ்வாறே நான்முகனும் பிரமதீர்த்தம் என்ற ஒரு புனலை உருவாக்கி ஈசனைத் துதித்தார். ஜொலிக்கும் விலையுயர்ந்த அணிகலன்கள் நறுமணப் பொருட்கள் ஆகியவற்றால் மூர்த்தியை அழகூட்டி, வில்வம், மலர்கள் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வித்தார்.

எழுந்துமுன் கற்பம் போன்றங் கெவற்றையு மயன்முகித்துக்
கொழுந்தடர் கானிவந்து குலவிய வான்மியூரி
னழுந்திய வற் புமேவ வருந்தட மொன்றுகண்டு
தொழிந்திரு வருட்குறிக்குச் சுத்தவந் நீராலாட்டி

கந்தமென் மலர்களோடுங் கவினுற வில்வஞ்சூட்டி
யுந்திய வேறு வேறா யோதனம் பலவு மூட்டிச்
சிந்தையிற் களிப்பு மிக்குச் சீரெலா மெடுத்துப் பன்னி
வந்தனம் வகையிற் செய்து வரம்பல வேய்ந்த பின்னர்

அகத்தியர் போன்ற முனிவர்களுடன் கலந்தாலோசித்து ஆகமமுறைப்படித் திருவிழா நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றன. வானவர் ஒன்று கூடி ஈசனுக்குப் பட்டாடை, பீதாம்பரம், ஆபரணங்கள் போன்றவற்றை அணிவித்தனர். மாவிலை, வாழை, கமுகு போன்றவற்றால் தோரணங்களும், பூப்பந்தல்களும், நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட கம்பங்களும் அலங்கரிக்கப்பட்டன. வீதிதோறும் வண்ணக் கோலங்கள் இடம் பெற்றன. பங்குனித் திங்களில் முறைப்படித் திருவிழா துவக்கப்பட்டது. ஆனைமுகன், ஆறுமுகன், சண்டேசர், அம்மன், அரனார் ஆகிய உற்சவ விக்கிரகங்கள் பலவகையான வாகனங்களில் பவனி வந்தன. இரவில் மறையவர் வேதபாராயணம் செய்ய, நாரதர் போன்றோர் யாழ் ஒலிக்க, அடியவர்கள் நாமாவளிகளைக் கூற, விழா விமரிசையாக நடந்தேறியது. வெண்குடை, கவரி, ஆலவட்டம், சாந்தாற்றி, கொடிகள், தீவட்டிகள் ஆகியவற்றை ஏந்தியவர்கள் இங்கும் அங்கும் நகர்ந்தனர். குங்குலியத் தூபம் எங்கும் வீசிற்று. பேரிகை, யாழ், கைப்படகம், பறை, முரசு, குடமுழவு, சின்னம், பூரி, எக்காளம், சங்கம், தாளம், தண்ணுமை ஆகியன ஒலித்தன. வீதிதோறும் கும்பங்கள் ஏந்தினர். மறையோர்கள் அட்டமங்கலத்துடன் தட்டுகளில் தேங்காய், தாம்பூலம், கற்பூரம் ஆகியவற்றுடன் தீபமேற்றினர். சில அடியார்கள் ஆனந்தநடனம் புரிய வேறு சிலர் முகமன் கூறிப் பாடினர். இவ்வாறு திருவிழா கொண்டாடியபின் தீர்த்தமாடி மறுநாள்கொடிஇறக்கப்பட்டது.

மறையவர் சொல்வேத பாராயணத்தோடடர்பு
கொளவந்து சூழ்ந்தார்
முறைமையினினாரத கிம்புருடரியாழ்மீட்டி வரமுன்னஞ்
சூழ்ந்தார்
நறை செறிகுங்கிலிய தூபக்கலய மேந்தினரு நன்கு சூழ்ந்தார்
கறை மிடற்றன் பன்னாமாவளி கூறியடியவர்கள் கலந்து
சூழ்ந்தார்

சூரியன் சந்திரனக்கத்திரமாளி கரிசிங்கந் தொடர்தீவர்த்தி
பாரிசத்து முன்பின்னுங் கோடிசூரிய ரென்னாப் பரிவினேந்த
பேரிகையாழ் கைப்படகம் பறைமுரசு குடமுழவு பெரியசின்னம்
பூரியெக்காளஞ்சங்கமினந் தாளந் தண்ணுமையும்
பொலிவினார்த்தார்

ஆடுவர் கடமை மறந்து சிலவடிய ரவ்வாடன் முற்றுநோக்க
நாடுவர்கள் கூட்டமெனச் சிலவடியர் நயமனைத்து நன்குமேவப்
பாடுவர்கள் பலபாடல் சிலவடிய ரப்பாடற் பயனைக் கேட்கக்
கூடுவர்களொல்லையினிற் சிலவடியர் சூதுகவித்
தங்குவகை கொண்டே

மறைமுடியின் விளையாடு நம் பெருமானிவன்
வந்தான் மழுமுன்னேந்திக்
கறைவிடமும முதாகவுண்ட பரலிவன் வந்தான் கயிலை நீங்கித்
துறைகெழு நன்வான்மியூர் மருந்தீசனிவன்வந்தான்
சோதிஞான
விறையவன் வந்தான் வந்தானெனச்
சின்னமெம்மருங்குமெடுத்தங்கார்த்தார்.

இத்தகைய துப்புரவினுடன் சொக்கநாயகி
நல்லிமையச் செல்விப்
பத்தினியினுடன் வீதிவலம் போந்து விண்விபுதர்
பரவிப் போற்றக்
கத்தனம் வான்மியூர்க் கண்ணுதலோன்
யாவர்க்குங் கருணை நல்கிச்
சுத்தகோபுர வாயிலணித்தாக மண்டபத்துத் தொக்கார்மாதோ
வேத்தி ரத்தின்படை தாங்கி நந்திமுனமே
செல்லவிமலர் பின்னர்க்
காத்திர கோபுரவாயிலுட் புக்குவிமான
முதைக் கனிவிற் சூழ்ந்து
தோத்திரங்கள் கரதாளமுழங்க வாகன மிழிந்துதுதை
மாணிக்கம்
பூத்தொளிரு மணியரியாசனமமர்ந்தான்
புண்ணியநற்பொருளாமன்னே

முற்றொரு சமயத்தில் தெப்பத் திருவிழா கொண்டாடினர். இத்திருவிழாக் காலங்களில் நான்முகன் பூதானம், சுவர்ணதானம், அன்னதானம் முதலியன புரிந்து சிவனாரை வழிபட்டார். தொடர்ந்து பிற்காலத்தில் திருவிழாக்கள் நடத்துபவர்கள் பெரும்பேறு அடைவார்கள் என்று அரனார் அருளினார். பிற்காலத்தில் திருமால், இந்திரன் ஆகியோரும் திருவிழா கொண்டாடினர்.

### வேதங்களின் மாசு நீங்கிய சரிதம்

அரிய தவங்கள் பல புரிந்து அடைந்த வரங்களால் மிகவும் வலிமை பெற்ற சோமுகன் என்ற அசுரன் சத்தியலோகம் சென்று திசைமுகனிடமிருந்த நான்கு வேதங்களையும் அபகரித்துச் சென்று ஆழ்கடலில் சேற்றில் அவற்றைப் புதைத்தான். நான்முகனின் முறையீட்டின் பேரில் திருமால் மச்சாவதார மெடுத்து அசுரனை வென்று வேதங்களை மீட்டார்.

தீயகுணமுடைய அரக்கனின் கைகளில் அகப்பட்டுக் கொண்டதாலும், சேற்றில் புதையுண்டதாலும் தங்களது புனிதத்துவம் களங்கப்பட்டதாக வேதங்கள் வருந்தின. தென் பகுதியிலுள்ள திருவான்மியூரில் வழிபட்டுக் களங்கத்தைப் போக்கிக் கொள்ளுமாறு நான்முகன் அறிவுரை வழங்கினார்.

முப்புரிநூலை யேய்ந்தார் முன் கையிற் காண்டங் கொண்டார்
வைப்பெனப் பூதி பூசி வயங்கு கண்டிகையைப் பூண்டார்
துப்புடனைந் தெழுத்தே சொற்றிட மன்னுவாய
ரிப்புவனத்திலுற்ற வெழிற்றவர் மிடைந்து கோல'

சிந்தையிற் றியானங் கூடிச்செறிதவ முஞற்றுவோர்கள்
பந்தியிலிருந்து தெய்வப் பரசிவபூஜை செய்வோ
ரந்தியும் பகலுமாக வருஞ்செப மாற்றுவோர்கள்
விந்தை நல்லியாகஞ் செய்வோர் மேவிடுந் தவத்தர் நேர''

அவ்வாறே வேதங்கள் திருவான்மியூருக்கருகேயுள்ள ஒரு அற்புத இடத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டன. அத்துடன் திருவான்மியூருக்குச் சென்று சிவபெருமானையும் பூசித்தன.

சங்கரா போற்றி சாம்பசதாசிவ போற்றி வேதன்
கங்கரா போற்றி நீல கண்டனே போற்றி நீண்ட
பொங்கரா வணிந்தாய் போற்றி புண்ணியா போற்றி யன்பிற்
றங்கரா போற்றி போற்றி சய சய போற்றி

செய்யனே போற்றி சுத்தசீலனே போற்றி ஞான
மெய்யனே போற்றி விண்ணோர் விமலனே போற்றி சூலக்
கையனே போற்றி வானக் கங்கையாய் போற்றி யெங்க
ளையனே போற்றி போற்றி யரகர போற்றி போற்றி''

சங்கரன் வேதங்கள் முன்பு தோன்றி அசுரனால் விளைந்த களங்கத்தை நீக்கினார். வேதங்களின் விருப்பப்படியே திருவான்மியூருக்கு வேதபுரி என்ற பெயரும் ஏற்பட்டது. வேதங்கள் தங்கிய இடம் வேதச்சிரேணி (இன்று வேளச்சேரி) என்று அழைக்கப்பட்டது. பங்குனித் திருவிழாவின் எட்டாம் நாளன்று அரனார் நான்மறைகளுக்கும் அருள்புரிந்த வைபவம் கொண்டாடப்படுகிறது.

### காமதேனு புரிந்த வழிபாடு

பூவுலகம் போற்றும் வாரணாசியில் கோயில் கொண்டுள்ள விசுவநாதரை ஒரு மண்டலம் பூசிக்க வசிஷ்டர் விரும்பினார்.

தேவைப்படும் போதெல்லாம் அபிஷேகத்திற்கான பாலை யளிக்கவல்ல காமதேனு என்ற தெய்வீகப் பசுவை இந்திரனிடமிருந்து பெற்று வந்து தனது ஆசிரமத்தில் வளர்த்து வந்தார். ஒரு முறை கானகப் பகுதிகளில் உலாவச் சென்ற அப்பசு அப்பகுதியின் இரம்மியமான சூழலில் மெய்மறந்து ஒருநாள் தங்கிவிட்டு மறுநாளே வசிஷ்டரிடம் திரும்பியது. காமதேனு இல்லாமையால் அபிஷேகம் தடைப்பட்டதால் வெகுண்ட வசிஷ்டர் காட்டுப் பசுவாக மாறுமாறு சபித்தார். தனது தெய்வீகத் தன்மையை இழந்து வனாந்திரத்தில் திரிந்தவாறு தென்பகுதியிலுள்ள திருவான்மியூரை அப்பசு அடைந்தது.

திருவான்மியூரையடைந்தவுடன் காமதேனுவுக்கு நல்லறிவு தோன்றியது. மனதில் திடீரென்று தோன்றிய ஆன்மிக உணர்ச்சியின் விளைவாகக் கானகத்திலுள்ள புதரில் மறைந்திருந்த ஒரு சிவலிங்கத்தை அப்பசு கண்டுபிடித்தது. அதன் திருமுடியில் தனது மடியிலுள்ள பாலைச் சொரிந்து அபிஷேகமும் முறைப்படிப் பூசைகளும் புரிந்து வந்தது.

தெய்வந லிலிங்கமூர்த்தி தெரிதர வார்வமிக்குற்
றையவின் றுய்ந்ததே னென்னா வரியதன் சுரையினின்றும்
பெய்தது பெருக்கிப் பாலை பிரான்றிரு முடியின் ஞாங்கர்
செய்தது வைகறோறுந் திரிந்ததவ் வெல்லைத் தன்னுள்.

அருகிலுள்ள சைதை என்ற பகுதியில் சதயூ என்ற மன்னன் செங்கோலாட்சி செலுத்தி வந்தான். கானகத்திலுள்ள கொடும்மிருகங்களால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் எண்ணத்துடன் அவ்வரசன் ஒரு பெரும் படையுடன் சென்று வேட்டையாடினான். அரசனின் கணைக்குத் தப்பிய அரிமா ஒன்று திருவான்மியூரின் எல்லைக்குள் நுழைந்தது. அதனைக் காமதேனு தனது கொம்புகளால் குத்திக் கொன்றது. இந்த அபூர்வ சம்பவத்தைப் பற்றியறிந்த சதயூ அந்த அற்புதப் பசுவைப் பிடித்து வருமாறு தனது வீரர்களையனுப்பினான். காமதேனு வீரர்களை விரட்டியடிக்கத் தாவியபோது அதனது குளம்பு சிவலிங்கத்தின் மீது பட்டு ஆழ்ந்த வடுவை உண்டாக்கியது. இதனைக் கண்ட காமதேனு அச்சமும் வருத்தமும் உற்று ஈசர் முன் முறையிட்டது.

''புண்ணிய வண்ணமாப் பொலிதரு மேனியி
னண்ணிட வாற்றின னானொரு தழும்பினைப்
பண்ணுவ தீதெனாப் பாவியேன் றெருளுறே
னெண்ணிய நின்னடி யெய்திடப் பெறுவலோ.

கருணையே படிவமாக் காணுமோர் மேனியி
லொருவடு வதிதர வுஞற்றினை யிற்றை நான்
பருவர வொருவியே பண்பினை யுற்றிட
மருவரு நின்னடி வழங்கிடப் பெறுவலோ

அடியர் கடவமெனாவரர் தருமேனியிற்
கொடியதொர் தீமையாற் குளம்பினைப் பதித்தனன்
மிடியனிங் குற்றபுன் வியனிலை மாற்றிமுன்
வடிவுற நின்னடி மருவிடப் பெறுவலோ''

இவ்வாறு வருந்தித் துதித்த தெய்வப் பசுவை விரிசடைக் கடவுள் தேற்றினார்.

''அன்ப! அஞ்ச வேண்டாம். நினது திருவடி கந்தனின் மெல்லிய அடிகளைவிட மென்மையாகவே இருந்தது. முன்பு காஞ்சியில் உமையன்னையின் கைவளைத் தழும்பை ஏற்றுக் கொண்டது போலவே இதனையும் நான் ஏற்கிறேன். உன்னுடைய மடியிலிருந்து சொரியும் பாலினால் எனக்கு அபிஷேகம் செய்தாய். இதனால் எனது லிங்கத் திருவுருவம் வெண்மை நிறத்தையடைந்தது. இதனால் பால்வண்ணநாதர் என்ற திருநாமத்தை ஏற்கிறோம். வசிஷ்டர் அளித்த சாபம் நீங்குவதால் உனது பழைய நிலையையடைந்து வானுலகம் வருவாய்''

''அடியுவ ருஞற்றிடு வரிவினை யுன்னிடே
மடியெனுங் குளம்பினை யறிந்து நீ வைத்திலை
கடிகமழ் கடம்பணி கந்தன தடியெனாக்
கடியுற வெண்ணினங் கலங்கலை சுரபியே

நின் சுரைட் பாலினாணித்தமு மாட்டினை
யன்னதொர் தன்மையி னருட்சிவலிங்கம
துன்னரும் வெண்மையி னொண்ணிற மேவினம்
பன்னுவ ரியாவரும் பால்வண னென்னவே''

இச்சம்பவத்தையறிந்த சதயு மன்னன் தனது முடியைத் துறந்தான். அமைச்சர்களிடம் நாட்டை ஒப்படைத்த பின் திருவான்மியூரையடைந்தான். புனல்களில் நீராடி சிவச் சின்னங்களைத் தரித்தவாறு அண்டர்நாயகனைப் பலவாறு துதித்தான். மண்டபமும், கோபுரமும் அணி செய்யும் அற்புதமான ஆலயத்தைக் கட்டினான். மாட வீதிகளில் மறைகளில் வல்ல சைவர்களைக் குடியேற்றி நகரையுண்டாக்கினான். திருவிழா நடைபெறச் செய்தான். பின்னர்

மோட்சதாயினியில் நீராடிச் சிவபெருமானின் உலகை யடைந்தான்.

பூதிமணி வடந்தாங்கிப் பால்வண்ணன் சந்நிதியிற் பூசித்தேத்தி
யேதிலர் கடமைக் கூவிப் பொருளீந்து புதரனைத்
துமெடுத்துவிசிச்
சோதியாலய மண்டபங் கோபுரங்கள் பல துளங்கச் சண்டு
வீதிபல வகுத்தலற்றிற் சைவரெலாங்குடி மல்கும்
விழுப்பஞ்செய்தான்

நன்னகரமே யெடுத்துத் திருவிழாப் பல நாளு நடாத்தியாரும்
பன்னரிய பால்வண்ணப் பெருமாற்குமம்மையாம் பார்வதிக்குந்
துன்னரிய பொன்னணி கடூசுடைக ளெண்ணில
வாத்துளங்கச் செய்தங்
கெந்நாளு மடியர் தமையரனெனவே
கண்டவுடனிறைஞ்சி யேத்தி''

காமதேனு அருள்பெற்ற வைபவத்தை ப்பிரம்மோற்சவத்தின் இரண்டாம் நாள் காலையில் கொண்டாடுகின்றனர்.

**யமனின் பழி நீங்கிய வரலாறு**

வேதாகமங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற மிருகண்டு முனிவருக்கும் மருத்துவதி என்ற மங்கை நல்லாளுக்கும் காசி விசுவநாதர் அருளால் பதினாறு வயதுவரை மட்டுமே வாழக் கூடிய மார்க்கண்டேயர் என்ற புத்திரர் அவதரித்தார். தீவிர சிவவழிபாடே மரணத்தை வெல்லும் என்று உணர்ந்த மார்க்கண்டேயர் திருக்கடவூர் சென்று அமிர்தகடேஸ்வரரை வழிபட்டு வந்தார். நமனைக் கண்டும் அஞ்சாமல் வழிபட்டு வந்த மார்க்கண்டேயர் மீது யமன் தனது பாசக்கயிற்றை வீசியபோது சிவபெருமான் காட்சியளித்துக் காலனைத் தண்டித்தார். மார்க்கண்டேயர் சிரஞ்சீவியானார்.

மார்க்கண்டேயரின் உயிரைக் கவர முயன்றதன் மூலம் பெரும்—பாவத்தைப் புரிந்து விட்டதாக எண்ணிய காலன் அத்தவறுக்குக் கழுவாய் தேட முற்பட்டான். நாரதரின் அறிவுரையின் பேரில் திருவான்மியூரை அடைந்தான். அருகேயுள்ள வேதச்சிரேணியில் தனது தண்டத்தை நிறுவி அதனையே ஒரு லிங்கமாகப் பாவித்து வழிபடலானான். இரவு நேரத்தில் திருவான்மியூர் சென்று ஈசனைப் பூசித்து வந்தானான். இவ்வாறு மனமார வழிபட்டு வந்த காலன் முன் மாதொருபாகன் காட்சியளித்தார்.

வேதச்சிரேணியில் தான் வழிபட்ட தண்டத்தில் தண்டீஸ்வரர் என்ற பெயருடன் என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்றும், அப்பெருமானைப் பூசிப்பார்களுக்கு மந்தகாசம், வயிற்று உபாதை, மேகம், குட்டம், வாதம், காமாலை போன்ற நோய்களிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்றும் வேண்டினான்.

*வான்மியூரெல்லையுறு மெழில் வேதசிரேணி வயின்*
*வயத்தினோடு*
*நான்மிக வற்புடனேத் துஞ்சிவலிங்கப் பெம்மாற்கு*
*ஞான்று மென்றன்*
*வான்பெயரையே வாய்ந்து போந்து பணிந்திடுமவர்கள்*
*வறுமை தீர்ந்து*
*மேன்மையுறு பெருஞ்செல்வமனை மக்களுடன் வதிந்து*
*விளங்கல் வேண்டும்.*

*நானகழ்ந்த தடமதனுளோர் ஞான்றாயினுமுழ்கி*
*நன்னரோச்சுங்*
*கானலருங் கொன்றையந் தார்த்தண்டபாணிக்*
*கடவுள் கழற்பூசிக்கின்*
*கானலன மந்தார காசஞ்சூன் வயிற்றுளைவு கரியமேக*
*மானமறுங்குட்ட நோய் வாதங்காமாலை*
*பன்னோய் வழித்தல் வேண்டும்*

யமனுடைய வேண்டுதலைக் கண்ணுதற்கடவுள் ஏற்றார்.

காலனும் வேதச்சிரேணியில் திருவிழாக்களை நடத்திவிட்டுத் தன்னுலகம் சென்றான். திருவான்மியூரில் பங்குனிப் பெருவிழாவின் ஐந்தாம் நாளன்று யமன் பழிநீங்கிய சம்பவம் நினைவூட்டப்படுகிறது. வேளச்சேரியில் யமனால் நிறுவப்பட்ட சிவாலயம் தண்டீஸ்வரர் ஆலயம் என வழங்கப்படுகிறது.

### இராமபிரான் வரம் பெறுதல்

இராமன் என்ற மானிடனாக அவதரித்த திருமால் ஒரு சராசரி மனிதனுக்குரிய இன்ப துன்பங்களை ஏற்றார். சீதையைத் தேடியவாறு தென்னகத்தில் அலைந்தபோது திருக்காளத்தி, திருவேங்கடம், திருத்தணிகை, திருவூறல், திருப்பாசூர், திருவிற்கோலம், மயிலை போன்ற பல திருத்தலங்களில் வழிபட்டார். திருவான்மியூரின் புனிதத் தன்மையைக் கேட்டறிந்த இராமபிரான் அத்தலத்திலுள்ள புனிதப் புனல்களில் நீராடியபின்

சிவச் சின்னங்களைத் தரித்தவாறு வளமான கோபுரத்தை வணங்கியவாறு உள்ளே புகுந்தார். முறைப்படிப் பிரகாரத்தை வலம் வந்தபின் நந்தி, முருகன் போன்றவர்களை வணங்கிய பின் சிவபிரான் முன்நின்று உளமார வழிபட்டார்,

நலவம்பு தயில மான்பானஸ்ணிய ததிபல் வாசக்
கலவை குங்கு மங்கத் தூரி கனிதேன் செங்கன்னற் சாறோ
டிலகு சர்க்கரை நெய் வெந்நீரின்னணஞ் சேகரித்துத்
துலங்கிய மருந்தீசற்குச் சொரிந்தன ளுச்சு தோய

ஒற்றாடை கொண்டங் கொற்றி யொள்ளிய நீறணிந்து
பொற்கலை பூணூல் சாத்திப் புகழ்மணிக் கலன்கள் பூட்டி.
நற்றழை வில்வமாதி நறுந்தொடைப் பொற்புறுத்தி
விற்படு தூப, தீப மிகுசுவை நிவேதனங்கள்

பற்பல பரிவினோடும் பரிந்தமைத் தெடுத்துக் காட்டி
யுற்றிடு முபசாரங்க ளுரிமையினு ளுற்றி முற்ற
விற்பிரு குடிநன் கேய்ந்த வியன் சொக்கநாயகிப் பாற்
பொற்புற வமருந் தெய்வப் புண்ணியற் போற்றுவானால்.

இராமபிரானின் பூசையால் உளம் நெகிழ்ந்த அரனாரின் கருணையால் ஒரு தெய்வீக வாக்கு தோன்றியது. கூடிய விரைவில் இராமபிரான் இராவணேஸ்வரனை வென்று சீதாப் பிராட்டியைச் சிறை மீட்பார் என்று அந்த வாக்கு வாழ்த்தியது. இராமபிரான் திருவான்மியூரில் ஈசனின் அருளைப் பெற்ற நிகழ்ச்சியைப் பங்குனிப் பெருவிழாவின் ஐந்தாம் நாளன்று கொண்டாடுகின்றனர்.

### மருந்தீசர் எனும் நல்மருத்துவர்

கயிலையில் சிவபெருமான் இமவான் மகளான பார்வதியைத் திருமணம் செய்து கொண்டபோது அரனாரின் கட்டளையின் பேரில் தென்திசை நோக்கிச் சென்ற அகத்திய முனிவர் பல திருத்தலங்களைத் தரிசித்தவாறு திருவான்மியூரையடைந்தார். தனது மாணாக்கர்களுடன் திருக்கோயிலையடைந்து அரனாரைத் துதித்தார். அகத்தியரின் பக்தியை மெச்சிய சிவபெருமான் நேரில் தோன்றி வேண்டும் வரத்தை வினவினார். அகன்ற இவ்வுலகத்தில் உபயோகத்திலுள்ள மூலிகைகளின் குணாதிசயங்களையும், அவற்றால் குணமடையக் கூடிய நோய்களின் விவரங்களையும் அகத்தியர் பெற விரும்பினார். சிவபெருமானும் அகத்தியருக்கு அவர் விரும்பியவற்றை உபதேசித்தார்.

மானுடர்கள் புரியும் நல்வினைகள், தீவினைகள் ஆகிய வற்றிற்கு ஏற்றவாறு அவரவர்களின் உடல்நலம் அமைந்துள்ளது. உடல்நலத்தைக் குன்றச் செய்யும் நோய்கள் 4448 வகைப்படும். இவற்றைக் குணப்படுத்த மரம், செடி, கொடி, புல் ஆகிய நான்கு தாவர வகைகளை உண்டாக்கி, அவற்றிற்கு ஆறுவிதமான சுவைகளையும் அளித்துள்ளோம். இவற்றை ஒன்றுடன் ஒன்றாகக் கலந்து பலவகையான மருந்துகளைத் தயாரிக் கலாம்.

''அக்கொடிய பையுளினைப் போக்கற்காக
வரியவோ டாதிகளிங் கயுதங் கோடி
தக்கவகை கெழுதலுற் றெங்கு மோங்குந்
தடித்த மாஞ் செடி கொடிபுன்றான் கவற்றின்
பக்குவமீப் பட்டை வேரிலைமென் புட்பம்
பழம் வித்துக் கட்டைரச மெண்பே தங்கள்
கக்குமவ் வொவ்வொன்றுந் துவர்ப்புக் கார்ப்புக்
கசப்புத் தித்திப்புப் புளிப்புத் தாமே
இவை தம்முளொன் றுடனொன்றுற்ற போழ்தங்
கெழிஇுறு நல்லவுட தமுப் பானிரண்டா
நவையறுமவ்வுறை பலவுமானவர்க்கு
நண்ணரிய நயம் விளக்க வேதுவாமால்
சிவைவரச பாடாண கந்தகஞ் சித்தர் தாமே
சிகிச்சையினுக் கெடுத்தாள்வர் சிற்றான்மாக்க
ளவையறியா தானுவரே லகலிடத்தி
லவலர்களாச் சாபமுடன் பாபமெற்பர்''

மருத்துவர்கள் நேர்மை, சித்தசுத்தி, காருண்யம் நல்லொழுக்கம், தெய்வழிபாடு, ஆண்மை போன்ற குணங்களை உடையவராக இருக்கவேண்டும். நோயால் பாதிக்கப்பட்டவர் களின் நாடிகளைப் பரிசோதித்து நூல்கள் அறுதியிட்டுள்ள எட்டு விதமான சோதனைகளைக் கடைப்பிடித்து நோயின் தன்மையை உணர்ந்து அதற்கேற்ப வைத்தியமுறைகளைக் கையாள வேண்டும். நோயுற்றோரின் வயது, அவரது உணவுப்பழக்கங்கள், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாதம் பித்தம், சிலேட்டுமம் போன்றவற்றைப் போக்கிக் குணமடையச் செய்ய வேண்டும்.

பொறுமை, இனிய சொற்கள், ஆகியவற்றைக் கையாண்டு உரிய ஔஷதிகளையளிப்பவரே நல் மருத்துவராவார்.

தனிலாத பித்த சிலேட்டு மத்தாலேருந்
நன்னிலைபின் பிறநிலைமேற் பிறழற் றொந்த
நனி நிதானத்துடனே நாடி நோக்கி
நவையருப்ப முற்றானுக் கினிய மாற்றங்
கனிவுடனே மிகவழங்கி யாமயத்தைக்
களைபவனே பண்டிதனா மிந்த நாமந்
தனிப்பரமனா மேற்கும் பெயருண்டாமின்
றமிழ்முனியே பரிகார நானுநன்றே''.

நோய்களைக் களைய மணி, மந்திரம், மருந்து என்று மூன்று வழிகள் உள்ளன. மணி என்பது மூலரசம். அதனை முறையாகப் பயன்படுத்தினால் எங்கும் சஞ்சாரம் செய்யலாம். அட்டமாசித்திகளைப் பெறவும், பெருத்த நிதிக்குவியல்களைப் பெறவும் இது பயன்படும். இந்த மூலரசத்திற்கு உபரசங்களாகப் பாதரசம் போன்ற 64 ரசங்கள் விளங்குகின்றன. இவற்றால் குளிகைகளைச் செய்ய இயலாது. தவமுனிகளே இவற்றின் முழுத்தன்மைகளையும் அறிவர். சாதாரண மருத்துவர்கள் இவற்றை அறியமாட்டார். தாருகவனத்து இருடிகளையடக்கச் சிவபெருமான் பிட்சாடனராகவும், திருமால் மோகினியாகவும் தோன்றியபோது ஈசனிடமிருந்து இந்த மூலரசம் தோன்றியது.

''இனிய சுமனக் குளிகை நன்கு ஞற்றிப்
பத்தெனு நற் றிசைகளெலா நொடிக்குள்ளாகப்
படர்ந்திடுவர் மலைநிகர் மாழைக்கு விப்பர்
சித்தியெட்டு மடைந்திடுவரிவர் கட்கேலாச்
செயலது தானொன்று மிலையுலக மூன்றும்''.

மந்திரங்களுள் பதி, பசு, பாசம் ஆகியவற்றை உள்ளடக்கிய 'சிவாயநம' என்ற பஞ்சாக்ஷர மந்திரம் பெருமையுடையது. இம்மந்திரத்தை நன்கு கடைப்பிடிப்பவர்களைக் கண்ணால் கண்டாலும், மனதால் எண்ணினாலும் எல்லா துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல விலகும். இப்பஞ்சாக்ஷர மந்திரத்திலிருந்து சப்தகோடி மந்திரங்களும் தோன்றின.

''மந்திரமே நம்மரிய மேனியாகு மந்திரமே சிவசத்தி வடிவதாகு
மந்திரமே வெண்கயிலைப் படிவமாகு மந்திரமே
சிற்சபையினடனமாகு
மந்திரமே யைந்துகிருத்தியம தாகு மந்திரமே
திருவருளா காரமாகு
மந்திரமே சருவவியா பகமதாகு மந்திரமே
மோக்கத்திற்கேதுவாமால்

நகரமது நஞ்சரண மகரமுந்தி நற்சிகர
முயர்மொய்ம்பு வகரந்துண்ட
மகரமது முடியாகு மவற்றோடாகு மணியுறு
ஞானக் கூத்துச் சிவவென்றாகு
நகரமுடன் மகரமதே யூனநட்ட நடுயகரம்
சிவனென நண்ணி நீடு
நிகரறுதி ரோதான மலமு மோர்பானீடு
மருளோடு சிவமற்றோர்பாலாம்.''

தேவர்களும் அவுணர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அதில் விளைந்த அமுதம் அங்கும் இங்கும் சிந்தியது. ஒன்பது வகையான ஔஷதங்கள் அமுதத் துளிகளிலிருந்து உதித்தன. மூலிகைகள், பூண்டுகள் போன்றவற்றின் துணை கொண்டு மருந்துகளைச் செய்யலாம்.''

''ஒடதிக ளெண்ணரிய வோங்கினாளு
முற்றபாற்கடலை முன்னாளிற்றேவர்
கூடிமதித் திட்ட ஞான்ற முதஞ்சிந்திக்
குலவியமா மூலிகைகள் பதினான்காகு
நாடரிய காராலஞ் சிதறத் தோன்றி
நண்ணியவெம் மூலிகைகளோ றொன்பானாம்
பூடவைகளாய மருந்தினுக்குக் கூடாப்
புகலுஞ்சாரணைக்காகும் புகலவற்றுள்.''

இவ்வாறு மருந்துகள் பற்றிய முழுமையான அறிவை அரனார் அகத்தியருக்கு அளித்தார். தனது அறிவுத் திறத்தைப் பயன்படுத்தி மேலும் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்குமாறு அரனார் அறிவுரை அளித்தார். இவ்வாறு தன் மூலம் உலகிற்கு மருத்துவ அறிவைப் புகட்டிய ஈசனுக்கு மருந்தீசன் என்ற பெயர் நிலைக்க வேண்டும் என்று அகத்தியர் வேண்டினார். இறைவனும் அகத்தியரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்.

''என்றலுநற் பரசிவன்றா ளிணைமலரிற் பணிந் தெழுந்து
நன்று நானிராசி யங்கணனியோர்ந்தே னிறைவநின்னை
யின்று மருந்தீச னென்னா வேவருமே யேத்தல் வேண்டு
முன்றன் றரிசனங்கிடைத்தார்க்கொரு நோயு மடரலாகா''

பின்னர் அகத்தியர் தனது சீடர்களுடன் திருவான்மியூரில் சில காலம் தங்கியிருந்தார்.

### அகத்தியர் கண்ட திருமணக் காட்சி

சிவபெருமான் திருக்கயிலையில் பார்வதியைத் திருமணம் புரிந்து கொண்ட போது அனைத்து உலகினரும் அங்கு குழுமியதால் வடபுலம் தாழ்ந்து, தென்புலம் உயர்ந்தது. உலகைச் சமன் செய்யுமாறு அகத்தியரை ஈசன் தென்பகுதிக்கு அனுப்பினார். உலகோர் அனைவரும் கண்டுகளிக்கும் காட்சியைக் காணத் தனது கண்கள் கொடுத்து வைக்கவில்லையே என்று அகத்தியர் ஏங்கினார். குறுமுனி விரும்பும்போதெல்லாம் தனது திருமணக் கோலத்தில் காட்சி தருவதாக அவருக்குச் சிவனார் ஆறுதல் கூறினார். திருவான்மியூரில் அதே காட்சியைக் காணக் குறுமுனி விழைந்தார். ஈசனும் வன்னி மரத்தடியில் அந்த அற்புதமான காட்சியைக் காட்டினார். ஆனகம், படகம், தாளம், துந்துபி, தடாரி, மல்லாரி, வீணை, முரசு, பேரிகைகள் போன்ற வானுலக இசைக் கருவிகள் காதுகளுக்கு விருந்தளித்தன. சித்தர், கந்தர்வர், தேவர், கின்னரர், போகர், வித்யாதரர், யோகர், வேதவித்தகர்கள், தவசிகள் ஆகியோருடன் நாரதர், தும்புரு, கருடன் ஆகியோரும் இறைவனைப் போற்றி வணங்கினர். வானுலக நடனமாதர்கள் நடனம் புரிந்தனர். வானவர்கள் மலர்மாரி பொழிந்தனர். பொற்குடை, ஆலவட்டம், கவரி, நெருப்புப் பந்தம் ஆகியவற்றுடன் தொண்டர்கள் காட்சி யளித்தனர். நந்திதேவர் அனைவரையும் மேற்பார்வை யிட்டார்.

மயிலையொத்த எழிலான தோற்றத்துடன் உமையன்னை அழகு நடைபுரிந்தார். அவரது திருவுருவம் பேரழகின் பிரதிபிம்பமாகவே விளங்கியது.

''அனநடை பாசிக் கூந்தலல்கிய துடி மருங்குல்
வனமுலை நுதல் வெண்மூரல் வளைகமுத் தொண்கணீலந்
தனமலை குமுதச் செவ்வாய் தனித்துடையரம்பை யென்னா
வனமுடைத் தோகையம்மை மதர்வொடு ஞாங்கர்மேவ''

அரனாரின் தோற்றம் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாக அமைந்திருந்தது. திருமுடியைக் கங்கை, ஊமத்தை, கொன்றை ஆகிய பொருட்கள் அலங்கரித்தன. முக்கண்கள் பேரொளியை வழங்கின. உலகிலுள்ள மங்கையர்களின் திருமாங்கல்யத்திற்கு உத்திரவாதம் வழங்கும் பொருட்டுக் கழுத்தில் நஞ்சையடக்கிய கண்டத்துடனும், மான், மழு, திரிசூலம், துடி ஆகியவற்றை ஏந்திய கரங்களுடனும் தோன்றினார். மார்பில் முப்புரி நூலும், தோள்களில் மலர்களும், இடையில் புலித்தோலான ஆடையும்,

நெற்றியில் திருநீறும், கழுத்தில் உருத்திராக்கமும் துலங்கின. சுற்றிலும் இசை, தோத்திரங்கள் ஆகியன ஒலித்தன. நற்கதியை வழங்கக்கூடிய திருவடிகளையுடைய அரனார் அணங்குடன் அரியாசனத்திலமர்ந்தார்.

வன்னிமரத்தடியில் நீலகண்டரின் திருமணத் தோற்றத்தைக் கண்ட அகத்தியர் பேருவகையடைந்தார். காணற்கரிய இக்காட்சியைப் புகழ்ந்து மடக்கு, யமகம், பதுமபந்தம், அஷ்டநாகபந்தம், இரதபந்தம், கோழத்திரி, சுழிகுளம், திரிபங்கி, காதை கரப்பு, மாத்திரச் சுருக்கம், பிறிது படுபாட்டு போன்ற பலவகையான சித்திரக்கவிகளை இயற்றினார்.

''இன்னவாறெந்தை யீசனெழிற்றிரு மணக்கோலத்தை
யன்ன நீரகணி துன்னு மரியதொன் வ...ன்மியூரிற்
பன்னரு நியக்குரோதம் பராவிய வன்னியின் கீழ்
மன்னிடத் தரிசித் தேத்தி வாழ்த்துவன் றமிழ்தேர் கும்பன்''

மதியொரு கலையாய் சூலமழுதுடி கலையாய் திக்குப்
பதியவை கலையாய் பாய்மா பருவுரி கலையாய் ஞான்றுந்
துதிமறைக் கலையாய் மார்பிற் துவன்றிடு கலையாய் வேகக்
கதிவிடைக் கலையாய் வெண்மைக் கதிருமிழ்
கலையாய் போற்றி

சங்கர சங்கரத் தானயனாதியர் சாற்றுகுழைச்
சங்கர சங்கரத் தாலடர்த் தாண்டவன் றாதை தமிழ்ச்
சங்கர சங்கரத் தந்திகழ் வான்மியூர்த் தாண்டவனற்
சங்கர சங்கர வென்பார்க் கருளுவன் றன்சரணே

சாலாக ஞாலுந் ததைந்த வொண் செஞ்சடையின்
மேலாக கங்கை விரவிநிதம்—போலாகப்
பாலாய கிரொர்பன்னி பாகுற நீ
மாலோடு மாலாகி வாழ்ந்ததிறும் பூது.

**பிருங்கி முனிவர் பேறுபெறல்**

சிவனடியார்களின் உள்ளத்தைப் போலவே தூய்மை மிக்க கயிலைமலையின் ஒரு பகுதியில் பிருங்கி முனிவர் தவக்குடிலை யமைத்து ஈசனை வழிபட்டு வந்தார். ஒருநாள் அவரது சிந்தனை சிவபெருமானின் பெருமைகளைப் பற்றிச் சுழன்றது. ''உயிர்களாகிய பசுக்களுக்கு உரிய இன்பங்களையளித்து உரிய காலத்தில் தனது திருவடிகளில் தஞ்சமடையச் செய்பவர் ஆலமுண்டகண்டர் ஒருவரேயாவர். குணமிலாத சிவனே குணமாகவும் குணியாகவும் விளங்குகிறார். எனவே அவரை மட்டும் வணங்கினால் போதுமானது'', என்று பிருங்கி முனிவர்

எண்ணினார். கயிலையில் பெருமானுக்கருகேயமர்ந்துள்ள பார்வதியை வணங்காமல் அரனாரை மட்டும் பிருங்கி வழிபட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். இந்த வினோதமான செயலைக் கண்ட பார்வதி வேண்டிக் கொண்டவாறு மாதொரு பாகனாகவே ஈசர் காட்சியளித்தார். அப்போதும் இருவருக்குமிடையே ஒரு துவாரத்தை ஏற்படுத்திய பிருங்கி முனிவர் சிவபாகத்தை மட்டுமே வழிபட்டார். இதனால் வெகுண்ட உமையன்னை பிருங்கி முனிவரின் சக்தியனைத்தையும் கவர்ந்து கொண்டார். சாபத்தின் விளைவால் நடக்கக் கூட இயலாமல் தள்ளாடிய பிருங்கி முனிவருக்கு அரனார் ஒரு ஊன்றுகோலை அளித்தும் அவரால் சரியாக நடக்க இயலவில்லை. அரனார் முனிவருக்கு அவர் புரிந்த தவறைச் சுட்டிக் காட்டினார். "காரணமும, காரியமும் ஒன்றாகச் சேர்ந்தே எச்செயலையும் இயக்குகின்றன. காரியமாகிய அன்னையை அலட்சியப்படுத்தி விட்டுக் காரணமான சிவனாரை மட்டும் வழிபடுவது முறையற்றது", என்ற உண்மையைச் சிவபெருமான் உணர்த்தினார்.

"நீ மறையொருங்கு தெளிந்திருந்து மந்தணத்தை
யோர்ந்தாயில்லை
பங்கில் வாழ்சத்தியினைப் பணியாது பாவமது பரித்திட்டிந்நா
ளங்கம் வெண்ணங்கம தாயழ கொருவிய வலனாயாகினாயால்

காரண காரியமென்னாக் கதிரொளி
போற்சமவாயங்கதிக்குமியாவுங்
காரணங்கள் சூக்குமமாக் காரியமே தூலமெனக்கருன்று நிற்குங்
காரணத்திற் காரியம் வந்தில
தென்னிலெவ்வினையுங்கணித்தல் கூடா
காரணத்தினைக் கருதிக் காரியத்தைக் கைவிடுதல் கனமதன்றே

காரியந்தனைக் கொண்டே காரணத்தினைத்
தேருங்கடப்பாடுற்றுங்
காரியத்தைத் தணந்திட்டாற் காரணத்தாற்
சிறிதளவுங் கடத்தலேலா
காரியமே காரணத்தினும்வலிதாமெவற்றினையுங் காட்டலாலே
காரியமே நலமனைத்து மடைந்திடற்குக் காரணமாக்
கழறலாமால்"

தனது தவறையுணர்ந்த பிருங்கி அதற்குப் பரிகாரம் காண முற்பட்டார். சிவபெருமானை மனதாரப் பூசிப்பதே உரிய மார்க்கம் என உணர்ந்த முனிவர் திருவான்மியூரின் பெருமைகளைக் கேட்டறிந்து, அதுவே தனது வழிபாட்டிற்கு ஏற்ற தலம் என்று முடிவு செய்தார். பூவுலகிலுள்ள பல

திருத்தலங்களில் வழிபட்டவாறும், பல புனிதப் புனல்களில் நீராடியவாறும் திருவான்மியூருக்கு மேற்குத் திசையிலமைந்துள்ள ஒரு குன்றையடைந்தார்.

திருவான்மியூரின் பெற்றியைச் சூதமுனிவர் மூலம் அறிந்த நைமிசாரண்யத்தைச் சேர்ந்த பல தவசிகள் அவ்வூரை நோக்கிப் பயணமானார்கள். குன்றின் மீது தங்கியிருந்த பிருங்கி முனிவரைச் சந்தித்தனர். பிருங்கி முனிவரும் நைமிசாரண்யத்து ரிஷிகளும் ''நாயகம் வாய்ந்த தெய்வ வான்மியூர்'' தலத்தையடைந்தனர். வானைத் தாங்கும் கோபுர வாயிலைப் போற்றியபின் ''சோதி நற்தீர்த்தங்களில்'' நீராடி ஆகம முறைப்படிச் சிவச் சின்னங்களைத் தரித்தவாறு பஞ்சாக்ஷர மந்திரங்களை ஓதிக்கொண்டு ஆலயத்தினுள் நுழைந்தனர். 'ஞான வள்ளலாக விற்றிருக்குங் குலவிடும் வான்மியூரின் கொழுந்தான' மருந்தீசனைப் பூசித்தனர்.

''திருத்தலர்கண் மூவெயிலைச் சிகிவிழியினான் விழுங்கி
யிருந்தவர் முத்தகுவருழைய'ந ணோக்கந் தானருளி
வருந்திய விண்ணவர் வீமம் வல்லியுற வாழ்வளித்த
மருந்தீசன் றனையுன்னா மனமென்ன மனமே
மகதேவன் றனையுன்னா மனமென்ன மனமே

பொங்காழிக் கூபுரந்து போந்தமாவலி முன்னர்ச்
சங்காழி மாலண்மித் தாலமூ வடியிரந்தே
யங்காய்ந்து லகளந்தோ னவன்வெரிநென் பினைக்கவர்ந்த
கங்காளன் சீர்கேளாக் காதென்ன காதே
கயிலையோன் சீர்கேளாக் காதென்ன காதே

இம்மையினு மம்மையினு மெம்மையினு மேபுணர்ந்து
செம்மையுறச் சேதனர்க்குத் திருவருளைத் துய்ப்பிக்குஞ்
செம்மலென வெஞ்ஞான்றுஞ் சீர்த்தியுற வேயெழூஉ
மைம்முகனா லயஞ்சூழா லடியென்ன வடியே
யனந்தனா லயஞ்சூழா வடியென்ன வடியே''

இவ்வாறு அனைவரும் துதித்த பின்னர் அனைவரும் பிருங்கி மலையை அடைந்தனர். சில நாட்கள் காலையில் பிருங்கிமலையிலும், மாலையில் திருவான்மியூரிலும் வழிபட்டவாறு காலம் கழித்த பின்னர் பிருங்கி முனிவரும், பிற தவசிகளும் தங்களது இருப்பிடத்தையடைந்தனர். பிருங்கி முனிவர் தவம்புரிந்த பிருங்கிமலை இன்று பரங்கிமலை எனப்படுகிறது. பங்குனி பிரம்மோற்சவத்தின் நான்காம் நாளன்று பிருங்கி முனிவருக்கு அருளிய வைபவம் கொண்டாடப்படுகிறது.

# 4. வரலாற்று நோக்கில் திருவான்மியூர்

தமிழகத்திலுள்ள பிற ஆலயங்களைப்போலவே திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலின் வரலாற்றையும் தொடர்ச்சியாக எழுதுவதற்குப் போதுமான ஆதாரங்களோ, தகவல்களோ கிடைக்கவில்லை. கிடைத்துள்ள ஒரு சில சான்றுகளைக் கொண்டு இக்கோயிலின் வரலாற்றுச் சிறப்பை ஓரளவு வெளிப்படுத்தலாம், அதிக அளவில் இலக்கியச் சான்றுகளே உள்ளன. இச்சான்றுகளை முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலாது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் திருவான்மியூர் ஆலயம் பற்றிய தகவல்கள் இல்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இத்தலத்திற்கு வருகை தந்து திருவான்மியூர் ஈசன்மீது பதிகங்களைச் சூடியுள்ளனர். திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் என்ற மாறவர்மன் இராஜசிம்மனின் (கி.பி.640-690) கூனை நீக்கிச் சமணர்களை வென்றார் திருநாவுக்கரசர்குணபரன் எனப்பட்ட முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600-630) புரிந்த கொடுமைகளை ஏற்று, அரசனையும் சைவ சமயம் தழுவச் செய்தார். மகேந்திரவர்மனின் மகனான முதலாம் நரசிம்ம வர்மனின் தானைத் தளபதியான பரஞ்ஜோதி அரசியலைத் துறந்து சிறுத்தொண்டநாயனார் என்று பெயர் பூண்டவுடன் அவரைத்திருநாவுக்கரசர் சந்தித்தார். சமகாலத்தவரான திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவான்மியூருக்கு வருகை புரிந்து வழிபட்டுள்ளதால் அவர்களது காலமான கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இவ்வூர் ஒரு சிறந்த வழிபடு தலமாக இருந்ததாக அறியலாம்.

பிற்காலத்தில் சோழர்களின் ஆட்சியில் ஆலயங்களுக்கும், பிற கலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் புதிய ஆலயங்கள் கட்டுதல், பழைய கோயில்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல் ஆகிய செயல்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. தொண்டை மண்டலம் சோழர்களின் ஆட்சிக்குட்பட்டபோது

அப்பகுதியிலுள்ள ஆலயங்களுக்கும் போதிய ஆதரவு அளிக்கப் பட்டது. தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியான திருவான்மியூரில் உள்ள சிவாலயத்திற்கும் சோழ அரசர்களின் ஆதரவு கிடைத்தது. திருவான்மியூர் ஆலயத்தில் திரிபுரசுந்தரி அம்மனின் கருவறையின் புறச்சுவரிலுள்ள ஏழு கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. முதலாம் இராஜேந்திரன், (1011-43). இராஜாதிராஜன் (1018-52), இராஜேந்திரசோழ தேவன் (1050-63) ஆகிய சோழ மன்னர்கள் காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டுகள் சில தகவல்களை அளிக்கின்றன. கி.பி. பதினொன்று முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை திருவான்மியூர் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலந்தங்கள் பற்றிய சில விவரங்களைச் சென்னையிலுள்ள பிற ஆலயங்களில் இடம் பெற்றுள்ள வேறு சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சோழமன்னன் அநபாயனின் (இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133-1150) அமைச்சரான அருள்மொழித்தேவர் (பின்னர் சேக்கிழார்) சிவனடியார்களின் வரலாற்றை விளக்கும் காப்பியமான திருத்தொண்டர்புராணத்தை இயற்றினார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் திருவான்மியூரில் வழிபட்ட நிகழ்ச்சியை அவர் குறிப்பிடுகிறார். அவரது பாடல் களில் வரும் 'மிக்குயர்கோபுரம்' 'மணித்தட நெடுங்கோபுரம்' ஆகிய குறிப்புகள் இத்தலத்தில் பெரிய கோபுரம் இருந்ததாகத் தெரிவிக்கின்றன. இந்த விவரங்கள் மூலம் சோழர் காலத்தில் திருவான்மியூர் ஒரு சிறந்த திருத்தலமாக விளங்கியதாக அறியலாம். பிரபுதேவராயன் என்ற விஜயநகர அரசரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் சிறந்த முருகபக்தா. முருகனையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு அனைத்துத் திருத் தலங்களுக்கும் சென்று அங்கு எழுந்தருளியுள்ள வேலவனைப் போற்றித் துதித்துள்ளார். திருவான்மியூர் மருவு முருகப் பெருமானைப் போற்றி அவர் இயற்றிய ஒரே பாடலில் 'மாகமுற மணிமாளிகை மாடமுயர் திருவான்மியூர்' என்று இத்தலம் பரவப் பட்டுள்ளது. எனவே, கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தலம் சிறந்து விளங்கியதாக அறியலாம்

நாயக்க மன்னர்களின் காலத்தில் வாழ்ந்த அப்பைய தீக்ஷதர் (1554-1626)என்ற சைவஞானி வேதச்சிரேணி (இன்றைய வேளச்சேரி)யில் தங்கி யாகம் நடத்தியதாகவும், நாள்தோறும் திருவான்மியூருக்கு வருகை தந்து மருந்தீஸ்வரரை வழிபட்ட தாகவும் செவிவழிச் செய்தி வழக்கிலுள்ளது. அப்பைய தீக்ஷிதர், அவரது பத்தினியார் ஆகியோரின் திருவுருவங்கள் திருவான்மியூர் ஆலயத் தூண்களில் இடம் பெற்றுள்ளதாகவும் கூறுவர்.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த மகான்களான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839-98), பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (1850-1929), உமாபதி சிவாச்சாரியார், வள்ளலார் இராமலிங்க அடிகள் ஆகியோரும் வேறு பல தமிழ் வல்லுனர்களும் திருவான்மியூர் மீது பாடல்களைப் புனைந்துள்ளனர். இவற்றின் மூலம் திருவான்மியூர் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரை சிறந்த வழிபாடுதலமாக இருப்பதை அறியலாம்.

### அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள்:-

பிற முக்கிய ஆலயங்களைப் போலவே திருவான்மியூர் திருக்கோயிலும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டபோதிலும் அத்திருப்பணிகள் பற்றிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் மிகவும் பழுதுபட்டிருந்த ஆலயத்தைத் திரு. இராமன் செட்டியார் குடும்பத்தினர் புதுப்பித்து 1913 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடத்தினர். அச்சான்றோர் கோயிலுக்காக அளித்துள்ள மானியங்கள் 'இராமன் செட்டியார் கட்டளை' என்ற பெயரில் தனியாக நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. 1961 ஆம் ஆண்டில் ஆலயத்தின் சில பகுதிகள் புதுப்பிக்கப் பட்டுக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 1969 ஆம் ஆண்டில் திருக்குளம் செப்பனிடப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சுவாமி, அம்மன் சந்நிதி விமானங்கள் செப்பனிடப்பட்டன. பிரகாரத்தைச் சுற்றி வருவதற்காகச் சீராக பாதை போடப் பட்டது. சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் நடந்து முடிந்த திருப்பணிகளுக்குப் பின் (காளயுத்தி ஆண்டு) 1979ஆம் ஆண்டு (தை மாதம்) பிப்ரவரி மாதம் முதலாம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

திருவான்மியூர் திருக்கோயிலின் முகப்பில் கோபுரம் இல்லாத குறையை நீக்க 1964-65 ஆண்டுகளில் ஒரு முயற்சி துவங்கப் பட்டது. அப்போது துவங்கப்பட்ட இராஜகோபுரம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் கிழக்கு வாயிலுக்கு வெளியே எலும்புக் கூடு போலத் தோன்றுகிறது. சற்று விலகி இருக்கும் இக் கோபுரத்தை வெளிப் பிரகாரத்துடன் இணைத்துள்ளனர்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புதிய கோபுரம் கட்டும் பணியைத் திருப்பணிக்குழு மேற்கொண்டது. காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன்

துவங்கிய இத்திருப்பணி நான்கு இலட்ச ரூபாய் செலவில் நிறைவுற்றது. இதற்கான குடமுழக்கு 12-2-1984 (ஞாயிறு) அன்று நடைபெற்றது. இம்முயற்சியின் விளைவாக எழுந்த ஐந்து நிலை கோபுரம் கிழக்கு வாயிலை அலங்கரிக்கிறது. இக்கோபுரம் கட்டி முடிக்கப்பட்ட ஒரு ஆண்டு காலத்திற்குள் மேற்கு வாயில் மீது புதிய ஐந்து நிலை இராஜகோபுரமும், விஜய கணபதியின் புதிய சந்நிதியும் எழுந்தன. சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்ற இத்திருப்பணிகளுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் 17-3-85 (ஞாயிறு) அன்று காஞ்சி சங்கரமடம் ஜெயேந்திர சரஸ்வதிசுவாமிகள் தலைமையில் குடமுழுக்கு நிறைவேறியது.

அண்மைக் காலத்தில் கோயிலின் உட்பகுதிகளை அழகூட்டும் பணி கட்டம் கட்டமாக நடைபெற்று வருகிறது. வெளிப் பிரகாரத்தைச் சுற்றி மலர்ச் செடிகளும் சிறு மரங்களும் நடப்பட்டுள்ளன. நடைபாதையைச் சுற்றி அழகிய விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன: தலவிருட்சத்திற்கு அருகேயிருந்த வெற்றிடத்தில் ஒரு சிறு நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது.

பல அன்பர்களின் உதவியுடன் பக்திப்பனுவல்கள் மண்டபச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. தட்சிணாமூர்த்தி சந்நிதிக்குக் கீழ் 'கல்லால மர நிழலில்' என்ற பாடலும் தியாகராஜர் சந்நிதி மண்டபச் சுவரில் தேவாரப் பதிகங்கள் சிவபுராணம் பாம்பன் சுவாமிகள் இயற்றிய பதிகம் ஆகியனவும், அம்மன் சந்நிதி வெளி மண்டபத்தில் லலிதா ஸஹஸ்ரநாமமும், முருகர் சந்நிதிக்கு முன்னர் அருணகிரிநாதரின் பாடலும் பொறிக்கப்பட்டுள்ளன.

# 5. கலைச் சிறப்பு

பழங்காலம் முதல் நமது ஆலயங்கள் வழிபடுதலங்களாக மட்டுமின்றிக் கலை, சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வித்திடும் கலைக்களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன. ஆலயங்களின் உட்பகுதிகளில் தேவைப்பட்ட இடங்களில் இறைவனின் பல்வகைத் திருவுருவங்களைச் சிற்ப வடிவில் இடம்பெறச் செய்வதன் மூலம் இறையுணர்வை வளர்ப்பதுடன் கலையையும் நம் முன்னோர்கள் பேணினர்.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள பரிவார தேவதைகளில் சிற்பங்கள் மிகவும் எழிலுடன் வடிக்கப் பட்டுள்ளன. அவற்றிற்கு முறைப்படி எண்ணெய் பூசிச் சுத்தம் செய்வதால் அவ்வுருவங்களின் வனப்பு குறையாமல் பொலிவுடன் திகழ்கின்றது.

தியாகராஜர், மருந்தீசர், திரிபுரசுந்தரி, முருகப்பெருமான் ஆகியோரின் சந்நிதிகளைச் சுற்றியும் முன்புறமும் அமைந்துள்ள மண்டபங்களைத் தாங்கும் தூண்களில் சில அபூர்வமான, நுண்ணிய சிற்பங்களைக் கண்டு இரசிக்கலாம். சைவ சமயம் மட்டுமின்றி வைணவத்துடன் தொடர்புடைய சிற்பங்களுக்கும் இங்கு இடமளித்திருப்பதால் முற்காலத்தில் சமய பேதங்களை மறந்து பரந்த நோக்கத்துடன் செயல்பட்டு வந்ததாக அறியலாம்.

விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் தங்களுக்கு உரிய வாகனங்களின் மீது அமர்ந்தவாறு பல பகுதிகளில் தோன்று கின்றனர். கண்ணப்பநாயனாரின் சரிதத்தை ஓரளவு விளக்கும் சிற்பம் தியாகராஜர் சந்நிதி மண்டபத்தூணில் உள்ளது. தண்டாயுதபாணி, ஆஞ்சநேயர், லிங்கத்திற்குக் குடைபிடிக்கும் நாகம் ஆகியோரை இதே மண்டபத் தூண்களில் காணலாம். சுவாமி சந்நிதி அமைந்துள்ள மண்டபத்தின் தூண்களில் சிவபெருமானை வழிபடும் அடியார் தனது பத்தினியுடன் காட்சியளிக்கின்றார். மற்றொரு தூணில் காமதேனு பால் சொரிந்து ஒரு லிங்கத்தை வழிபடும் காட்சியைக் காணலாம்.

அம்மன் சந்நிதி வெளிமண்டபம் ஒரு சிற்பக் கூடமாகவே காட்சியளிக்கிறது. இம்மண்டபத்தின் முகப்பிலுள்ள தூண்களை பிரம்மாண்டமான குதிரை வீரர்கள் அலங்கரிக்கின்றனர். காலைத் தூக்கியவாறு பாயும் நிலையிலுள்ள குதிரைகளின் அணிகள் முதல் அனைத்து விவரங்களும் தத்ரூபமாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஆயுதமேந்திய சில வீரர்கள் நின்றவாறு காட்சியளிக்கின்றனர். சிம்மத்தின் மீது அமர்ந்துள்ள சில வீரர்களும் இங்கே இடம்பெற்றுள்ளனர். இவை விஜயநகர மன்னர்கள், நாயக்கவேந்தர்கள் ஆகியோர் காலத்துக் கலைப் பாணியை நினைவுறுத்தும்.

சர்ப்பத்தின் மீது நடனமாடும் விக்னேஸ்வரர், மாதொருபாகன். இடபவாகனத்தில் உமையன்னையுடன் அமர்ந்துள்ள சிவபெருமான் தென்முகக் கடவுள், அம்பலவாணர் நின்ற, அமர்ந்த ஆகிய கோலங்களில், தோன்றும் அம்மன், சங்கு, சக்கரம், கதாயுதம் ஆகியவற்றுடன் காட்சியளிக்கும் 'திருமால்' கோவர்த்தன கிரிதாரி, காளியமர்த்தனர், வேய்ங்குழலாதும் வேணுகோபாலன், மச்சாவதாரமூர்த்தி ஆகிய தெய்வீகச் சிற்பங்களை அம்மண்டபத் தூண்களில் காணலாம். ஒரு தூணில் இரணியனை சம்ஹாரம் செய்யும் நரசிம்மரும் அதற்குப் பின்புறத்தில் நரசிம்மரின் உக்கிரத்தையடக்கும் சர( )ஸ்வரரும் சிற்பவடியில் இடம் பெற்றுள்ளனர். இவை தவிர சிகையலங்காரம் செய்யும் மகளிர், நடனமாடும் மாதர், ஆகியோரையும் தூண்களில் காணலாம்.

இதே மண்டபத்தின் உச்சியில் மூன்று சிற்பத் தொடர்களைக் காணலாம். சக்கர வடிவிலமர்ந்துள்ள தேவியைச் சுற்றி அம்மனின் பதினாறு வகையான திருக்கோலங்களும் தேவகணங்கள், விநாயகர் ஆகியோரும் தோன்றுகின்றனர். மற்றொரு தொடரில் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் அடியாரைச் சுற்றிப் பல சிவனடியார்கள் தோன்றுகின்றனர். மற்றொரு தொடரில் நடனமாடும் மாதர்களும்இசைக்கருவிகளை இசைக்கும் இசைவாணர்களும் இக்காட்சிகளைக் கண்டு களிக்கும் தேவகணங்கள், இயக்கர்கள், கந்தர்வர்கள், தவசிகள் ஆகியோரையும் காணலாம். ஒரு தூணில் இடம் பெற்றுள்ள காமாட்சியம்மனுக்கு வஸ்திரம் சார்த்தி வழிபடுகின்றனர். அம்மன் சந்நிதி மண்டபத்தின் முகப்பில் தேவர்களும் அசுரர்களும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் மந்திர மலையை மத்தாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமுதமெடுக்கும் காட்சி துல்லியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இக்காட்சியை முனிவர்களும், வானவர்களும் கண்டு இரசிக்கின்றனர். இச்சிற்பத்தொடரில் அசுரர்கள் வானரமுகங்களுடன் தோன்றுகின்றனர். அம்மனின் சந்நிதி மண்டபத்திற்கு வெளியே கை கூப்பியவாறு தோன்றும் ஒரு அடியாரின் சிற்பம் பாதி மணலில் புதைந்தவாறு காட்சியளிக்கிறது.

### திருவிழாப் படிமங்கள்

இக்கோயிலில் நடைபெறும் விழாக்களின் போது பயன்படுத்தப்படும் உற்சவ விக்கிரகங்கள் சுவாமி சந்நிதி மண்டபத்தின் ஒரு பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வான்மீகர் சண்டேஸ்வரர், அஸ்திரதேவர், மகாவிஷ்ணு, மகாலக்ஷ்மி, கலியாணசுந்தரர், விநாயகர் நான்முகன், தேவாரம் பாடிய மூவர் பாவை விளக்கு செல்லியம்மன் ஆகியவர்களுடன் பிரபையுடன் அம்மன் சமேதராகத் தோன்றும் பிரதோஷ நாயகர் சந்திரசேகரர் சுப்பிரமணியர் ஆகியோரையும் இங்கு காணலாம் தியாகராஜர் சந்நிதியில் அம்மன் சமேதராகத் தியாகராஜரும் தனி அம்மனும் உள்ளனர். நடராஜ சபையில் நடராஜர் சிவகாமசுந்தரி, மாணிக்கவாசகர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவை தவிரத் திரு. இராமன் செட்டியார் கட்டளையைச் சார்ந்த சிறு நடராஜர் அம்மனுடன் சிறு பேழையில் வைக்கப்பட்டுள்ளார். பள்ளியறைச் சொக்கரும் அம்மனும் உரிய இடத்தில் அமர்ந்துள்ளனர். அம்மன் சந்நிதியின் ஒரு பகுதியில் சுக்கிரவார அம்மன் கோலம் கொண்டுள்ளார்.

### சுதைச் சிற்பங்கள்

இக்கோயிலின் கோபுரங்களிலும் விமானங்களிலும் மட்டுமின்றி மண்டபங்களின் முகப்பிலும் சுதையாலான வண்ணச் சிற்பங்களையமைத்துள்ளனர். திரிபுரசுந்தரியம்மனின் சந்நிதி முகப்பில் வாகனங்களின் மீதமர்ந்த விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோருடன் முப்பெருந்தேவியரும் காட்சி தருகின்றனர். விஜய கணபதியின் சந்நிதி விமானத்தைச் சுற்றி விநாயகரின் பல்வகையான திருவுருவங்களைக் காணலாம். முருகன் சந்நிதிக்கு மேல் வள்ளி தெய்வயானையுடன் மயில் மீதமர்ந்த குகப்பெருமானையும் தியாகராஜர் மண்டப முகப்பில் தனது குடும்பத்தினருடன் தோன்றும் சிவபெருமானையும் காணலாம். இரு ராஜகோபுரங்களிலும் துவாரபாலர், தென்முகக் கடவுள் நான்முகன், முருகன், சிவனடியார், தேவகணங்கள் ஊர்த்துவ, தாண்டவர் ஆகியோரில் பல உருவங்கள் இடம் பிடித்துள்ளன.

# 6. கல்வெட்டுகள்

## திருவான்மியூர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுகள்

### 1. எண். 77 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் மேற்குப்புறச் சுவரின் வெளிப்புறம்.

***காலம்*** : சோழமன்னன் பரசேசரி வர்மன் எனப்படும் உடையார், ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவனின் (1011-43) பதினான்காம் ஆட்சியாண்டு.

***செய்தி*** : ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தின் உட்பிரிவான கோட்டூர் நாட்டிலுள்ள தேவதான மான திருவான்மியூரிலுள்ள மகாதேவர் ஆலயத்தில் விளக்கெரிப் பதற்காக ஆடுகளைக் கொடையளித்த செய்தி.

### 2. எண். 78 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் மேற்குப்புறச் சுவரின் வெளிப்புறம். கல்வெட்டு சிதைந்துள்ளது.

***காலம்*** : இராஜகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜாதிராஜதேவரின் (1018-52) இருபத்தேழாம் ஆட்சியாண்டு.

***செய்தி*** : ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தின் உட்பிரிவான கோட்டூர் நாட்டுத் தேவதானமான திருவான்மியூரிலுள்ள மகாதேவர் ஆலயத்திற்கு நிலதானம் அளித்த செய்தி.

### 3. எண். 79 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறத்தில் உள்ளது.

***காலம்*** : உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவரின் முப்பத்து மூன்றாம் ஆட்சியாண்டு. கல்வெட்டு முழுமையாக இல்லை.

## 4. எண். 80 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறம்.

***காலம்*** : பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவரின் *(1050-63)* பதினொன்றாம் ஆட்சியாண்டு.

***செய்தி*** : திருவான்மியூரைச் சேர்ந்த சிவபிராமணர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5. எண். 81 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறப்.

***காலம்*** : பரகேசரிவர்மன் எனப்படும் இராஜேந்திர சோழ தேவரின் *(1011-43)* ஆறாம் ஆட்சியாண்டு.

***செய்தி*** : திருவான்மியூர் மகாதேவர் கோயிலில் மாலை தொடுப்பதற்காகக் கொடை அளித்த செய்தி.

## 6. எண். 82 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி கோயில் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்பகுதி.

***காலம்*** : பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவரின் *(1011-43)* காலம். கல்வெட்டு முழுமையாக இல்லை.

***செய்தி*** : திருவான்மியூர் மகாதேவர் கோயிலில் வழிபாடு, காணிக்கை ஆகியவற்றிற்காகப் பொருளும், நெல்லும் தானமாக அளித்த செய்தி.

## 7. எண். 83 ஆண்டு 1909

***இடம்*** : திரிபுரசுந்தரி கோயில் கருவறையின் கீழ்ப்பகுதி.

***காலம்*** : பரகேசரிவர்மன் எனப்படும் இராஜேந்திர சோழ தேவனின் *(1011-43)* காலம். கல்வெட்டு சிதைந்துள்ளது.

***செய்தி*** : மன்னனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவான்மியூர் மகாதேவர் ஆலயத்தில் வழிபாடு நடைபெற நெல்லும், பொருளும் அளித்ததாகத் தெரிகிறது.

## தற்காலக் கல்வெட்டுகள்

திரிபுரசுந்தரி சந்நிதியின் முன்மண்டபத்தில் பதிக்கப்பட்டுள்ள 5 கல்வெட்டுகள் அண்மைக்காலத்திலளிக்கப்பட்ட சில கட்டளைகள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கின்றன.

1. 1933ஆம் ஆண்டு செங்கல்பட்டு ஜில்லா. சைதாப்பேட்டை தாலுகா 140 நெ,சு, திருவான்மியூர் கிராமத்தில் சந்நிதி வீதியில் கிழண்டை வாடையில் செங்குந்த மரபினர் ஸ்தாபனம் செய்த சத்திரத்தின் கிழண்டைபுறம் செங்கல் சுவர் கட்டப்பட்டு, தேக்கு பனங்கழி சாற்றப்பட்ட இடம் (வ. தெ. அடி 15; கி. மே. அடி 30). செங்குந்த மரபினர் உற்சவ காலத்தில் தங்குவதற்காக கட்டப்பட்டது, பிரம்மோற்சவத்தின் போது துவஜாரோகணத் திற்காக வெகு காலமாக இதே மரபினர் கொடிசீலைகள், விருகன் போன்றவற்றையளித்து வந்தனர். இக் கைங்கரியம் நின்று விட்டதால் தொடர்ந்து நடந்துவதற்காக இதே மரபைச் சேர்ந்த பவழ முருகேசன், பவழ ராஜு ஆகியோர் 250 ரூபாயைத் தேவஸ்தான தர்ம்கர்த்தாவாகிய திரு. வூ. சுப்பராய செட்டியாரிடம் கொடுத்துப் பதிவு செய்தனர். இக்கைங்கரியத்தை சூரியாள். சந்திரரள் உள்ளவரை தேவஸ்தானத்தினர் தொடர்ந்து நடத்தி மாலை மரியாதைகளைக் கொடையளித்தவர்களுக்கும் அவர்களது வகையறாக்களுக்கும் அளிக்க வேண்டும் என்று 1-5-1933 அன்று சிலஸாஸனம் செய்யப்பட்டது.

2. சாலிவாகன சகாப்தம் 1822, கலியுகாதி 500ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 13ம் நாள் இராயப்பேட்டை பஜார் தெரு மூன்றாம் எண்ணுள்ள வீட்டில் வசிக்கும் ஜென்ம மகாரிஷி கோத்திரத்தைச் சார்ந்த காத்தவராயனின் குமாரன் பச்சையப்பன் என்பவர் அவருக்குச் சொந்தமான மனை, வீடு ஆகியவற்றை (மெளடரீஸ் தெரு, மேலாண்டை வாடை 61வது எண்) வரும்படிகளைக் கோயிலுக்குத் தானமாக அளித்தார். இவ்வருமானத்தை இக்கோயிலில் மாதமிருமுறை நடைபெறும் பிரதோஷ விழாவிற்காக உபயோகம் செய்யுமாறு சிலசாஸனம் செய்துள்ளார். கோயில் தர்மகர்த்தாக்கள் இச் சொத்தில் ஒரு சிறு பகுதியைத் தனது சொந்த பிரயோசனத்திற்குப் பயன்படுத் தினால் தேவாலயத்தில் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தையணைப் பவர்கள் பெறும் பாவத்தை அடைவர்.

3. கலியுகாப்தம் 5006, சாலிவாகன ஆண்டு 1827, ஆங்கில ஆண்டு 1904, நவம்பர் மாதம் 25-ஆம் நாள் திருவான்மியூர் தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவத்தின் பத்தாம் நாளன்று நடைபெறும் வான்மீகி நடன வைபவத்திற்காக சேன்வண சாணிகுளம்

கட்டை தொட்டி அடத்தி வியாபாரிகள் அளித்த பொருளைக் கொண்டு வாங்கிய 1106 ச.அடி சதுரக்குழி மனை, அதன்மேல் கட்டப் பட உள்ள கட்டுக்கோப்பு, (பெத்தனு பேட்டை முத்துகிருஷ்ணன் தெரு) ஒரு வீடு ஆகியவற்றைத் தானமாக அளித்துச் சிலசாஸனம் செய்துள்ளனர்.

4. அர்த்தஜாம வழிபாடுகளுக்காக அளிக்கப்பட்ட கொடையை விவரிக்கும் கல்வெட்டு எளிதில் படிக்கும் நிலையில் இல்லை.

5. சாதாரண ஆண்டு ஆடித் திங்கள் பதினாறாம் நாள் (1-8-1970) மயிலை மத்ள நாராயணன் தெரு 3ம் எண்ணுள்ள வீட்டிலுள்ள ம. சம்பந்த முதலியாரின் மனைவியான சிவகாமி அம்மாளின் விருப்பத்திற்கிணங்க மாதந்தோறும் கிருத்திகை நாளன்று வள்ளி,தேவசேனா சமேதரான சுப்பிரமணிய சுவாமிக்கு வீதியுலா உற்சவம் நிரந்தரமாக நடைபெறுவதற்காக ரூ. 6000/- திருமயிலை ஸ்ரீமத் தோப்பா சுவாமிகள் தரும பரிபாலன சங்கத் தினரிடம் அளிக்கப்பட்டது. அதிலிருந்து அச்சங்கத்தினர் மாதந் தோறும் அளிக்கும் ரூ. 55/- கொண்டு உற்சவத்தை நடத்தி மாலை மரியாதைகளைக் கொடையாளரின் வாரிசுதாரர்களுக்கு அனுப்ப வேண்டும்.

## சென்னையில் பிற ஆலயங்களில் திருவான்மியூர் பற்றிய கல்வெட்டுகள்

1. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலில் உள்ள ஆறு கல்வெட்டுகளில் திருவான்மியூர் பற்றிய குறிப்பு உள்ளது. இவை கி.பி. பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுந்தன. கோட்டூர் நாட்டில் திருவான்மியூர் இடம் பெற்று உள்ளது. கழுமலவூரர் என்பவர் பரிசாக அளித்த புதிய நற்காசு களைக் கொண்டு திருவான்மியூர் ஆலயத்தில் சில நிவந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. திருவான்மியூர் உலகாளுடைய நாயனா ருக்கு நுந்தா விளக்கெரிக்க முப்பது பசுக்களும் ஒரு காளையும் அளிக்கப்பட்டன. பூசைக்கும் திருப்பணிக்கும் கொடை வழங்கப் பட்டன. நிலமும், பசுவும் தானமாகக் கொடுக்கப்பட்டன.

2 மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலில் திருவான்மியூர் பற்றிய மூன்று கல்வெட்டுகள் கிடைத்துள்ளன, இவை பன்னி ரண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் பொறிக்கப்பட்டன. திருவான்மியூர் உலகாளுடைய நாயனா ருக்கு இரண்டு விளக்குகள் எரிப்பதற்காக மயிலையைச் சார்ந்த தண்டிப் பிடிக்கோன் என்பவர் அளித்த கொடையான 22 ஆடு கள் பயன்படுத்தப்பட்டன. திருவான்மியூர் இடையன் மருது

என்பவன் கொடை அளித்தான். பூர்வ பச்ச மச்ச முத்திராதிபதி பிரதாப தேவராயர் (விஜய நகர மன்னர்) ஆட்சியில் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த உலகாளுடைய நாயனா ரின் பண்டாரத்திற்குக் கொடையளிக்கப்பட்டது.

3. மயிலாப்பூர் விருபாக்ஷீஸ்வரர் ஆலயத்தில் வீரராஜேந்திர சோழனின் காலத்தில் (பதினொன்றாம்நூற்றாண்டு)எழுதப்பட்ட ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது. திரிபுவனச் சக்கரவர்த்தி வீரராஜேந்திர சோழனின் ஆட்சியில் வீரராஜேந்திர சோழ மண்டலத்துப் புலியூர் கோட்டத்திலுள்ள உலகாளுடைய நாயனாருக்குக் குமாரந்தைதேவன் என்பவன் இரண்டு ஆடுகளைக் கொடையளித்த செய்தியை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

4. மயிலாப்பூர் வாலீஸ்வரர் திருக்கோயிலில் பன்னிரண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்டுள்ள நான்கு கல்வெட்டுகளில் திருவான்மியூர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜராஜனின் ஆட்சிக் கல்வெட்டு மூலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துச் செம்பூற் கோட்டத்துப் பிறையூர்... யூரான ஜெயங்கொண்ட சோழநல்லூர் நெய்தல் வாயிலுடையான் ஒற்றி... வாமனதேவன் மலையப் பிராஜன் என்பவன் புலியூர்கோட்ட... ஆளுடையார் திருவான்மியூர் மருந்தாண்டாற்கு ஒரு நுந்தா விளக்கெரிக்க ஒரு காளையும், 32 பசுக்களும் வழங்கியதாக அறியலாம். புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுக் கோட்டூர் நாட்டில் திருவான்மியூர் அமைந்துள்ளதாக ஸ்ரீ ஸ்ரீ பெருமா... என்ற அரசனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக் கிறது. திருவான்மியூர் உடையார் உலகாளுடைய நாயனாருக்கு விளக்கெரிப்பதற்காக மலிகிழான் வடுகநாதன் தில்லைநாயகன் என்பவன் சிவபிராமணர்களிடம் மூன்று காசுகளை வழங்கிய தாகப் பல்லவச் சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கனின் காலத்தில் தோன்றிய கல்வெட்டு உரைக்கிறது. இதே அரசனின் ஆட்சியில் தோன்றிய மற்றொரு கல்வெட்டு மூலம் உலகாளுடைய நாயனார் கோயிலுக்கு ஒற்றி அரசன்... ஒரு நுந்தா விளக்கு எரிக்க நிவந்தம் அளித்ததாக அறியலாம்.

5. மயிலாப்பூர் காரணீஸ்வரர் கோயிலிலும் பன்னிரண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தில் தோன்றிய நான்கு கல்வெட்டுகள் திருவான்மியூர் பற்றிய தகவல்களை

யளிக்கின்றன. புலியூர்க் கோட்டத்து (திருவான்மியூர்) உலகாளுடைய நாயனாருக்குக் குமாரநந்தை தேவன் என்பவன் ஒரு சந்தி விளக்கு வைத்ததாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு தெரிவிக்கிறது. இதே நூற்றாண்டில் விக்கிரமதேவர் ஆட்சியில் திருவான்மியூருடையாருக்குச் சந்திராதித்தர் உள்ளவரை திருநுந்தா விளக்கெரிக்கச் சில சிவ பிராமணர்கள் கொடையளித்தனர். ஆளவந்த பிள்ளையான அன்னதாக நங்கை என்பார் கோட்டூர் நாட்டுத் திருவான் மியூரிலுள்ள உலகாளுடைய நாயனாருக்கு நான்கு பசுக்களையும் நான்கு கன்றுகளையும் கொடையளித்ததாக மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு அறிவிக்கிறது.

5. புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் ஆலயத்தில் கிடைத்துள்ள பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு மூலம் (ஜெயங்கொண்ட) சோழ மண்டலத்துப் புலியூர் நாட்டுத் திருவான்மியூரிலுள்ள உலகாளுடைய நாயனாருக்கு விளக்கு எரிப்பதற்காகச் சியான நீலகங்கரையன் என்பவன் கொடை யளித்ததாக அறியலாம்.

6. வேளச்சேரி தண்டீஸ்வரர் திருக்கோயிலில் மூலவரின் சந்நிதியின் வடபுறச் சுவரில் கிடைத்துள்ள கல்வெட்டின் மூலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சார்ந்த குலோத்துங்க சோழ வளநாட்டில் அமைந்துள்ள திருவான்மியூரிலுள்ள திருநாவுக்கரசர் திருமடத்திற்காகச் சேதிராய தேவன் என்பவன் ஜீனசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் எனப்பட்ட வேளச்சேரியில் உள்ள நிலத்தைக் கொடையாக வழங்கினான். இக் கல்வெட்டு மதுரையையும் பாண்டிய மன்னரின் தலையையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாம் குலோத்துங்க சோழ தேவரின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டது.

# 7. திருவான்மியூர் பற்றிய இலக்கியங்கள்

### தேவாரப் பதிகங்கள்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தலங்கள் தோறும் பயணம் செய்து ஈசன் மீது பதிகங்களை இயற்றினர். திருமயிலையில் அங்கம் பூம்பாவைக்கு உயிரளித்த பின் சம்பந்தர் திருவான்மியூர் வருகை புரிந்து இத்தலத்தின் மீது இரண்டு பதிகங்களை இயற்றினார். அவை இரண்டாம் திருமுறையிலும் மூன்றாம் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் மயிலைக்குச் செல்லுமுன் திருவான்மியூர் வந்து வான்மியூரீசனைத் துதித்துப் பாடிய ஒரு பதிகம் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

### சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் இயற்றிய சைவக் காவியமான திருத்தொண்டர் புராணத்தில் திருஞான சம்பந்தரின் திருவான்மியூர் வருகை ஆறு பாடல்களிலும் திருநாவுக்கரசரின் வருகை ஒரு பாடலிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

### அருணகிரிநாதரின் திருப்புகழ்

வாலிப வயதில் காமத்தில் அதிக நாட்டம் கொண்டு திருவண்ணாமலையில் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப் பட்டுக் கவிபாடும் திறன்பெற்ற அருணகிரிநாதர் முருகனையே முழுமுதற் கடவுளாகக் கருதினார். தலங்கள் தோறும் சென்று குகனின் புகழைப் போற்றி அவர் எழுதிய பாடல்கள் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் விருத்தம் என்று தொகுக்கப்பட்டுள்ளன. திருப்புகழிலுள்ள ஒரு பாடல் திருவான்மியூர் மருவு முருகப் பெருமானைத் துதிக்கிறது.

### வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839-98) இயற்றிய திருவான்மியூர்ச் சிவபெருமான் பதிகம்

நெல்லை மாவட்டத்தில் தோன்றிய சங்கரலிங்கம் சிறு வயதில் உலகியலில் ஈடுபாட்டைத் துறந்து முருகதாசர் என்ற பெயரைப்

பெற்றார். வள்ளிமலையில் சிலகாலம் தவம் புரிந்த பின்னர் இறுதிக் காலத்தில் விழுப்புரத்தையடுத்த திருவாமத்தூரில் சமூகத் தொண்டு புரிந்தார். திருப்புகழ் சந்தம் அமையப் பாடல்களைப் பாடியதால் திருப்புகழ் சுவாமிகள் என்ற பெயர் கிடைத்தது. பழனி, கந்தகோட்டம் போன்ற பதிகள் மீது பல சிற்றிலக்கிய நூல்களையும் திருவரங்கத் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், புலவர் புராணம், அருணகிரிப் புராணம் போன்ற பல நூல்களையும் சில இலக்கண நூல்களையும் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். திருவான்மியூர் ஈசன் மீது அவர் பாடியுள்ள பதிகம் சித்தாந்தம் என்ற மாத இதழில் (ஏப்ரல் 1966) வெளியிடப்பட்டுள்ளது.

**பாம்பன் குமரகுருதாசரின் பதிகம்**

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் திருவான்மியூரில் குடிகொண்டுள்ள முருகன் மீது விருத்தப் பாக்களாலான பதிகம் ஒன்றை இயற்றியுள்ளார்.

**அருள்மிகு சாதுராம் சுவாமிகள் இயற்றிய திருவான்மியூர் அருட்புகழ்**

3-2-1937 அன்று அவதரித்த சேதுராமன் என்பவர் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளிடம் திருப்புகழ்ப் பாடல்களை முறையுடன் பயின்றார். தனது சகோதரரான ஸ்ரீ வே. சுப்பிரமணியம் என்பவருடன் தனது குருநாதர் தொகுத்தளித்த 'திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறையை' இன்னிசையுடன் பாடிப் பரப்பி வந்தார். திருப்போரூரில் முருகப் பெருமான் ஒரு முதியவர் வடிவில் அருள்புரிந்து 'திருமுருகன் ஹர ஹரே ஹரக்கும்மி 108' என்ற பனுவலையளித்தார். 1969ஆம் ஆண்டில் திருமுல்லைவாயில் வைஷ்ணவியம்மன் ஆலயத்தில் துறவறம் பூண்டு 'அருள்மிகு சாதுராம் சுவாமிகள்' என்ற பெயரை ஏற்றார். திருப்புகழ்ப் பாடல்களைப் பரப்புவதுடன் சமயச் சொற்பொழிவுகளையும் இன்னிசை நிகழ்ச்சிகளையும் நடத்துதல், திருப்புகழ் பாடல் பெற்ற பதிகளில் அருணகிரிநாதர், திருப்புகழ் சுவாமிகள் ஆகியோரின் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தல் ஆகியவற்றை சுவாமிகள் புரிந்து வருகிறார். பல திருத்தலங்களின் மீது 15000 பாடல்கள் வரை பாடியுள்ளார். துறவறம் ஏற்பதற்கு முன் 29-5-1955 அன்று அருட்கவி சேதுராமன் என்ற பெயரில் திரிபுரசுந்தரியம்மன் சந்நிதியில் திருவான்மியூர் அருட்புகழ் என்ற பதிகத்தைப் பாடினார்.

### அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரர் இயற்றிய திருவான்மியூர்த் தலபுராணம்

பூவை கலியாணசுந்தரர் 10-1-1854 அன்று அண்ணாசாமி முதலியார், உண்ணாமலையம்மை ஆகியோரின் புதல்வராகப் பரங்கிமலையில் பிறந்தார். ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் கல்வி பயின்று சில காலம் ஒரு அலுவலகத்தில் பணியாற்றினார். அவ் வேலையை விடுத்துத்தமிழ் பயிற்றுவித்தல், சைவ சமயம் பரப்புதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டார். 1918ஆம் ஆண்டு சித்தாந்தம் என்ற சமய இதழின் பொறுப்பேற்றார். காஞ்சிபுரம் மெய்கண்ட சந்தான பீடம் தவத்திரு. ஞானப் பிரகாச சுவாமி களிடம் தீட்சை பெற்றுத் துறவறமும் யதீந்திரர் என்ற பட்டமும் பெற்றார். சிவனடியார் குழுவையும் சிவனடியார் தலயாத்திரைச் சங்கத்தையும் நிறுவினார். திருப்போரூர் புராணம், காளத்திப் புராணம், சேக்கிழார் சரித்திரம், சித்தாந்த தசக் காரியக் கட்டளை, சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்த வசன பூஷணம், யாப்பிலக்கணம் ஆகிய நூல்களை இயற்றினார். 'சித்தாந்த சரபம்' என்ற சிறப்புப் பெயர் இவருக்குக் கிடைத்தது. வெவ்வேறு வகைப்பட்ட எட்டு வகையான செயல்களை அவையில் புரிந்து அஷ்டாவதானம் என்ற பெயரையும் பெற்றார். இவரே வடமொழியிலுள்ள திருவான்மியூர்த் தலபுராணத்தைத் தமிழில் இயற்றியுள்ளார்.

### பெரியமேட்டு மோசூர் முனுசாமி முதலியார் இயற்றிய "திருவான்மியூர் வெண்பா அந்தாதி"

சென்னை பியர் அலுவலகத்தில் போக்குவரத்து மேற்பார்வை யாளராகப் பணியாற்றிய இவர் 'சிவனடியார்களில் திருக்கூட்டம்' என்ற ஆன்மிகக் குழுவில் இடம்பெற்றிருந்தார். இவர் இயற்றிய தொண்டை நாட்டுத் திருப்பதி க்ஷேத்திரக் கோவை என்ற நூல் திரட்டில் இத்தொகுதி இடம் பெற்றுள்ளது.

### ஈ. எஸ். வரதராஜய்யர் — திருவான்மியூர் கலித்துறை அந்தாதி

ஈ. எஸ். வரதராஜய்யர், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியிலும், அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகவும், பின்னர் சென்னை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் நூலகராகவும் பணியாற்றினார். இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளேடுகளில் நூல் விமரிசகராகவும் விளங்கினார். தமிழில் இலக்கிய வரலாறு, உழுவெழுபது, நேர் எழுபது, குமரகுருபரர் புகழ்மாலை, கம்பராமாயண யுத்த காண்ட விரிவுரை ஆகிய நூல்களை இவர் எழுதினார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஒருமுறை வலது கரத்தில் தீராத வலி தோன்றிப் பல காலம் துன்புற்றார். ஒருநாள் கனவில் குலதெய்வமான திருச்செந்தூர் ஈசன் தோன்றி வலது கரத்தில் திருநீறு பூசியவுடன் வலி நீங்கியது. நன்றிக் காணிக்கையாக வாவாப் பதிகம், வேல் பதிகம், மயில் பதிகம் ஆகிய மூன்று பதிகங்களை இவர் இயற்றினார். வரதராஜய்யர் இயற்றிய திருவான்மியூர் கலித்துறை அந்தாதியிலிருந்து சில பாடல்கள் இங்கு கொடுக்கப் பட்டுள்ளன.

**கா. ஆறுமுக நாயகரின் "மயிலை பாதி - வான்மியூர் பாதி"**

திருவல்லிக்கேணி அரிசி மண்டி வியாபாரியான கா. ஆறுமுக நாயகர் "மயிலை பாதி — வான்மியூர் பாதி கலித்துறை யந்தாதி" என்ற நூலை 1904 ஆம் ஆண்டில் இயற்றினார். இந் நூலிலுள்ள 100 பாடல்களுள் 50 பாடல்கள் திருமயிலை கபாலீச்சுரர் மீதும் 50 பாடல்கள் திருவான்மியூர் மருந்தீசர் மீதும் இயற்றப்பட்டுள்ளன. இப்பெருமான் தமிழ்ப் பண்டிதரான ப. தெய்வநாயக முதலியாரின் மாணவர்.

**காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய 'மருந்தீசர் சதகம்'**

பெரிய புராணம் போன்ற பல நூல்களுக்கு உரை எழுதிய இச் சிவனடியார் 1856 ஆம் ஆண்டில் இந் நூலை இயற்றினார்.

உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா, வெண்பாப் புலி தி. சு. வேலுசாமிப் பிள்ளை எழுதிய தேவார சிவத்தல வெண்பா ஆகிய இரு நூல்களிலும் ஒவ்வொரு பாடல் திருவான்மியூரின் தல மாண்பைப் போற்று கின்றன. திருவான்மியூரிலுள்ள மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் நூலகத்தில் 'சுவடிகளின் விளக்கம்' என்ற பட்டியலில் சொக்கநாயகியம்மைப் பதிகம் என்ற பாடல் உள்ளது. ஆசிரியர் எவர் எனத் தெரியாத இப்பாடல் திருவான்மியூர்ச் சொக்கநாயகியம்மனைப் புகழ்கிறது.

இந்தச் சிற்றிலக்கிய நூல்களிலிருந்து சில பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

குழந்தை இலக்கியக் கவிஞரும் ஆன்மிகச் செல்வருமான ம. ப. பெரியசாமித்தூரன், திருக்கோயில் இதழின் ஆசிரியரான டாக்டர் அமிர்தலிங்கம், இசைக் கலைஞர் என். எஸ். சிதம்பரம் ஆகியோர் திருவான்மியூரின் மீது பாடல்களைப் புனைந்து உள்ளனர்.

# 1. தேவாரத் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்தர் பதிகங்கள்

### முதல் பதிகம்

**இரண்டாம் திருமுறை** **பண்: இந்தளம்**

**வினாவுரைப் பதிகம் :**

ஒவ்வொரு பாடலிலும் ஒரு கேள்வி கேட்கப்பட்டு, அதற்குரிய விடையும் அதே பாடலில் தோன்றுமாறு அமைந்துள்ளதால் இதற்கு வினாவுரைப் பதிகம் என்று பெயர்.

1. கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள்ளிப்பிவன்
திரையு லாங்கழி மீனுகளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொருளாயுல காளுடையீர் சொலீர்
வரையு லாமடமாதுட னாகிய மாண்பதே.

கடலிலுள்ள வெண்சங்குகளையும், வெள்ளைச் சிப்பிகளையும் வலிமையான அலைகள் கரையில் விழுமாறு வீசுகின்றன. அலைகள் மோதும் கழிகளில் மீன்கள் ஆடுகின்றன. இது போன்ற வளமையுடைய திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ள ஈசரே! மலைமாதுவாகிய பார்வதிதேவியுடன் இங்கு காட்சியளிப்பதன் நோக்கம் என்ன? (சொல்லும், பொருளும் ஒன்றோடொன்று இணைந்து இருப்பதைப் போலவே மாதொரு பாகனாக உமையுடன் சேர்ந்திருப்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது.)

2. சந்து யர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டுதம்
சிந்தை செய்தடி யார் பர வுந்திரு வான்மியூர்ச்
சுந்தரக் கழன் மேற்சிலம் பார்க்கவல் லீர்சொலீர்
அந்தி யின்னொளி யின்திற மாக்கிய வண்ணமே.

நறுமணமுள்ள சந்தனம், குளிர்ச்சி மிக்க அபிஷேக தீர்த்தம், நெருப்பில் இட வேண்டிய அகில் ஆகிய பொருட்களைக் கொண்டு ஈசனை வணங்கும் அடியார்கள் தங்களது சிந்தையை முழுமையாக வழிபாட்டில் ஈடுபடுத்துகின்றனர். அந்தி நேரத்து வெய்யோனின் நிறத்தைப் பெற்று அழகாகத் தோன்றிடும் இறைவா! சுந்தரக் கழலையும், ஒலிக்கும் சிலம்பையும் தாங்கள் அணிவது ஏன்? (தனது திருவடிகளைப் போற்றும் அடியார்களுக்கு இறைவன் அருளும் தன்மையை உணர்த்தவே திருவடிகளை அலங்கரிக்கும் சிலம்பும், கழலும் குறிப்பிடப்பட்டுள்ளன).

3. கான யங்கிய தண்கழி சூழ்கட லின்புறம்
தேன யங்கிய பைம்பொழில் சூழ்திரு வான்மியூர்த்
தோன யங்கம ராடையி னீரடி கேள்சொலீர்
ஆனையங் கவ்வுரி போர்த்தன லாட வுகந்ததே"

கானகத்தில் பள்ளமான கழியும், அலைகடலின் மறுபக்கத்தில் தேன் சிந்தும் பசுமையான சோலைகளும் மிகுந்த திருவான்மியூரில்

தோலாடையைத் தரித்தவாறு தோன்றும் இறைவா! புலித்தோல், பட்டாடை ஆகியவற்றோடு நிற்காமல் யானைத் தோலை உடுத்துவதன் காரணம் யாதோ? (இங்கு அரனார் யானையுருவம் கொண்ட கஜாசுரனை ஒறுத்து, அந்த யானையின் தோலை உடுத்துக் கஜசம்ஹார மூர்த்தியாகத் திகழும் சம்பவம் குறிப்பிடப் பட்டுள்ளது. புலித்தோல் சிவபாகத்திற்கும், பட்டாடை (துகில்) சக்தி பாகத்திற்கும் உரியது, இறைவனின் அர்த்தநாரீஸ்வரக் கோலத்தை இப்பாடல் குறிப்பிடுகிறது.)

4. மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லுந்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாட லுகக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததே',

மேகங்கள் தங்கி இளைப்பாறும் அளவு உயர்ந்துள்ள மாட மாளிகைகளும், வலிமையும், அழகிய வேலைப்பாடும் பெற்றுள்ள மதில்களும் மிகுந்துள்ள திருவான்மியூரில் செம்மை நிறைந்த மொழியில் வல்லவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். உலகிலுள்ள அனைத்து உயிர்களும் உறங்கும் காரிருள் வேளையில் இடுகாட்டில் தாண்டவமாடும் திருவான்மியூர் ஈசரே! கருமை நிறமுடைய கொடிய விஷத்தை உட்கொண்டு வானவர்களைக் காப்பாற்றியது ஏன்? (பிறவிப் பெருங்கடலிலிருந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களை மீட்கவே நள்ளிரவில் இடுகாட்டில் ஈசன் நடனமாடுகிறார். பிற உயிர்களைக் காக்கவே சிவபிரான் நஞ்சையுண்டு நீலகண்டரானார்)

5. மண்ணி னிற்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ணெ னப்புரி சைத்தொழி லார்திரு வான்மியூர்த்
துண்ணெ னத்திரி யுஞ்சரி தைத்தொழி லீர்சொலீர்
விண்ணி னிற்பிறை செஞ்சடை வைத்த வியப்பதே''

கற்புநெறி, சிவ வழிபாடு ஆகியவற்றில் திளைத்துள்ள (திருவான்மியூரில் வாழும்) மங்கையர் உலகம் முழுவதும் மெச்சப் பெற்றிருந்தனர். அத்தலத்திலுள்ள மதில்கள் திண்மையும், அழகும் உடையன. பிரமகபாலமாகிய திருவோடு தன்னை ஏந்திப் பிச்சை எடுத்த திருவான்மியூர் ஈசரே! விண்ணிலுள்ள பிறைச் சந்திரனைத் திருமுடியில் சூடியது எதற்காக? (பிரமனின் ஐந்தாவது தலையைக் கொய்தபோது அக்கபாலம் சிவனாரின் கரத்தை விட்டு அகலவில்லை. அதனையே பிட்சைப் பாத்திரமாக ஏந்தியவாறு இறைவன் பிட்சாடனராகத் திரிந்த சம்பவம் இங்கு நினைவுறுத்தப்படுகிறது).

6. போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறம்
நீதி லந்தண ரோத்தொழி யாத்திரு வான்மியூர்ச்
சூது லாவிய கொங்கையொர் பங்குடை யீர்சொலீர்
மூதெ யில்லொரு மூன்றெரி யூட்டிய மொய்ம்பதே

உரிய பருவத்தில் பூத்துக் குலுங்கும் மலர்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட திருவான்மியூரில் வனப்பு மிக்க மதில்கள் சூழ்ந்த பகுதிகளில் களங்கமற்ற மறையவர்கள் வேதங்களை ஓதுகின்றனர். பெரும் வடிவழகு மிகுந்த பார்வதி தேவிக்கு உடலில் ஒரு பகுதியை அளித்த வான்மியூர் ஈசரே! பறந்து செல்லக்கூடிய கோட்டைகளாலான திரிபுரங்களை எரியூட்டியதற்குக் காரணம் என்ன? (தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி ஆகிய மூன்று அசுரர்களுக்கு உரிய திரிபுரங்களை எரித்த சம்பவம் இங்கு நினைவு கோரப்படுகிறது.)

7. வண்டி ரைத்த தடம் பொழி லின்னிழற் கானல்வாய்த்
தெண்டி ரைக்கட லோதமல் குந்திரு வான்மியூர்த்
தொண்டி ரைத்தெழுந் தேத்திய தொல்கழ லீர்சொலீர்
பண்டி ருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்ததே

வண்டுகள் ரீங்காரமிடும் பரந்த சோலைகளும், விரிந்த கானற் பகுதியும், மெல்ல ஓசையை ஏற்படுத்தும் அலைகளை யுடைய கடலும் திருவான்மியூரிலுள்ளன. தொண்டர்கள் தங்களது திருநாமத்தை இடைவிடாமல் ஓதுகிறார்கள். தொன்மையான கழல்களையுடைய வான்மியூர் ஈசனே! முற்காலத்தில் தட்சிணாமூர்த்தியாக அவதரித்துக் கல்லால மரத்தடியில் சனகாதியர் என்ற நான்கு முனிவர்களுக்கு அருளுரை செய்தது எதற்காக?

8. தக்கில் வந்த தசக்கிரி வன்றலை பத்திறத்
திக்கில் வந்தல றவ்வடர்த் தீர்திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந் தீரரு ளென்சொலீர்
பக்க மேபல பாரிடம் பேய்கள் பயின்றதே

திருவான்மியூரில் உமையன்னையுடன் எழுந்தருளியுள்ள இறைவா! எந்த உயர்ந்த தகுதிகளையும் பெறாத போதிலும் பத்து தலைகளையுடைய இராவணன் கயிலையை அசைக்க முயற்சித்த போது அவ்வரக்கன் ஓலமிடுமாறு அவனது தலைகளை நெறித்தீர். தங்களது அருகே பூதகணங்கள் சூழ்ந்திருப்பதன் காரணம் யாது?

9. பொருது வார்கட லெண்டிசை யுந்தரு வாரியால்
திரித ரும்புகழ் செல்வமல் குந்திரு வான்மியூர்ச்
சுருதி யாரிரு வர்க்கு மறிவரி யீர்சொலீர்
எருது மேல்கொ டுழன்றுகந் தில்பலி யேற்றதே.

வீசும் அலைகளையுடைய கடலின் மூலம் எட்டுத் திக்குகளிலிருந்தும் பலவகையான செல்வங்கள் கிடைப்பதால் வளமையும், புகழும் மிகுந்துள்ள திருவான்மியூரில் வேதங்கள் போற்றும் பிரமன், மகாவிஷ்ணு ஆகியோர்கள் காணற்கரியவ ராகத் திகழும் இறைவா! எருது மீது அமர்ந்தவாறு வீடுகள் தோறும் சென்று பலி ஏற்பது எதற்காக?

10. மைதழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினம்
செய்த வத்தொழி லாரிசை சேர்திரு வான்மியூர்
மெய்த வப்பொடி பூசிய மேனியி னீர்சொலீர்
கைத வச்சமண் சாக்கியர் கட்டுரைக் கின்றதே''

மாலை நேரத்தில் இசை ஒலிக்கும் வண்டுகள் மிக்க மேகம் வரையுயர்ந்த சோலைகளும், வேதங்களை ஓதியும், தவங்களைப் புரிந்தும் ஒழுகும் அந்தணர்களும் மிகுந்த திருவான்மியூரில் தவத்தின் சின்னமான திருநீற்றை உடலில் தரித்துள்ள திருவான்மியூர் இறைவா! வஞ்சக நோக்கம் கொண்ட சாக்கியர்கள் எட்டிக் கூறும் பொய்யுரைகள் என்ன பயனை அளிக்கவல்லன?

11. மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூர்
ஆதி யெம்பெரு மானருள் செய்ய வினாவுரை
ஓதி யன்றெழு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
நீதி யானினை வார்நெடு வானுல காள்வரே

சீர்காழி என்ற திருத்தலத்தில் அவதரித்த ஞானசம்பந்தர் திருவான்மியூரில் குடிகொண்டுள்ள எம்பெருமானை, மாதொரு பாகனான நற்றவத்தானைப் போற்றிப் பாடியுள்ள இந்த வினாவுரைப் பதிகத்தைப் பாடிச் சைவ சமய உண்மைகளை உண்மையாகப் பேணுவோர் இறைவனின் திருவடிகளைச் சார்வார்கள். (திருவான்மியூர் ஈசனை உளமார வழிபட்டால் வீடுபேறு கிடைப்பது உறுதி என்று இப்பதிகம் உரைக்கிறது).

# சம்பந்தர் திருப்பதிகங்கள்

## இரண்டாம் பதிகம்—மூன்றாம் திருமுறை

பண் : கௌசிகம் திருச்சிற்றம்பலம்

1. விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே''

மணமிக்க கொன்றை மலரால‌ான மாலையைச் சிரசில் அணிந்தவனே! பாற்கடலில் விளைந்த நஞ்சையுண்டதால் நீல நிறமான கழுத்தைப் பெற்றவனே! அடியார்கள் சூடும் புகழ்ச் சொற்களை ஏற்பவனே! உமை என்ற மங்கை நல்லாளுக்குத் தனது திருமேனியில் சரிபாதியை அளிப்பவனே! அலைகள் மோதும் கடல் சூழும் திருவான்மியூரில் குடி கொண்டுள்ள அரசே! உன்னையல்லாமல் எனது ஆசை வேறு எதிலும் நாட்டம் கொள்ளாது.

2. இடியா ரேறுடையா யிமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோ டரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூருறையும்
அடிகே ளுன்னையல்லா லடையாதென தாதரவே

இடிபோல முழங்கும் இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ள வனே! வானவர்களின் மணிமுடியாகவும், அவர்களுக்குத் தலைவனாகவும் திகழ்பவனே! பிறைச் சந்திரன், சர்ப்பம், கண்கவரும் கொன்றை மலர் ஆகியவற்றைத் தரித்தவனே! பலவகைச் செடிகளும், மாதவி போன்ற தருக்களும் மிக்க திருவான்மியூரில் உறையும் பெரியோனே! உன்னையன்றி ஆதரவளிப்பவர் எவருமில்லை.

3. கையார் வெண்மழுவா கனல் போற்றிரு மேனியனே
மையா ரொண்கணல்லா ளுமையாள் வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான்மி யூருறையும்
ஐயா வுன்னையல்லா லடையாதென் தாதரவே

கரத்தில் வெண்மையான மழுவாயுதத்தை ஏந்தியுள்ளவனே! நெருப்பைப் போன்ற சிவந்த திருமேனியைப் பெற்றுள்ளவனே! கருமையான நிறமுடைய உமையன்னைக்கு இடது பாகத்தை யளித்தவனே! செங்கயல் மீன்கள் உருண்டோடும் கடற்கரையை

புடைய திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ளவனே! உன்னையன்றி எனக்கு ஆதரவு தருபவர் எவருமில்லை.

4. பொன்போ லுஞ்சடைமேற் புனல்தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே
தென்பால் வையமெலாந் திகழு ந்திரு வான்மிதன்னில்
அன்பா வுன்னை யல்லா லடையாதென தாதரவே

பொன்னிறமுடைய சடையில் புனிதமிக்க கங்கை நீரைத் தாங்கியுள்ள புனிதனே! ஒளிமிக்க முப்புரி நூலைத் தரித்து மறையவன் போல விளங்கியவனே! தென்னகத்திலுள்ள தமிழ்நாட்டிலுள்ள போதிலும் உலகம் முழுதும் புகழோடு விளங்கும் திருவான்மியூரிலுள்ள ஐயனே! உன்னையன்றி எனக்கு ஆதரவு தருபவர் யாவர்?

5. கண்ணா ருந்நுதலாய் கதிர்சூழொளி மேனியின் மேல்
எண்ணார் வெண்பொடிநீ றணிவாயெழில் வார்
பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மி யூருறையும்
அண்ணா வுன்னையல்லா லடையாதென தாதரவே

முக்கண்களைப் பெற்றுள்ளவனே! மேனியில் ஒளிமிக்க கதிரவனின் கதிர்கள் படிந்துள்ளது போல வெண்ணிறமுடைய திருநீற்றைப் பூசியுள்ளவனே! அழகுமிக்க சோலைகளும் வலிமையும் அழகிய வேலைப்பாடும் மிக்க மதில்களும் சூழ்ந்துள்ள திருவான்மியூரில் குடிகொண்டுள்ள எனது தந்தையே! உன்னை யன்றி எனக்கு ஆதரவு தருபவர் எவர்?

6. நீதி நின்னையல்லா னெறியாதும் நினைந்தறியேன்
ஓதி நான்மறைகண் மறையோன்றலை யொன்றினையும்
சேதி சேதமில்லாத் திருவான்மி யூருறையும்
ஆதி யுன்னையல்லா லடையாதென தாதரவே

நீதியின் வடிவாக விளங்கும் உன்னை மனதால் நினைப்பதைத் தவிர உன்னை வழிபடுவதற்கான நெறிமுறைகள் எதனையும் நான் அறிவதில்லை. நான்கு வேதங்களையும் ஓதி உணர்ந்தவனே! நான்முகனின் சிரம் ஒன்றைக் கிள்ளி எடுத்தவனே! அழிவு எதுவும் ஏற்பட முடியாத திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ள முதல்வனே! உன்னையன்றி எனக்கு ஆதரவு தருபவர் யார்?

7. வானார் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்
கானா ரானையின்றோ லுரித்தாய்கறை மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மி யூருறையும்
ஆனா யுன்னையல்லா லடையாதென தாதரவே

வானில் திரியும் திலவைச் சூடிய சடையையுடையவனே! மலை போல் பெருத்த காட்டு யானையின் தோலை உரித்தவனே! நஞ்சைப் பருகியதால் கறுத்த கண்டத்தைப் பெற்றுள்ளவனே! வண்டுகள் உலாவும் சோலைகள் நிரம்பிய திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள இடப வாகனரே! உன்னை அல்லாமல் எனக்கு ஆதரவு தருபவர் எவர்?

8. ............................................................

9. பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்
நெறியார் நீள்கழன்மேன் முடிகாண்பரி தாயவனே
செறிவார் மாமதில்சூழ் திருவான்மியூருறையும்
அறிவே யுன்னையல்லா லடையாதென தாதரவே

புள்ளிகள் அழகு செய்யும் ஆதிசேடன் மீது பள்ளி கொள்ளும் திருமாலும், தாமரை மலர் மீது அமர்ந்துள்ள நான்முகனும் பாதாளத்தையும் கடந்த நினது திருவடிகளையும், வானுயரப் பரவிய தங்களது திருமுடியையும் காண முடியாமல் அல்லலுறச் செய்தவனே! வனப்பும், வலிமையும் மிகுந்த பெருமதில்களால் சூழப்பெற்ற திருவான்மியூரில் வாழும் இறைவனே! உன்னையன்றி எனக்கு ஆதரவு ஏது?

10. குண்டாடுஞ் சமணர் கொடுஞ் சாக்கிய ரென்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேச நின்றாய்
திண்டேர் வீதியதார் திருவான்மி யூருறையும்
அண்டா வுன்னையல்லா லடையாதென தாதரவே

விதண்டாவாதம் புரியும் புறச்சமயத்தினர் சில விஷயங்களை அறிந்தும் அதன் காரணங்களை அறிவதில்லை. அத்தகையோரும் சிலவற்றை அறிந்து பேசுவாறு செய்பவனே! வலிமைமிக்க தேர்கள் ஓடும் பரந்த வீதிகளையுடைய திருவான்மியூரில் வாழும் ஈசனே! எனது ஆசை உன்னையல்லாமல் வேறு எதையும் நாடாது.

11. கன்றா ருங்கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்றான புகழான் மிகுஞானசம் பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மி யூரதன்மேல்
குன்றா தேத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே

அழகிய செடி கொடிகளும், கமுகு மரங்களும், வயல்களும் மிகுந்த சீர்காழி என்ற தலத்தில் அவதரித்த ஞானசம்பந்தர், தன்னைத் துதிப்போரின் குறைகளை நீக்கும் திருவான்மியூர் ஈசனைப் போற்றிப் பாடியுள்ள இப்பதிகத்தை முழுமையாகப் படித்து வழிபடுவோரின் தீவினைகள் நீங்கும்.

## திருநாவுக்கரசர் பதிகம்

### ஐந்தாம் திருமுறை

1. விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே

நறுமணம் மிகுந்த மலர்களை ஏந்தியவாறு வேகமாகச் சென்று உலகிற்குத் தலைவனும், வண்டுகள் சூழ்ந்த சோலைகள் நிறைந்த திருவான்மியூரில் குடிகொண்டுள்ளவனுமான ஈசனின் பாதார விந்தங்களை நாடியவர்களின் பாவங்கள் அனைத்தும் அகலும்.

2. பொருளும் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கறுத்(து)
அருளு மாவல்ல ஆதியா என்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே.

பொருட் செல்வம், உறவினர்கள், தவிர்க்க வேண்டிய குணங்கள் ஆகிய பந்தங்களால் பிணைக்கப்பட்டு உலக வாழ்வில் மயங்கி அருளும் மாந்தர்களை அறியாமை என்ற மயக்கத்தி லிருந்து விடுதலை செய்து, அருள் புரிய வல்ல வான்மியூர் ஈசரை ஆதியாய் என்று போற்றி வழிபடுவோரின் அறியாமை நீக்கப் படும்.

3. மந்த மாகிய சிந்தை மயக்கறுத்(து)
அந்த மில்குணத் தானை யடைந்து நின்(று)
எந்தை! ஈசன்! என்றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே.

மந்தமாகிய அறியாமையால் உண்டாகும் மனமயக்கத்தை நீக்கி, முடிவு இல்லாத குணங்களின் இருப்பிடமான ஈசனின் முன்சென்று 'எம் தந்தையே! இறைவா!' என்று வழிபடுவோர் முன் திருவான்மியூர் ஈசன் காட்சியளித்து அருள் நல்குவார்.

4. உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ழிக்கசி வானலன்
வெள்ள மும்அர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே!

கங்கை நதியின் நீர், பாம்பு ஆகியவற்றைத் தனது பரந்த சடையில் இடம்பெறச் செய்துள்ள கொடை வள்ளலான

திருவான்மியூர் ஈசன் தன்னை உள்ளன்புடன் வழிபடும் அன்பர் களுக்கு மட்டும் அருள் நல்குவார். கபட உள்ளத்தினர்களுக்கு ஒருபோதும் அருள் வழங்க மாட்டார்.

5. படங்கொள் பாம்பரைப் பான்மதி சூடியை
வடங்கொள் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே

படமெடுத்தாடும் சர்ப்பத்தையும், வெண்மையான சந்திரனை யும் சூடியவரும், மாலைகளையணிந்த உமையன்னைக்கு உடலின் இடது பாகத்தை அளித்தவருமான திருவான்மியூர் ஈசனை இடையறாது பூசிப்பவர்களின் தீய வினைகள் நீங்கும்.

6. நெஞ்சி லைவர் நினைக்க நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்(று)
அஞ்சி நாண்மலர் தூவி அழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே

ஈசனை மனதார வழிபடுவதற்குத் தடையாக உள்ள ஐம்பொறிகளை (மெய், வாய், கண், மூக்கு, செவி) வென்று தன்னை முழு நேசத்துடன் நறுமலர்களைத் தூவிப் பூசிப்பவர் களின் இன்னல்களைப் பஞ்சினைவிட மென்மையான திருவடி களைப் பெற்றுள்ள உமையன்னைக்குத் தனது உடலின் இடது பாகத்தை வழங்கிய திருவான்மியூர் ஈசன் அகற்றுவார்.

7. நுணங்கு நூலயன் மாலும் அறிகிலாக்
குணங்கள் தான்பர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூமொழி யாரவர்
வணங்க நின்றிடும் வான்மியூ ரீசனே.

அரும்பெரும் நூல்களைக் கற்றுணர்ந்த நான்முகன், மகாவிஷ்ணு ஆகியோரால் உணர்ந்து அறியமுடியாத அரனாரின் குணங்களைப் போற்றிச் செருக்கையகற்றி வழிபடும் அன்பர்கள் முன் தூய மொழிகளைப் பேசவல்ல உமையன்னையுடன் திருவான்மியூர் ஈசன் காட்சியளித்து அருள் புரிவார்.

8. ஆதி யும்மர னாயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென்(று)
ஓதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே

மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தியாகவும், நான்முகன், திருமால் ஆகிய பிற மூர்த்திகளாகவும் பாதி பெண் உருவம் உடைய (அர்த்தநாரி) பெருமானாகவும் விளங்கும் முதல்வனின் திருநாமங்களை உச்சரித்து உள்ளம் நெகிழ்ந்து துதிப்போரின் அல்லல்களைத் திருவான்மியூர் ஈசன் அகற்றுவார்.

9. ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

ஓட்டை மாளிகைக்கு ஒப்பான மனித உடலிலுள்ள ஒன்பது வாசல்களும் இடுகாட்டில் எரிந்து சாம்பலாவதற்கு முன்னர் தனது திருவடிகளில் நறுமணமிக்க புதுமலர்களைச் செலுத்தி வலம் வந்து வழிபடுவோரின் குறைகளைத் திருவான்மியூர் ஈசன் தீர்த்து வைப்பார்.

10. பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவன் ஏத்தலும்
வார மாயினன் வான்மியூ ரீசனே.

கனம் மிகுந்த கயிலைமலையைத் தூக்கிய இராவணன் மலையில் சிக்கிக் கொள்ளுமாறு தனது சுட்டை விரலால் கயிலையை மிதித்துப் பின்னர் தவறையுணர்ந்த அசுரவேந்தன் ஆர்வத்துடன் தன்னை வணங்கியபோது அவனுக்கு அருள்புரிந்து பாரத்தை விலக்கியவனும் திருவான்மியூர் ஈசரேயாவார்.

## 2. திருத்தொண்டர் புராணம் — சேக்கிழார்

### அ திருஞானசம்பந்தர் புராணம்

- திருத்தொண்ட ரங்குள்ளோர் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து
நிருத்தருறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாதல்
அருத்தியொடு திருவான்மியூர் பணிய வணைவுற்றார் (3018)

மயிலையில் வாழ்ந்துவந்த சிவனடியார்களிடம் விடைபெற்றுக் கொண்டு (பூம்பாவையின் தந்தையாகிய) சிவநேசரின் துயரைத் துடைக்கும் ஆறுதல் மொழிகளைக் கூறியபின்னர் அருள்கூத்து

நடத்தும் அம்பலவாணரான இறைவன் கோயில் கொண்டுள்ள பதிகளைத் தரிசித்தவாறு மனதில் பக்தியுணர்வுடன் திருவான்மியூரிலுள்ள ஈசனை வழிபடப் புறப்பட்டார்.

2. திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலவணிகண் மறுகுநிரைத் தெதிர்கொள்ள
அருகாக விழிந்தருளி யவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயின்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார்
(3019)

மங்கலம் நிறைந்த அணிகலன்களை முறையாக ஏந்தியவாறு திருவான்மியூரில் நிரந்தரமாகத் தங்கியுள்ள அடியார்கள் சம்பந்தரை வரவேற்றனர். சம்பந்தரும் விருப்புடன் சிவிகையிலிருந்து கீழிறங்கி அவர்களை வணங்கினார். பின்னர் அன்புடன் அடியாரை ஆட்கொள்ளும் ஈசனின் ஆலயத்தின் எழில்மிக்க, உயர்ந்த, பெரிய கோபுரத்தையடைந்தார்.

3. மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கிவியன் றிருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார்.
(3020)

உயர்ந்து நின்ற கோபுரத்தை வணங்கியவாறு திருக்கோயிலில் நுழைந்து வலமாக உள்ளே சென்றனர். அந்தி மாலையிலுள்ள சிவந்த நிறத்தையுடைய சடையில் கொக்கிறகு, பிறைத் திங்கள், குளிர்ச்சி மிக்க கங்கை ஆகியவற்றைத் தரித்துள்ள அரனாரை வழிபட்டனர்.

4. தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தவிசைத் திருப்பதிகச் சொன்மாலை வினாவுரையால்
வீழ்ந்தபெருங் காதலுடன் சாத்திமிக வின்புற்றார். (3021)

ஈசனை முறையுடன் தாழ்ந்து, துதித்த பின் பெருமகிழ்ச்சியுடன் பிறவி நோயைத் தீர்க்கும் நல் மருத்துவரான விரிசடைக் கடவுளை விரும்பி ஏற்கும் சிறந்த பண்ணால் இசைக்கப்படும் (வினாவுரை என்ற) சொற்களை, மாலையாகக் கோர்த்தமைக்கப் பட்ட பதிகத்தைப் பாடி வணங்கினார்.

5. பரவிவரு மானந்த நிறைந்த துளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கண் மிசைவிளங்கப் புறத்துணைவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனார் சிலநாளங் கினிதமர்ந்தார் (3022)

பொங்கிவரும் ஆனந்தக் கண்ணீரால் கண்கள் நனைந்தன. புளகாங்கிதமடைந்த திருமேனியில் மயிர்க்கூச்சம் தோன்றியது. அலைகள் மோதும் கடற்கரையின் அருகே உள்ள திருவான்மியூரில் சீர்காழியில் தோன்றிய சம்பந்தர் சில நாட்கள் தங்கினார்.

6. அங்கணமர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கண்விடைக் கொடியார்த மிடைச் சுரத்தைச்
சேர்வுற்றார். (3023)

அவ்வாறு திருவான்மியூரில் தங்கியிருந்த போது சிவபிரானை அரிய தமிழ் வளமும், இசையும் கூடிய சிறந்த பதிகங்களால் போற்றித் துதித்த பின்னர் கங்கை நதியைச் சடையில் அணிந்து உள்ள அரனார் எழுந்தருளியுள்ள பல திருத்தலங்களைத் தரிசித்தவாறு செம்மையான கண்களையும், இடபக் கொடியையும் பெற்றுள்ள சிவபெருமான் கோயில் கொண்டுள்ள திருவிடைச்சுரம் என்ற பதியைச் சம்பந்தர் அடைந்தார்.

ஆ. திருநாவுக்கரசர் புராணம்

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினோடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி யம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாருரு மலர்ச்-சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார்.

திருவான்மியூரில் குடிகொண்டுள்ள மருந்தீஸ்வரரை வழிபட்டவாறு, உண்மைகளையுணர்த்தும் தமிழ்ப் பாடல்களை அவர் மீது இசைத்த பின்னர், பிறவியாகிய பிணியை நீக்கவல்ல சிவபெருமான் குடிகொண்டுள்ள பல பதிகளைத் தரிசித்தவாறு தமிழ்வேந்தரான திருநாவுக்கரசர் மணம்மிகு மலர்ச் சோலைகள் நிறைந்த திருமயிலை என்ற திருத்தலத்திற்குச் சென்றார்.

## 3. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

குசமாகி ஆருமலை; மறைமா நுண் நூலினிடை;
குடிலான ஆல் வயிறு; குழையூடே
குறிபோடும் மீனவிழி; மதிமாமு காருமலர்
குழல்கார தான்குண மிலிமாதர்;

புசவாசையால், மனது உனைநாடி டாதபடி
புலையேன் உலாவிமிகு புணர்வாகிப்,
புகழான பூமிமிசை மடிவா யிராதவகை
பொலிவான பாதமலர் அருள்வாயே!

நிசநார ணாததிரு மருகா! உலாசமிகு
நிகழ்போத! மானபர முருகோனே
நிதிஞான போதமரன் இருகாதி லேயுதவும்
நிபுணா! நிசாசரர்கள் குலகாலா;

திசைமாமு கனாழியரி மகவான்மு னோர்கள் பணி
சிவநாத ராலமயில் அமுதேசர்
திகழ்பால! மாகமுற மணிமாளிகை மாடமுயர்
திருவான்மி யூர்மருவு பெருமானே!

**பொருள்:** கொங்கையுடன் நுண்ணிய இடை; கருவுக்கு உரிய இடமான ஆலிலை போன்ற வயிறு; காதில் குழைகளுக்குள் குறிபார்த்து நுழையுமளவு கூரிய மீன் போன்ற கண்கள்; சந்திரன் போன்ற அழகிய முகமாகிய மலர்; மேகம் போன்ற கூந்தல்; இத்தகைய வடிவழகைப் பெற்றுள்ள, நற்குணங்கள் அற்ற பொது மகளை (விலைமாது) நாடாமல் எனக்கு உன் பொலிவான பாதமலர்களையளித்தருள்வாய்!

நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோர்கள் பணியும் அமுதேசர் (திருவான்மியூர் ஈசரின்) மகனாக முருகனை "அழகிய மாளிகைகளும் உயர்ந்த மாடங்களும் மிகுந்த திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள பெருமானே' என்று குறிப்பிடுகிறார்.

## 4. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய திருவான்மியூர்ச் சிவபெருமான் பதிகம்

### காப்பு - வெண்பா

திருவான்மியூர்ச் சிவனே சேதரனும் போற்றும்
ஒருவா! புலித்தோல் உடையாய் — மருவார்
கடுக்கை யணிவானே! நின்கண்ணருளால் என்றன்
இடுக்க ணெலாம் தீர்த்தருளின்றே.

## நூல் — கொச்சகக் கலிப்பா

1. அங்கமுற்றும் வெண்ணீ(று) அணியும் உன(து) அடியார்பால்
வெங்கலிநோய் மருவிலுன்றன் வியன்புகழ்க்கோர்
இழிவன்றோ
பங்கமில் சீர்தென்னளகைப் பதியுடையான் உயிர்போல்வாய்
செங்கண் விடைப்பரி யூர்வாய்! திருவான்மியூர்ச் சிவனே.

2. மௌலத் தோட்புரவலர் தம் வாழ்வினையும் மதியார் தாம்
எவ்வ முறக்காணிலும் சற்(று)மிரங்காதல் முறைதானோ?
பௌவவிடம் உண்டோனே! பரமாய பண்ணவனே!
செவ்வரிக் கண் உமைபங்கா! திருவான்மியூர்ச் சிவனே.

3. இருக்கு முதலாய மறை ஈரிரண்டும் ஏத்தரிதாப்
பெருக்கும் உன்றன் புகழ்சிறிது பேசும்நலம் பெறுவேனோ?
மருக்கமழ் பூங்கொன்றை யணிவார் சடையில் மதிவைத்தாய்!
திருக் கொழியத் தடுத்தாள்வாய்! திருவான்மியூர்ச் சிவனே.

4. நாவேறுமவள் கேள்வன் நடுத்தலையில் பலிகொள்வாய்
பாவேறப் புனைவார்க்குப் பரிசளித்த விதம் யாதோ?
தாவேறும் வல்லவுணர் தமக்கும் அருள்வானே!
சேவேறும் பெருமானே! திருவான்மியூர்ச் சிவனே.

5. புத்தர் முதற்பகர்கின்ற புலைச் சமயத்தினர் முன்னென்
சித்தமொல்கித் தளராமற் திருவருள் வாழ்வடையேனோ?
மத்தமெருக் காத்திதும்பை வன்னிமுதற் சென்னியிற்கொள்
சித்தனே! ஈடில்புகழ்த் திருவான்மியூர்ச் சிவனே.

6. புணராமுலை மின்னார் பொய்ப்போக மயல் கொண்டு
நாணாமற் றிரிவேற்கு நலம்சிறி(து) ஈந்தருள்வாயோ?
ஆணாதி ஒரு மூன்று ஆகியொன்றும் ஆகானே!
சேணாடர் பணிகொள்ளும் திருவான்மியூர்ச் சிவனே!

7. கரியவனும் காணாநின் கழல்பாடிக் கசிந்துருகா(து)
உரியவினைப் போகத்தூ(டு) உழல்வேனும் உய்வேனோ?
கிரியினை வில்லெனக் கொண்டு கிளர் ஒளிப் புன்னகை
தன்னால்
திரிபுரம் நீறெழச் செய்தாய்! திருவான்மியூர்ச் சிவனே!

8. மிக்கபுகழ்ப் பார்த்தன வில்லடிக்கு விறல்வாளி
அக்கணத் தன்(று) அருள் செய்தாய்! அடியேனுக்
கிரங்காயோ?
முக்கண்ணுடைப் பெம்மானே! மூவருக்கும் முதலானாய்!
திக்கடங்க உணர்சீலத் திருவான்மியூர்ச் சிவனே!

9. அத்திமுகத்தினன் செவ்வேள் ஆகும் இருவரைப் பெற்றாய்!
நத்தி யுனைப் போற்றிசைக்கும் நாயடியேற்(கு) இரங்காயோ?
பத்திவலைப் படல் கூறிப் பணிந்தானுக்(கு) அருள் செய்தாய்!
சித்தியொடு முத்தி நல்கும் திருவான்மியூர்ச் சிவனே!

10. நால்வர்களுக்கு அருள் செய்த நலம்கேட்டு நண்ணியுன்றன்
பால்வரும் என்றனக்கான பரிசின்னே தரவேண்டும்!
கோல்வளைப்புக் கண்ணாளைக்குல விடைமேற் கூடவைத்தாய்
செல்வள நீர்வயல் காட்டும் திருவான்மியூர்ச் சிவனே.

11. செல்வமலி தருபான்மைத் திருவான்மியூர்ச் சிவன்பால்
நல்வரம் பெற்றுய்வ தெண்ணி நறுந்தமிழ்த் தென்மலய
மெனும்
கல்வரைப்பால் அவிர்கின்ற கழைவனத்தோன் கழறுமிவை
சொல்வதனிற் துணிவுற்றோர் துயர்சிறிதும் தோயாரே!

## 5. ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

பற்பல இலக்கியங்களைப் படைத்துள்ள பாம்பன் சுவாமிகள் திருவான்மியூர் மருந்தீசர் ஆலயத்தின் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானின் திருவடிகளே வீடு பேறளிக்கும் முக்தியிடமாகும் என்ற கருத்தை இவரது பாடல்கள் வலியுறுத்துகின்றன.

1. (சந்தக்குறிப்பு-தான தான தான தான, தான தானதானனா)
சீரு லாவு நீடு மாட வீதி யாதி தேவர்வாழ்
ஏரு லாவும் வேதபீட மேய்வி லாச வான்மியூர்
நாரு லாவு ஞான வேலி னாத னாத பாதமே
பாரு லாவு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே

செல்வம் நிறைந்த உயர்ந்த மாடவீதிகளும் பழைமையான தேவர்கள் வாழுகின்ற அழகு பொருந்திய வேதபீடமும் உடைய அழகிய திருத்தலம் திருவான்மியூராகும். அன்பு மிகுந்து வரும் ஞானவேலை உடையவருமான கந்தனின் ஒலிக்கும் திருவடிகளே உலகில் வாழும் ஞானசாத்திரம் உணர்ந்தவர் புகழ்ந்து போற்றுகின்ற முக்தியிடமாகும். (வேதங்கள் ஈசனைப் பூசித்துத் தூய்மையடைந்த தலமாகையால் இதனை வேதபீடம் என்று சுவாமிகள் குறிப்பிடுகிறார். நார் - அன்பு, விலாசம் - அழகு)

2. கோடறாத சோலை தாழை கூடுநீழ லாறுநீர்
ஏடறாத வாரி சாதி யேய்த டாக வான்மியூர்
மாடறாத மாம யூர மூரு மாதி பாதமே
பாடறாத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

திருவான்மியூரில் வண்டுகள் நீங்காத சோலைகளும் நிழலையளிக்கும் தாழைகளும் உள்ளன; மணம் வீசும் நீரையுடைய தடாகத்தில் இதழ்கள் நீங்காத தாமரை மலர்கள் நிறைந்துள்ளன; செல்வம் நீங்காத சிறந்த மயிலைச் செலுத்தும் பழைமையான திருவடிகளே பெருமை நீங்காத ஞானசாத்திரம் உணர்ந்தோர் பாடுகின்ற முக்தியிடம் ஆகும்.

(பல தீர்த்தங்கள் இத்தலத்தில் மிகுந்துள்ளதால் இதனைத் ''தடாக வான்மியூர்'' என்று சுவாமிகள் குறிப்பிடுகிறார்)

3. தேச றாத மீனு லாவு சீத வாரி நாளுநீர்
வீச லார்வி லாச வூர்வி வேகர் வாழும் வான்மியூர்
வாச வேலி னான்வி பூதி மாண றாத பாதமே
பாச நூறு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

ஒளிமிகுந்த மீன்கள் உலாவும் குளிர்ச்சி மிக்க கடலின் அலைநீர் நாள்தோறும் வீசும் அழகினையுடைய திருவான்மியூரில் அறிஞர்கள் வாழ்கின்றனர். மந்திரவேலை ஏந்தியுள்ள முருகப் பெருமானின் செல்வமாட்சி நீங்காத திருவடிகளே ஆணவமலம் முதலிய பாசங்களை நீக்கிய ஞானசாத்திரம் உணர்ந்தோர் போற்றுகின்ற முக்தியிடமாகும்.

4. கூடு நாரை மீனு வாரு கோலம் வான்மண் மேடுவால்
நீடு ஞாளி பூளை சேன மேர்நி லாவும் வான்மியூர்
நாடு வேல னாம யூர நாத னாத பாதமே
பாடு மோகை ஞான நூலர் பாடும்வீடு மாகுமே.

கூட்டமாகத் திரண்டு வரும் நாரைகள் மீன்களை வாரி உண்ணும் அழகினையுடையது; நீண்ட வாலையுடைய நாய்களும், பூனைகளும் பருந்துகளும் அழகுடன் தங்கும் மணல் மேடுகளையுடையது; இத்தகைய தலமான திருவான்மியூரில் விரும்பி குடிகொண்டுள்ள வேலனாகிய மயூரநாதனின் இசைமிக்க திருவடிகளை ஈசனின் புகழைப் பாடிப் பரவும் சான்றோர் கண்டு இன்புறுவர். அத்தகைய ஞான சாத்திர வல்லுனர்கள் பாடும் முக்தித் தலமாகும்.

5. பூவு லாம்வி ணாடு மேரு பூத மேகினாலுமே
ஓவு றாதெநாளு மாத ரோதி சாரும் வான்மியூர்
மேவு நீன்ம யூர மூரும் வேல னாத பாதமே
பாவு தார ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

அழகு பொருந்திய விண்ணுலகம், மேருமலை, பூதகணங்கள் ஆகியனவும் இணைந்து வந்தாலும் நீங்காத அழகைப் பெற்றுள்ள திருவான்மியூரில் கற்றோர்கள் சார்ந்துள்ளனர். நீல நிறத்தையுடைய மயில் மீதமர்ந்த வேலவனின் ஒலிமிகுந்த திருவடிகளே பிரணவத்தை உணர்ந்த ஞானசாத்திர வல்லோர் போற்றுகின்ற முக்தியிடமாகும்.

6. நாவல் வாழை தாளி பூக நாளிகேர மேயவூர்
தாவணார வாவி வாழ்ச காயபூதி வான்மியூர்ப்
பூவன் மேனி வேல னீத போத நாத பாதமே
பாவனாவர் ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

ஓங்கி வளர்ந்த நாவல், வாழை, பனை, கமுகு, தென்னை ஆகிய மரங்களையும் பரந்த நீரினையுடைய குளங்களையும் பெற்றுள்ள வளமான ஊர் திருவான்மியூர். நெந்நிற மேனியனான வேலவனின் திருவடிகள் நன்னெறி என்ற ஞானத்தையும் ஒலியையும் பெற்று விளங்கும். ஞான சாத்திரத்தில் கரை கண்டோரும், பாடல்களைப் புனைபவருமான சான்றோர்கள் போற்றும் முக்தியிடம் இதுவேயாகும்.

7. பூணி கோக டாமை யாடு பூழி மூச வேகுமூர்
ஏணி லாவு வேத கீத வேர்கு லாவும் வான்மியூர்
வாணி லாவு ஞான வேலன் வாச நாத பாதமே
பாணி மேய ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

எருதுகள், பசுக்கள், ஆட்டுக்கடாக்கள், வெள்ளாடுகள் ஆகியன புழுதியை எழுப்புமாறு செல்கின்றன. பெருமைமிக்க நான்மறைகளின் ஒலி நிரம்பியுள்ளது. இத்தகைய தன்மைகளையுடைய திருவான்மியூரில் குடி கொண்டுள்ள ஒளி பொருந்திய ஞானவேலனின் மணம், ஒளி ஆகியன மிகுந்த திருவடிகளே இசையை ஒலிக்கும் ஞான சாத்திர வல்லோர் பாடும் முக்தியிடமாகும்.

8. பேழு ணாவெ ணாமை யூக மேபல் காய்கள் பீறலாற்
கூழு வாய சூழ்ன் மேவு கோல நீடும் வான்மியூர்
வாழு மாம யூர மூரு மாகவாதி பாதமே
பாழு றாத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே,

தங்களுக்கு உகந்த உணவு எனக் கருங்குரங்குகள் பலதரப்பட்ட காய்களைப் பிளத்தலால் சாறு ஒழுகிப் பக்கங்களை அழகு செய்யும் சிறப்புடையது திருவான்மியூர். இங்கு கோயில் கொண்டுள்ள விண்ணுக்கும் மூலமாக விளங்கும் மயிலேறும் பெருமானின் திருவடிகளே வீணாகாத ஞான சாத்திரம் உணர்ந்தோர் பாடும் முக்தியிடமாகும்.

9. பாலி றாற லால நீள்ப லாவி ளாப ராய்களோர்
பாலி றாம தூக மாவோர் பால ளாவும் வான்மியூர்ப்
பாலின் மேனி நாதர் சேய்கு கேச னாத பாதமே
பாலி னேய மானு நூலர் பாடும் வீடு மாகுமே.

பால் அற்றுப் போகாத ஆலமரங்கள், உயர்ந்த பலாமரங்கள், விளாமரங்கள், பராய் மரங்கள் இலுப்பை மரங்கள், மாமரங்கள் ஆகியன கலந்து வளர்ந்துள்ள திருவான்மியூரில் பால்வண்ண நாதரின் புத்திரரான முருகப்பெருமானின் திருவடிகளே பாலையொத்த தூய சாத்திரங்களை அறிந்தோர் போற்றும் முக்தியிடமாகும்.

10. கூனனாகு மீன மூரல் கூடு பானல் வான்மியூர்
ஞான வேல னார லோதி நாம னாடு தேவனாம்
மான வான்ம யூர மேறு மாக சோதி பாதமே
பான றாவி னோதி நூலர் பாடும் வீடு மாகுமே.

ஆமைகள், நத்தைகள், மீன்கள், கிளிஞ்சல்கள் ஆகியன சேரும் கடலையுடைய திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள ஞானவேலனே அருணகிரிநாதரால் துதிக்கப்பட்டார். விண்வெளியில் மயிலூர்தியைச் செலுத்தும் அப்பெருமானின் ஒளிமிக்க திருவடிகளே பால், தேன் இவற்றையொத்த இனிய ஞான சாத்திரங்களைப் பயின்ற சான்றோர்கள் போற்றும் முக்தியிடமாகும்.

## 6. திருவான்மியூர் அருட்புகழ்

(அருட்கவி சேதுராமன் அவர்களின் அருள்வாக்கில் 29-5-55 அன்று ஸ்ரீ மருந்தீசர் சந்நிதியில் எழுந்தவை)

1. காரிகா மாரிகா லாரிகோ வேறிகா பாலிதேர்ப்
பாரிபா மாரியாழ் மூரிசா தாரிபாற் பற்றினான்
வாரி பால் மாகரை யோரமாய்ச் சங்கமூர் வான்மியூர்
நாரிபா கன்கழல் நாடுவார் தீவினை நாசமே

(காரி-மேகத்தைச் சடையில் கொண்டவன். காம அரி, கால அரி-மன்மதனுக்கும், யமனுக்கும் பகைவன். கோ-பசு தேர்ப்பாரி-(பார்) பூமியாகிய தேரினன், நாரி-பெண்)

2. காடவர் கோன்கழற் சிங்கர்கா ளத்தியார் கண்ணப்பர்
ஆடவர் கோன்குலச்சிறை திரு மங்கையர்க் கரசியார்
கூடலர் கோனிவர் கும்பிட்டு வழிபடும் கொள்கையான்
மாடகூ டங்கள் சேர் வான்மியூர் வாணனை மறவலே.
(கூடலர்-மதுரை மக்கள். கோன்-நெடுமாற பாண்டியன்)

3. காசிசீ காழிகா னூர்கச்சி புக்கொளி யூரவி
நாசிநா கைநணா நல்லம்வல் லம்நனி பள்ளியான்
வாசியா மாறுகோ மாயுவை வைத்தவன் வான்மியூர்
மாசிலா மாமணி யீசனை வாழ்த்துதல் வண்மையே
(வாசி-குதிரை. கோமாயு-நரி)

4. காளிகை யாளிமா வாகனி கூளிகள் காணப்பூ
வாளிகைக் கொண்டமா ரோனைவெல் வாளைவென் றாடினான்
மாளிகை சூளிகை மாமதில் சூழ்திரு வான்மியூ
ராளிகைம் மாவுரி போர்த்தவற் கன்பர்க்கா ளாவதே.

(காளிகை-காளி. யாளிமா வாகனி-காளி, கூளி-பேய், பூவாளி-மலர்ப்பாணம், மாரோனை-மன்மதனை)

5. காமனைக் காய்ந்தவன் காளகண் டன்முக்கட் காரணன்
பூமனைத் தண்டனை செய்தவன் பொற்சடைப் பாற்பினான்
மாமனைத் தண்டித்தாட் டுத்தலை வைத்தவன் வான்மியூர்ச்
சோமனைச் சூடிதன் தொண்டுகொள் ளாவிடிற் றுன்பமே.

6. கீளுலாம் கோவணம் கீழரைக் கேயசைத் திட்டவன்
கோளுலாம் வேணிமேற் கோளராக் கூவிளம் கொண்டவன்
வாளுலாம் நீள்விழி மாதராள் பங்கினான் வான்மியூர்த்
தேளுலாம் செஞ்சடைத் தேசிகன் சேவடி சேர்மினே.

(கோள்-ஒளி. தேளுலாம் செஞ்சடை-சிவபிரான் சடையில் தேளும் உண்டு "பொற்கடுக்கை ஏடவாம்"- (திருப்புகழ்-1251.) "கபாலமாலா பரணம் ஸர்ப்ப வ்ருச்சிக பூஷணம்"-அகோர மூர்த்தி ரூபத்யானச்லோகம்)

7. காத்தருள் கண்ணன்மால் காமன்கா மன்றொழும் காலினான்
பூத்தருள் புன்னகைப் புட்குரற் செய்யவாய் புந்தியான்
மாத்தரூத் தண்டலை வண்டறை பொய்கைசூழ் வான்மியூர்
ஏத்தலார்க் கில்லையின் பம்உண்டெந் நாளுமில்லாமையே

(மாவ்-திருமால். காமன்-இந்திரன். காமன்-மன்மதன். செய்யவாய்-பார்வதி. (அன்மொழித் தொகை)

8. காட்டுவான் கையடை யாளம்கல் லாலின்கீழ் நால்வருக்
கூட்டுவான் மெய்யுபதேசங்கள் உண்மையாய் ஓதினான்
வாட்டுவான் மெய்யடி யாரையே வஞ்சனாய் வான்மியூர்
வேட்டுவான் கங்கைவாழ் வேணியான் பேணினான்
மெய்ம்மையே

9. காதலாற் பாடுவார் கண்கள்நீர் தேக்குவார் கண்ணியர்
வேதமே யோதுவார் விண்ணவர் மண்ணவர் வேண்டவே
வாதவூரார்க்கருள் செய்தவன் வாழ்திரு வான்மியூர்
ஓதவல்லார்கள் தம் ஊனொடு தொல்வினை யோயுமே.

10. காணரி தாகவோர் காலரிக் குன்றமாய்க் கண்டவன்
பேணரி தாயவன் பிஞ்ஞகன் பித்தன்பேழ் வாயணி
வாணன்மை வார்குழல் மங்கைநல் லாள்பணி வான்மியூர்
வாணனை வந்தனை செய்பவர் சிந்தனை மன்னுமே
(அரி-நெருப்பு. பேழ்வாய்-பாம்பு)

11. காற்றனல் மண்புனல் விண்ணிவை ஐந்துமாய்க் காண்பவன்
ஏற்றவன் ஏற்பவன் என்பவர் தங்களுக்கேற்றவன்
மாற்றலர் முப்புரம் சுட்டவன் வாழ்திரு வான்மியூர்ப்
போற்றலும் சாற்றலும் புண்ணியம் நண்ணிய செய்கையே
(ஏற்றவன்-இடப வாகனத்தன். ஏற்பவன்-பிச்சை எடுப்பவன், ஏற்றவன்-உரியவன்)

12. காலனை யன்றுதை காலினான் கஞ்சுகிக் காதினான்
வேலனை யீன்றவள் சுந்தர நாயகி வேட்டணை
வாலனாம் மாதிவான் மீகர்பூ சித்தவூர் வான்மியூர்ப்
பால்வண் ணன்மருந் தீசன்பா தங்களைப் பற்றுமே
(கஞ்சுகி-பாம்பு. சுந்தர நாயகி-அம்மை திருநாமம். பால்வண்ணர், மருந்தீசர்-இறைவன் திருநாமங்கள்.)

## 7. திருவான்மியூர்த் தலபுராணத்திலுள்ள துதிப்பாடல்கள்

சிவமயம், திருச்சிற்றம்பலம், திருவான்மியூர்ப் புராணம்

### கடவுள் வாழ்த்து

திருமுடி விநாயகர்

ஒருமுடிவின்னமுமறியாதுயர்மறைகள்புகழனந்தமோதிநிற்க
விருமுடிவின்மௌலியனுமெழிற்சரோருகத்தேவுமேத்திவாழ்த்த
வருமுடிவில்லுவமனியுமிறைமகனாப்பிரணவத்தினாகமான
திருமுடிவிநாயகனாரிருபோதுமுப்போதுஞ்சிந்தித்துய்வாம்

நடேசர்

சஞ்சிதமாதியசஞ்சலத்துழலுமானவரின்சழக்கறுக்கு
மஞ்சிதமாஞ்சிவகாமியம்மைநிதமருங்கிருந்துமனங்களிப்பச்
சிஞ்சிபதமேவியசிற்றம்பலத்துப்பேரானந்தத்திருநடஞ்செய்
குஞ்சிதபாதத்தழகைக்கண்குளிரத்தரிசித்துக்கொள்ளுவாமால்

மருந்தீசர்

முருந்தீசவிநயவிளந்நகையுமையாமெப்பொருட் குமுதல்விகூந்த
விருந்தீசந்ததிமிசைக்குநயமனைத்துஞ்செவியாரவின்பங்
கொண்டு
பெருந்தீசவிதாமதிமுக்கணனாகியாவரையும்பெட்பினாளு
மருந்தீசன்மலரடியைமுடிபுனைந்துகொடியவினைமாசுதீர்வாம்.

சொக்கநாயகியம்மை

மிக்கவாகமமறையின்பொருளுணருமடியர்மனமேவியென்நுந்
தக்கவாறுடனிருந்துமலமொழியுங்காறுமருட்சத்தியான
நக்கனார்புடைமருவியைந்தொழிற்குங்காரணமாய்நண்ணி
வாழுஞ்
சொக்கநாயகியம்மைசெஞ்சரணநெஞ்சாரத்துதித்துவாழ்வாம்

பால்வண்ணர்

மால்வண்ணமாலயனாதியவமரர்முனிவரர்கண்மயங்கிவேத
நூல்வண்ணமேயுணராதாகமத்தின்வழியேத்துநோன்மைக்காகச்
சேல்வண்ணவிழியுமையாளோடமர்ந்துநாணாளுஞ்சீர்த்தி
மல்கும்
பால்வண்ணமெவ்வண்ணமல்வண்ணமேனியனைப்பரவுவாமால்

திரிபுரசுந்தரி

அரிபுரமோடயனரியாதியர்புரமுமதிக்கேமென்றரியவெண்மைக்
கிரிபுரமேதருகவெனவொருகணத்துமுன்னயந்துகிளக்கஞானப்
பரிபுரவொண்சீறடியைப்பன்னுமலர்க்களித்தருளும்பண்பு
வாய்ந்த
திரிபுரசுந்தரிதாளைத்தரித்தாளவெஞ்சிரசுசிறக்குமாமால்

தட்சிணாமூர்த்தி

பொருந்தியநால்வருக்கன்றுகயிலைதனிலுரைத்தவகை
போதாவென்றே
யருந்தகையவத்துவிதப்பதிபசுபாசத்துண்மையருமையாகத்
திருந்தியநற்பெருந்துறையின்மணிவாசகர்க்குமுனந்தெரித்து
வேதக்
குருந்தடியிலெழுந்தருளுங்குருவடியைமுடிதிருந்தக்கொண்டு
வாழ்வாம்

வயிரவர்

ஏமநிறத்திசைமுகவனைந்தலையிலொன்றுபறித்தினிதங்கேந்தி
வீமமுறவொருகோடிவிண்டுவின்செந்நீரேற்றுவிபுதர்வேண்ட
வாமனன்வெண்கங்காளம்வாங்கியவற்செருக்கொழித்துவாகை
பூண்ட
காமரணிவயிரவநங்கடவுளிருபாதமலர்கருத்துட்கொள்வாம்.

நந்திதேவர்

முந்தியவல்வினைநழுவவிமையவர்வெண்கயிலைதிருமுன்னஞ்
சார்ந்து
வந்திசெயமிடைதலினாலவரவர்தமுறைமையினைவகையிற்
சூழ்ந்து
பந்தியுறகொளுவித்துப்பயனிரப்பவேத்திரத்திண்படையைத்
தாங்கு
நந்திதிருத்தாண்மலர்கணஞ்சிரத்துக்கணிகலனாநாடுவாமால்.

தமிழாசிரியர் - அகத்தியர்

சகத்தினைவளைதருகடலுழுந்தளவுறச்சமைத்துமாந்தியே
யிகத்தினிலரனருளின்பொருங்கடியவரென்றுமேத்துவான்
மகத்துவமுளவொருதமிழ்ப்பயிர்நிலத்தலைவளர்த்ததென்மலை
யகத்தியமுனிவரரடியிணைமுடிவயினமைத்திட்டாமரோ.

ஆளுடையபிள்ளையார் - சம்பந்தர்

அரசமயத்தவர் நோன்சமண்பூடொழித்தன்றுகண்ணன்
றரசமயத்தெனத்தன்னுருத்தந்துதமிழையொன்றி
முரசமயந்தரளச்சிவிகைப்பொலிமுதிபஞானப்
பரசமயக்கோளரிப்பிள்ளையார்பதம்பற்றுதுமே

ஆளுடையநம்பி - சுந்தரர்

சுந்தரத்திற்கடுவடக்கிக்கடவுளரைக்காத்தாண்ட
கருணைத்தேவை
மந்தரத்தினிகர்மாடநிரைவீதியாரூரின்மங்குற்போதி
லந்தரநேரிடைப்பரவைபாலனுப்பியூடறணிந்தமர்ந்தவெங்கள்
சுந்தரமூர்த்தியின்மணநற்கோலமதைமனமாரத்
தொகுத்துட்கொள்வாம்

ஆளுடைய வடிமை - மாணிக்கவாசகர்

ஆணிப்பொனம்பலத்திலானந்தத்தாண்டவஞ்செயரனார்
நீள்செய்
வேணியிற்சென்னியின்மண்ணைட்பிட்டுக்சாச்சுமப்பித்து
மீனவன்றன்
பாணிப்பிரம்புகொடுவடிப்பித்தும்பரனருளைப்பரவுவித்த
மாணிக்கவாசகனாரடியவருக்கடிமைகளைமகிழ்ந்துவாழ்வாம்

சண்டேசுரர்

தந்தையேயாதியதமர்களாயினுஞ்சங்கரன்றன்னை
நிந்தையேசெய்திடிற்றடிந்தவாதம்மினநீங்குகபாவப்
பந்தமேயில்லைபுண்ணியமாகுமிப்பாரினிலென்னாச்
சிந்தையேதந்தசண்டேசர்வண்பூங்கழற்சோறுவாமரோ

அறுபத்து மூவர்

மின்போலொளிருஞ்சடைப்பெருமான்விழியின்மணியுந்திருநீறு
மண்பாற்போற்றியனவரதமஞ்சக்கரத்தைக்கொண்டாடிப்
பொன்பாற்பெண்பாற்புவியின்பாற்போந்தபாசப்புரை யொழித்த
வொன்பானேழுமுனிவரையுமுரைப்பாம்வினையைக் கரைப்பாமே

திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மர்

என்பதிபாம்பணிபூண்டுசிலைகளிக்கமன்றினடமியற்றும்
பெம்மான்
றன்பதியாதியபணிந்துமனங்கசியவுடல்குழையத்தனித்தமோன
வன்பதிகமாநிலவவருண்மயமாந்திருவிசைப்பாவருளுந்தெய்வ
வொன்பதின்மரொண்கமலச்செஞ்சரணநெஞ்சரணத்
தொளிருமாமால்

சந்தானகுரவர்

இந்தானனவம்மைபாகர்வேதாகமத்தினியைந்தஞான
முந்தானசுத்தாத்துவிதவுண்மைதமிழ்மொழியிலுலகமோங்கத்
தந்தானசிவபோகத்தேதிளைக்கும்பெருஞ்செல்வஞ்
சார்ந்தவெங்கள்
சந்தானகுரவர்திருத்தாள்கடமைநங்கடமைதலைக்குக்கொள்வாம்

சேக்கிழார்

இருண்மலமொழிவித்தெம்பெருமானோடிரண்டறக்கலப்புவித்
தொளிருந்
தெருண்மிகுஞானத்தொண்டர்தஞ்சரிதைசெவ்வியவொளி
திகழ்கனகப்
பொருண்மலிமன்றத்திறைதருமொழியாற்புகல்வித்த
புண்ணியநாம
வருண்மொழித்தேவரழகியகமலவமலவொண்ணடியடைக்கவமே

ஆளுடையவரசு (அப்பர்)

அழலாறுநீற்றறையிற்றென்றலுறச்செய்ததன்மீதமர்ந்து நின்றுஞ்
சுழலாருங்கருங்கடல்வாய்க்கன்மிஃப்பக்கடந்துவளத்துறையிற்
சேர்த்துந்

தொழவாருமாலமதையமுதமெனவுட்கொண்டுந்துளங்கிலாய்ந்த
வுழவாரப்படையேந்தும்வாகீசப்பெருந்தகையயுள்ளங்கொள்வாம்

திராவிடமகாபாடிய முனிவரர்

பித்தாந்தப்புறச்சமயப்பிணக்கறுத்துப்பேருவகை பிறங்கிமல்க
முத்தாந்தமீதெனவே மெய்கண்டார்சாத்திரத்துமுடித்துக்காட்டி
நித்தாந்தமியாவருக்குமூட்டுவிப்பான்றுறைசைவயினிலைத்த
வெங்கள்
சித்தாந்தபானுவெனுஞ்சிவஞானமுனிவரர்தாள்சிந்தைசெய்வாம்.

## தலபுராணம் கூறும் திருக்கோயில் அமைப்பு

மண்டபம்

அண்டர்நா யகனா ராகு மருமருந் தீச னார்தாங்
கெண்டையங் கண்ணியோடு கிளர்மணி மாடவீதி
கண்டிடும் விழாக்க டோறுங் கணப்பொழு தெய்ப்புநீங்க
மண்டபந் துறுமி யோங்கி மலிவன நியமமுற்றும்.

திருமதில்

அரியயர்க் கரிய வெங்க ளருமருந் தீச னாரும்
பெரிதுவந் தருளுஞ் சொக்க நாயகப் பிராட்டி யாரும்
பரிவொடு வாழுங் கோயிற் பருமதில் வளரும் பொன்னங்
கிரிமுடி காண்பானீண்ட கீண்முதற் றிசையி னம்மா.

திருக்கோபுரம்

வாபரத் துழைமே னின்று வானமே நிவந்து தாவுங்
கோபுரக் காட்சி தன்னை யாவரே குணிக்கற் பாலார்
மாபலத் திருவர் நாப்பண் வன்னியி னுருவ மாகித்
தாபிதச் சோண சைலத் தாணுவாத் தயங்குமாதோ.

விடைக்கம்பம்

கருணையின் படிவமான கண்ணுதல் பாதங் காண்பான்
வருபவர் தங்கட்கெல்லாம் வழங்குநன் விடைக டம்மைத்
தருமொரு விடையைத் தாங்கிச் சந்நிதி முன்ன ரென்று
முருவவார் கொடியொன் றோங்குமுயர்க கனத்தைக் கீண்டே

திருவிமானம்

வெள்ளியங் கிரியின் ஞாங்கர் மிக்கொளி சுடரக் காலு
மொள்ளிய சிகரம் பொன்னா லுரைதர வோங்கிற்றென்னா
விள்ளருங் கலசப் பத்தி விரிசுடர் விட்டு நீட
மள்ளலுற் றுயர்வி மான மலிந்திடும் விசும்பளாவி.

யாகசாலை

மண்டபஞ் சினக ரத்து ணிர லுற மலிந்து நிற்கு
முண்டிடற் கமுத மைக்கு முபர்மடைப்பள்ளி யோங்கும்
குண்டமுற் றவிரு மியாக சாலைகள் குலவ நீடு
மண்டரும் வேட்கை கொள்ளு மழகமர் தடமுமுண்டால்

திருக்கோயில்

வேதிய ரான வாதி சைவர்கள் விரும்பி வேதத்
தோதுமா கமங்க ளுண்மை யுணர்ந்தருச் சித்துப்போற்ற
மேதகு மக்கட் கெல்லா மிக்கருள் பொழிந்து காக்கு
நாதனாம் வான்மி யூரனாளும் வீற் றிருக்குங் கோயில்

## 8. தொண்டை நாட்டுத் திருப்பதிக் கோவை

### திருவான்மியூர் வெண்பா அந்தாதி

### பெரியமெட்டு மோதூர் முனுசாமி முதலியார்

பொன்னுலகத் தாரும் புகலவரி தாமென்னி
லின்னலுளத் தேனாலியல்வதோ - தன்னேர்
பெருவான் மயூரம் பிறங்குபொழிலாருந்
திருவான்மியூரான் சிறப்பு.

சிறப்புறினு மெள்ளுஞ் சிறுமையுறினு
மறப்பனோ வான்மியூர் வள்ளால் - நறைக்கமலப்
பாதத்தை நான்மறையிற் யன்னும் பொருடெரிந்
தேசத்தை தீர்ப்பாயிசைந்து

சார்ந்தாரெஞ் ஞான்றுஞ் சதானந்தவின்பநலம்
ஆர்ந்தாரே யாவரதற் கையமிலை - ஒர்ந்தார்கள்
பான்மையூர் நெஞ்சத்தார் பாடிப்பரவுதிரு
வான்மியூர் தன்னை மதித்து.

வளம் பல விளங்கு பொழில் வான்மியூர் மேவுங்
களங்கறுத்த ஞானக்கடலே - உளங்கருணை
வையாய் வினைப்பகையை வாட்டுவாய் நஞ்சயின்ற
வையா வெங்கேயடைவே னாயந்து.

அரிதநிறமா லு மயனு மறியாச்
சரிதமெனு மருந்தீ சன்றன் - பரதமதைக்
கண்டார் பரானந்தங் காண்பர் வான்மியூரை
விண்டார் பெறார்பரமவீடு.

காணக்கிடையாத கட்டழகன் வான்மியூர்
மாணப்பிறங்கு மருந்தீசன் - சேணருளாற்
றூயர்களே யாவீர் துயர்களைவான் போற்றுமினோ
பேயர்களே நீங்கும் பிறப்பு.

கதிரோன் பரிகடு கஞ்சோலை தடுக்கு
பதிவான்மியூரைப் பணிந்து — மதிபழியின்
பங்கு திருப் பாற்கடலும் பாக்கியமுந் தந்திடுவான்
பொங்கு திருப்பாற்கடலின் பொன்.

## 9. சு. எஸ். வரதராஜய்யர்
## திருவான்மியூர் கலித்துறை அந்தாதி

### துதிப்பாடல்கள்

#### மருந்தீசர்

விருந்தாக வந்தேன் விமலாவுன் ஊருக்
கரந்தைப் பவ மருந்தே ஐயா - பெருந்தகாய்
முப்புரப் பேரழகி மொய்ம்பணையும் வான்மியூர்
அப்பனே செய்க அருள்.

#### திரிபுரசுந்தரி

அன்னாய் திரிபுரை அம்பிகையேதிரு வான்மியென்னும்
பொன்னார் நகரில் பொருந்தும் மருந்து புகல்மருந்தே
என் நாவில் இன்கவி கொண்டுன்னைப் பாடுவதென் கடன்வான்
மின் நாண் மருங்குல் யான் வேண்டுவ தீவதுன் மெய்க்கடனே

#### தியாகராஜர்

விடையரசை வாகனமா வெண்கொடியாக் கொண்ட
கொடியரசே வான்மியூர்க்கோவே - முடியா
வடிவுடையாள் மேவும் அழகனே வுன்றன்
அடி பணிவார்க் குண்டோ வல்லல்.

#### நூல்

தெய்வம் பலவென்பர் காரென்பர் வெண்மை தெரிகவென்பர்
மைவந்த நீலவருணமென் பாரோர் வடிவுநிறம்
வைவந்த சூலப்படைக்கரன் வான்மியூர் வாசனுக்கென்
றெவ்வகைப் பேரும் உருவமு மின்றென்ப தெண்ணிலரே

நேயத்தின் நின்னை நினைவார் தமக்கு நிதிபலவும்
ஆயுளும் நோய் மிடியற்ற நல்வாழ்வும் அறிவறிந்த
தூயநல் மக்களும் கீர்த்தியுமீந்து தொடர்ந்துழற்றும்
மாயப்பிறவி தனைப்போக்கும் வான்மியூர் வானவனே

ஆடுமின் காலுயர்த்தங்கைகள் கொட்டி யகமகிழ்ந்தே
பாடுமின் தோத்திரம் பற்பலவும் சொல்லிப் பணவனைக்
கூடுமின் நல்லடியார் கூட்டம் கூடிக் குழைந்துமனம்
சூடுமின் சென்னியில் வான்மியூரீசன் துணைப்பதமே

மருந்தாகித் தப்பா மரமன்ன செல்வ மழவிடையாய்
பொருந்தாரைச் செற்ற விறலோய் அடியார் புகலிடமே
விருந்தாக வந்தவென் புன்மொழி யேற்று விரைந்தருளாய்
பிருந்தாவனத்தனும் போற்றிடும் வான்மிப் பெருஞ்செல்வனே

ஆராவமுதன் அகிலபுவனம் அழித்தளிப்போன்
பேராக் கருணையன் வெவ்வினை தீர்த்தின்பம்
பெய்ய வல்லோன்
காரார் குழலி திரிபுரை கொண்கன் கடல் வான்மியூர்
நீராரும் செஞ்சடை வெள்விடை யூர்ந்தருள் நின்மலனே

அருளே யுனது வடிவென்பர் அன்புரு வாகுமென்பர்
இருளே நிறைந்தவென் உள்ளத் தொளிதந் திரங்கி யென்றன்
மருளேகச் செய்தருள் வான்மியில் வாழும் அரும்பொருளே
சுருளேர் குழலி திரிபுரை பாகங்கொள் தொன்மையனே

ஊரில்லை யுற்றார் உறவில்லை பெற்றெடுத் தோருமில்லை
பேரில்லை யாயிரம் பேரவன் என்பர்பே ரம்பலத்தே
நேரில் நடஞ்செயும் வான்மித் தலத்துறை நீர்மையனைக்
காரியல் கண்டனை யேத்துமின் மேலாம் கதிகிட்டுமே

ஏற்றான் இரவினை யேற்றானொர் பார்ப்பானிடர்
தவிர்ப்பான்
மாற்றா னெனவந்த கூற்றை யுதைத்தான் வனப்புமிகு
நீற்றான் நிலவணி செஞ்சடை யான் மருந்தீசனடி
போற்றார் புலையர் பிறரல்லர் உண்மை புகன்றிடினே

அச்சுதன் முக்கணன் கண்டிகை நீறு மணியழகன்
நச்சரவத்தினைப் பொற்றொடி பொற்கழல் நாணரையில்
கச்சை யெனக் கொளும் கண்ணுதல் ஓட்டிற் கவின் மறுகில்
பிச்சை புகுதரும் வான்மித் தலத்துறை பித்தனன்றே

ஆரணங்கையிடத் தேயமைத் தோன் புவனம் மமைத்த
காரணன் பொற்பொது விற்புலி பாம்பு கணிக்க நடம்
நாரதன் தும்புரு யாழிசை சசற்ப நடித்தபரன்
தாரணி வாழ்தர வான்மித் தலத்தமர் நன்மருந்தே

மின்னேரிடையும் விரிபூங்குழலும் விழை நுதலும்
தன்னேரிலாத கருணையும் கொள் சுந்தரியுடனே
பொன்னேர் திருமேனி வான்மிப் பெருநகர்ப் பூரண்வென்
முன்னே யெழுந்தருள் பால்வண்ணப்பேர் கொண்ட
முன்னவனே

கொண்மின் சிரத்தில் மருந்தீசன் தாளிணை கொண்டு நிதம்
உண்மின் அவற்குறி வேதித் தடியவர்க் கூட்டியபின்
விண்மின் அனையவிவ் யாக்கையைட் பேணல் விடுத் துளத்தில்
எண்ணுமின் அன்பர் பிறப்பறுக்கும் அருள் ஏத்தலையே

## 10. கா. ஆறுமுக நாயகர் இயற்றிய மயிலைபாதி - வான்மியூர்பாதி கலித்துறையந்தாதி

நாயகனே யுயிர் தோறு நிறைந்து நலமுதவுந்
தாயவனே தண்ணளியவனே யெழிற்றாமரையின்
மேயவனோ டரியேத் தெடுத்தேங்க வெரியுருவாஞ்
சேயவனே சிவனே திருவான்மியூர்த் தேசிகனே

நேசப்பட்டே மறைபோற்றும் பொருட்டிரு நீறுவந்து
மாசைப்பட்டானம்பி யாரூரனேத்து மருந்தமிழ்க்கே
வாசப்பட்டான்றிரு வான்மியூர் வந்தவான்மீகனுக்கா
வீசப்பட்டுடயரு ணாடக மாடினாம் வித்தகனே

ஆயந்த முனிக்கண மன்பொடு மேத்த வருந்தவத்தை
வாய்ந்து வருமுனி வான்மீக னுய்ய வருணடனந்
தோய்ந்த வடியிணைத் தூயோர் தொழுந்திரு வான்மிபுரி
யேய்ந்த மருந்தினை யேத்துவோர்க் கென்று மிடரிலதே

அருளே புரியுந் திருவான்மியூரம ரண்ணைவிடத்
தெருளே புரியுந் திரிபுர சுந்தரித் தேவியுமே
பொருளே நமக்குப் புகலிட நெஞ்சே புவியினுறு
மருளே துடைக்கு மருந்தருளும்மவர் வார்கழலே

மலருமருண்மலரே மருந்தீசன் மகிழடியி
னலறு முயலகனாரணத் தேனு மருவினையு
முலருந் திருவான்மியூர் தனிலே யுவந் தேயிருந்து
பலருந் தொழுந்திருத் தாண்டவங் காணப் பரிந்தவர்க்கே

மகிழும் பாக் கேட்கத் திருவொற்றியூரின் மகிழடியிற்
புகழும் போற்சங்கிலியாற் பிணித்தான் புண்ணியத்
துருவாய்த்
திகழுமென் சுந்தரன் ரேங்கவும் வான்மியூர் தேவனிட
நெகிழுந் திரிபுரசுந்தரி யன்னையும் நேசிக்கவே.

வண்ணம் பொன்மேனி வளர்திரு நீறு வெண்மேனி சடை
தண்ணஞ் செம்மேனி தளிரடியும் மருண் மேனியவன்
நண்ணஞ் செய்சூழ் திருவான்மியூ ரேத்தி நலம் பெருக்கு
மெண்ணஞ்செய்வோமிக நெஞ்சே யவனரு ளேற்பதற்கே

பணிசுமக்கும் முலகெல்லா முயப்பரிந்தே யருளி
னணி சுமக்கும் மருந்தீச னடியிணை யாதரித்தே
யணி சுமக்குந் திருவான்மியூர் நம்மை யடர்க்குமலப்
பிணி சுமக்கா தருட்செய்யு மதன்புகழ் பேசுவமே

அருவாகி யெங்கு மருவுருவாகி யமர்ந்துமையோ
டுருவாகியே திருவான்மியூராண்டருளுத்தமனே
குருவாகி வந்தென் முடிக்கணிந் தேயவன் கொயம்மலர்த்தாட்
டெருளா குமைந்தமைப் பானெஞ்சகத்தினுஞ் சீரெழுத்தே.

## 11. காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய மருந்தீசர் சதகம்

ஒன்றாயினை பலவாயினை யுயிருக்குயிர் தானாயினை
இன்றாயினை யுளையாயினை யிருளாயினை யொளியாயினை
நன்றாயினை தீதாயினை நடமாடிடங் கனகந்திகழ்
மன்றாயினை திருவான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே

தேவுக்கெலாந் தேவாகுவை திருவுக்கெலாந் திருவாகுவை
பூவுக்கெலா மணமாகுவை பொன்னுக்குளே யொளியாகுவை
பாவுக்கெலாம் பொருளாகுவை படிறேனறிந் துய்வேன்கொலோ
மாவுக்குளாந் திருவான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே.

பிறவிப் பெருங்கடல் வீழ்ந்தவாப் பெருமீன் பிடித்தோயாமலே
தெறலிற் படுந்துயர் நீங்கவோர் சேடல்காட்டிலா
யெனு லுய்வனோ
விறன்மிக்க வெவ்விடையாளனே வெண்ணீறுபூசிய தோளனே
மறுவற்றொளிர் திருவான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே

கண்பஞ்சடைந் திருளாமுனங் கையூன்றுகோல் பிடியாமுனம்
பெண்பிள்ளைகள் சலியாமுனம் பெருங்கோழைவா
யொழுகாமுனம்
தண்கொண்ட செஞ்சடையாளனே தமியேனை நீவந்தாளுவாய்
மண்ணுண்ட மாறொழும் வான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே.

பொன்னாசையாம் பேயோர்புறம் புலியாசையாம் பேயோர்புறம்
தின்னாசையாம் பேயோர்புறஞ் சேர்ந்தேவருத் திடுமாற்றினால்
உன்னாசை யென்னுள்ளே நிலையுறு மாறிலா தலைகின்றனன்
மன்னாகர் போற்றிடும் வான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே.

பால் வண்ணமுன் றிருமேனிசெம் பவளஞ்சடைமுடி வண்ணநன்
னீல் வண்ணமேகளமோர்புற நிகழும் மரகத வண்ணமே
கால்வண்ண மம்புயவண்ணமே காணக்கடை யேனச்சுவெண்
மால்வெள் விடையாய் வான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே.

கல்லாலடித்தோ ரன்பனார் கதி பெற்றதும் விசயன்முனம்
வில்லாலடித்தருள் பெற்றதும் வேறல்ல வன்பா லென்னவே
பொல்லாத நாயேனோர்ந்துநின் பொற்றாண்மலர்க்
கன்பீகெனா
மல்லாட வந்தேன் வான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே

காமாதியாங்குறு மன்னியர் கலகம் புரிந்த யலிற்குடி
போமாறு செய்குவரன்னதிற் போகாமலுன் பதியிற்சிலை
வாமாநிலையாய் வாழவே வரமீகெனக் குறை நேர்ந்தனன்
மாமாதிரம் புகழ் வான்மியூர் மருந்தீசனே மருந்தீசனே.

### காஞ்சி சபாபதி முதலியார் இயற்றிய
### திருவான்மியூர் மருந்தீசர் கீர்த்தனை

மருந்தீசனே சரணம் திருவான்மியூரிலுறை மருந்தீசனே சரணம்
ஆங்காரனாகிய மூர்க்கன் — இங்கே
ஆரெனை நிகர்பவரே யெனவுரை செயும் — ஆங்கார
அடிக்கிறே னெனக்கர முறுக்கியே உறுக்கிடும்
அடுத்தவர்களுமிக நடுக்குற முடுக்குறும் — ஆங்கார
அடக்கிறேனெனக் கெதி ருரைப்பவர் கொழுப்
பெனும்... ஆங்காரனாகிய மூர்க்கன் செய்யும்
அகந்தையினாலே வந்து...
மிகுந்த பிணியைத் தீர்க்கும் — மருந்தீசனே சரணம்

விகற்பனாம் வீணர வீணன்... செய்யும்
விதண்டா வாதத்தால் வந்து...
முறண்டும் பிணியைத் தீர்க்கும் மருந்தீசனே சரணம்.
வானவர் முனிவர்கள் போற்றுந் — திரு
வான்மியூர் தனிலுறை ஞானநாயகனாகிய
மருந்தீசனே சரணம்.

## 12. தனிப்பாடல்கள்

### (அ) உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா

துன்பகற்றும்
வான்மியூர் மேவும் வளர் சுந்தர மாதின்
பான்மேவிய மருந்தே பால்வண்ணா!

### (ஆ) வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப்பிள்ளை இயற்றிய

### தேவார சிவத்தல வெண்பா

காலனுறும் போது கருதரிது நெஞ்சமே
யால மமுதாக் கொள்ளத் தன்மை — நீலக்
கருவான்மியூரங் கவின் புன்னை மேவுந்
திருவான்மியூரான் றாள் சேர்

**பொருள்:—** நெஞ்சே! காலன் உயிர்களைக் கவர அணுகும் போது இறைவனை நினைத்தல் அரிது. எனவே விடத்தை அமுதாக உண்ட. அழகிய புன்னைகள் சூழ்ந்த திருவான்மியூரில் தோன்றும் அரனாரின் தாளினைச் சேர்வாய்.

### (இ) சொக்கநாயகி அம்மை விருத்தம்

சிற்பரி நிரந்தரி துரந்தரி சவுந்தரி
செகம்பல பெறும் பகவதி
செல்விமலை வில்லிபுணர் மெல்விமலை வல்லி வெகு
சித்தி முத்திக்கு வித்தாம்
தற்பரி பரம்பரி திரியம்பகி வராகி செஞ்
சலசப்ப தாம்புயத்தி
சார்வரி பூரணி யெனத் துதிதுணையே
சதாகாலமும் நினைவனோ
அற்புதச் சற்குணச் சற்சனருளத்தை விட்

டகலாத கருணைவடிவே
ஆறுமுகனைக் கரிய மாறுமுகனைப் பெறு
மருந்திரு வயிற்றமுதமே
சொற்பொருளெனதின மருந்தீசர் பங்கில் வளர்
தோகையே வான்மியூர் வாழ்
சொர்க்கபா தலரன்னை மிக்க பூதலரன்னை
சொக்கநாயகி யன்னையே

(ஓலைச் சுவடிகளிலுள்ள இப்பாடலின் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை)

## (ஈ) ம.ப. பெரியசாமித் தூரன் பாடல்கள்

### மருந்தீசர்

இராகம் : பூர்வி. கல்யாணி தாளம் : மிஸ்ரசாபு

பல்லவி

மருந்தீஸ்வரனே - சிவசங்கரனே - ஹரனே
வந்தடைந்தேன் - உன்றன் பாதமலர் கதியென -
(மருந்தீஸ்வரனே)

மருந்தாய் உயர் வான்மியூர் வளர்த்தாய்
வந்தநல் அடியவர் பிணியெலாம் களைந்தாய் -
(மருந்தீஸ்வரனே)

சரணம்

விரும்பிய தனைத்துமே வழங்கிடும் காமதேனு
வெண்வெதுனை யென்றால் வேறென்ன புகழுண்டு
கரும்பெனமொழி சொலும் திரிபுரசுந்தரித் தாய்
கண்டுமகிழத் தேவர் முனிவர்கள் போற்றிநிற்கும்
(மருந்தீஸ்வரனே)

### திரிபுரசுந்தரி

இராகம் : சுத்த சாவேரி தாளம் : கண்டசாபு

பல்லவி

தாயே திரிபுரசுந்தரி உமாமகேஸ்வரி
சாமள சௌந்தரி தாளிணை மலரே சரணம் - தாயே

அனுபல்லவி

தேமரத புகழ் மேவும் திருவான்மியூர் வளர்
தேனார் மொழிவல்லி ஜெகமெல்லாம் படைத்த (தாயே)

சரணம்

காமதேனு வணங்கும் கருணா ரூபிணி
கண்ணொளியால் அருள்காட்டும் தயாபரி
சாமகான மகிழ் சதாசிவ பரமெனும்
தனி மருந்துடையாய் பிணியெல்லாம் களைவாய் தாயே.

## (உ) டாக்டர் த. அமிர்தலிங்கம்

### திருவான்மியூர் மருந்தீசர் கோயில்

தீராத வினை தீர்க்கும் கோயில்
திருவான்மியூர் மருந்தீசர் கோயில்
தீர்த்தங்கள் பல உள்ள கோயில் - அன்னை
திரிபுர சுந்தரியின் கோயில் (தீராத)
அகத்தியர் நோய் தீர்த்த கோயில்
அப்பர் சம்பந்தர் பாட்டிசைத்த கோயில்
அருணகிரி பாடல் பெற்ற கோயில்
அருள் கணபதி கந்தர் வாழும் கோயில் (தீராத)
வான்மீகி முனிதொழுத லிங்கம் - பிறர்
வைக்காமல் தான் வளர்ந்த லிங்கம்
பால் வண்ணம் தான் கொண்ட லிங்கம்
பசு காமதேனு கால் படிந்த லிங்கம். (தீராத)
ஒருமுறை வந்தோர்க்கு குறை விலகும்
இருமுறை வந்தோர்க்கு குலம் விளங்கும்
மும்முறை வந்தோர்க்கு புகழ் விளங்கும்
பன்முறை வந்தோர்க்கு சிவபதம் கிடைக்கும் (தீராத)

டாக்டர் த. அமிர்தலிங்கம்

## (ஊ) என். எஸ். சிதம்பரம்

### திருவான்மியூர் அஞ்சலி

**ஸ்ரீ திருமுடி விநாயகர் :**

இராகம் : அம்சத்வனி தாளம் : ஆதி

பல்லவி

திருமுடி விநாயகா! உனதருள்சேர்
திருவடி தந்தாள்வாய்! திருவான்மியூர் (தி)

### அநுபல்லவி

பெருகிய கருணைப் பேறருள் நாயகா!
பிரணவ வடிவாய்ப் பேர்பெறும் தாயகா! (தி)

### சரணம்

உனதரும் பதமலர் உறுதுணை யெனக்கே! - என்
உடல்பொருள் ஆவியை உவந்தேன் உனக்கே!
மனமெனும் கோயிலில் மகிழ்ந்தமர் சீலா! நன்
மருந்தெனும் இறைவனின் மாண்புயர் பாலா! (தி)

### ஸ்ரீ மருந்தீசர் :

இராகம் : தோடி தாளம் : ஆதி

### பல்லவி

மருந்தீசா! அன்பர் விருந்தீசா! - திரு
வான்மியூர் மேவும் வான்வெளிப்பிரகாசா (ம)

### அநுபல்லவி

வருந்தாத பெரிய வாழ்வளிப்பாய் இறைவா!
வந்திப்போர் தமது சிந்தையிலே உறைவாய்! (ம)

### சரணம்

அப்பரும் சம்பந்தரும் அடிபணி சுயம்புவே! - உன்
அருட்பெருக்கை எப்படி அடியேன் இயம்புவேன்?
ஒப்பிலா வான்மீக உயர்முனிவர் மகிழ
ஓங்குநடக் காட்சி பாங்குடன் தந்தமணி (ம)

### ஸ்ரீ திரிபுரசுந்தரி :

வானத் தமரர் பரவுமொரு
  வடிவார் அமுதப் பைங்கிளியே!
வறுமைப் பிணிதீர் மருந்தீசர்
  மருவி யணைக்கும் சுடர்க்கொடியே!
மோனத் திருந்து தவம்புரியும்
  முனிவர் உளத்தில் அருளுருவாய்
முகிழ்க்கும் துரிய மணமலரே!
  மோக மெழுப்பும் எழில்மதியே!
ஞானத் துயரும் அறிஞர்தம்
  நலமார் இதயக்கோயிலிலே
நடஞ்செய் திரிபு ரசுந்தரியே
  ஞாலம் புகழும் மாமயிலே!

கானம் வளரும் வான்மியூர்
கண்ட மணியே! வருகவே!
கலியி லென்னை உயர்த்திடுமோர்
கனிவே! வருக வருகவே!

ஸ்ரீ முருகா

இராகம் : பாகேஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

வண்ண மயில்மேலே வந்திடும் முருகா! திரு
வான்மியூர் குடிகொண்ட திருமாலோன் மருகா! (வ)

அநுபல்லவி

புண்ணியர் போற்றுகின்ற பொற்பார் வடிவேலா!
பூவையர் இருவர்தமைப் பொருந்துமொரு சீலா! (வ)

சரணம்

வன்னி விருட்சமது வளருமொரு தலத்தவா!
வல்வினை தனை நீக்கி நல்வாழ்வருள் நலத்தவா!
அன்னை சிவசக்தி அணைத்துமகிழ் புதல்வா!
அரிய சுகமனைத்தும் அளித்தருள்வாய் முதல்வா! (வ)

# 7. பூஜைகளும் திருவிழாக்களும்

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் காமிக ஆகமத்திற்கு ஏற்ப நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. பூஜைகளின் விவரங்களாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| காலை சந்தி | 7.30 | — | 8.30 | காலை |
| உச்சி காலம் | 10.30 | — | 11.30 | காலை |
| சாயரட்சை | 5 | — | 6 | மாலை |
| அர்த்தஜாமம் | 8.30 | — | 9 | இரவு |

ஆலயத்தின் கதவுகள் காலை ஆறு மணி முதல் நண்பகல் 11.30 வரையிலும் மாலை நான்கு மணி முதல் இரவு எட்டரை வரையிலும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். விசேட காலங்களில் பூஜை நேரங்கள் நிலைமைக்கேற்ப மாறுபடும்.

இங்கு வழிபாடுகள் நடத்தும் ஆதி சைவ அர்ச்சகர்கள் ஒரு முறையைப் பின்பற்றுகின்றனர். காசியப்ப கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் இருபது நாட்களுக்கும் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் அடுத்த இருபது நாட்களுக்கும் பூசைகளை நடத்துவது என்பதே இந்த முறை.

## அபிஷேக முறைகள்

லிங்க வடிவிலுள்ள மருந்தீஸ்வரருக்கு உச்சியில் (சிரசு) மட்டும் பால் அபிஷேகம் நடைபெறுகிறது. தயிர், பஞ்சாமிர்தம், தேன், திருநீறு ஆகிய பொருட்களால் ஆவுடையாருக்கு மட்டும் அபிஷேகம் செய்யப்படுகிறது, அருள்மிகு மருந்தீஸ்வரருக்கு நான்கு காலங்களிலும், திரிபுரசுந்தரி அம்மனுக்கு அர்த்தஜாமம் தவிர மற்ற மூன்று காலங்களிலும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோருக்குக் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. 108 லிங்கங்கள், நாயன்மார்கள் போன்ற பரிவார தெய்வங்களுக்குக் காலையில் ஒரு முறை மட்டுமே அபிஷேகங்கள் புரியப்படுகின்றன. பௌர்ணமியன்று தியாகராஜருக்கு உச்சி காலத்தில் அபிஷேகம் நடத்தப்படுகிறது. அமாவாசை, கார்த்திகை சோமவாரம் ஆகிய நாட்களில் சில வேளைகள் அபிஷேகம் உண்டு. நடராஜப் பெருமானுக்கு ஆண்டுதோறும் ஆறு திருநட்சத்திர வேளைகளில் அபிஷேகம் செய்யப்படும். உபயதாரர்கள் அபிஷேகங்களைத் தங்கள் சொந்த செலவில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நடத்துவதுண்டு.

### திருவிழாக்களும் விசேட வைபவங்களும்

அனைத்து ஆலயங்களிலும் வசதிக்கேற்ப பெரிய அளவிலும் சிறிய அளவிலும் மாதாந்திர விழாக்களும் விசேட நாட்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. திருவான்மியூரைச் சுற்றிக் குடியிருப்புகள் அதிகம் தோன்றியுள்ளதால் மக்களின் ஈடுபாட்டுடன் இக்கோயிலிலும் விழாக்கள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன பொதுவாகக் கடற்கரையோரமாக அமைந்துள்ள ஆலயங்களைப் போலவே இக் கோயிலிலும் முழுமதி (பௌர்ணமி) நாளைக் கணக்கில் கொண்டே விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பிரம்மோற்சவத்தின் போதும் பௌர்ணமி நாளைப் பத்தாவது தினமாகக் கணக்கில் கொண்டே துவஜரோஹணம் துவங்கும்.

### விசேஷ நாட்கள்

**பிரதோஷம்** — அமுதத்தை நாடிப் பாற்கடலைத் தேவர்களும் அவுணர்களும் கடைந்தபோது முதலில் தோன்றிய ஆலகால விஷம் அனைவருக்கும் அச்சத்தையளித்ததால் வானவர்கள் சிவபெருமானை நாடினர். அரனார் விஷத்தைத்தனதுதொண்டையில் நிறுத்திக் கொண்டு நீலகண்டரானார். தான் உண்ட நஞ்சால் உலகிற்கு எவ்விதத் துன்பமும் நேரக் கூடாது என்ற நோக்கத்

துடன் அரனார் அந்த ஏகாதசி நாளன்று சில காலம் மௌனமாக இருந்தார். உடன் உபவாசமிருந்த வானவர்கள் துவாதசியான மறுநாளன்று தங்களது விரதத்தை நிறைவேற்றிக் கொண்டதன் அடையாளமாக உணவு உண்டனர். திரயோதசியான மறுநாளன்று துன்பத்தின் வசப்பட்ட அனைத்து உயிர்களும் இன்பமுறும் நோக்கத்துடன் விரிசடைக் கடவுள் தனது கரத்தில் டமருகம் ஏந்தியவாறு நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையே திருநடனம் புரிந்தார். இதுவே பிரதோஷ காலமாகும். இக் காலத்தில் கயிலையில் சிவபெருமான் புரிந்த திருநிருத்தத்தை நினைவுகோருமாறு சிவாலயங்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. இவ்வழிபாட்டில் அனைத்து இறையுருவங் களும் பங்குகொள்கின்றன.

மாதந்தோறும் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரு காலங் களிலும் வரும் திரயோதசி திதியில் கதிரவன் மறைவதற்கு முன் உள்ள மூன்றே முக்கால் நாழிகையும் அஸ்தமனத்திற்குப் பின்னர் உள்ள மூன்றே முக்கால் நாழிகையும் சேர்ந்த காலமே (மாலை நான்கரை முதல் ஏழு மணி வரை) பிரதோஷ காலமாகும். சனிக்கிழமையன்று வரும் பிரதோஷம் சிவபிரான் நஞ்சுண்ட சம்பவத்தையும் பின்ன சந்தியா நடனம் புரிந்ததையும் ஒருங்கே காட்டுவதாக உள்ளதால் சனிப் பிரதோஷம் விசேஷமானதாகும்.

திருவான்மியூர் மருந்தீசர் திருக்கோயிலில் பிரதோஷ வழிபாடு மாலை நான்கரை மணியளவில் துவங்கும். மூலவருக்கு முறைப்படி அபிஷேகங்கள் நடைபெற்றவுடன் பிரதோஷ நாயகரை மலர் மாலைகளால் அலங்கரித்து ரிஷப வாகனத்தில் ஏற்றி ஆலயத்தினுள் மும்முறை வலம்வரச் செய்வர். ஆலயத்தின் சார்பிலும் தனி நபர்களின் உபயத்திலும் பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

### பிற விசேட நிகழ்ச்சிகள்

மாதந்தோறும் கிருத்திகை தினங்களில் மயிலை ஸ்ரீ தோப்பா சுவாமிகள் தருமபரிபாலன சபையின் சார்பிலும் மருந்தீஸ்வரர் கோயிலின் சார்பிலும் சிறப்பு வழிபாடும் முருகப் பெருமானின் திருவுலாவும் நிகழும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் இரவு சுமார் ஏழரை மணியளவில் வெள்ளிக்கிழமை விழாக்குழுவினரின் முயற்சியால் சுக்கிரவார அம்மனின் உற்சவம் நிகழும். அம்மனை மலர் மாலைகளால் அலங்கரித்த பின்னர் பிரகாரத்தைச் சுற்றி மூன்று முறை உலாவாக எடுத்து வருவார்கள். உலா

முடிவுற்றவுடன் அம்மன் சந்நிதி வெளிமண்டபத்தில் ஊஞ்சலிலிட்டு ஆட்டிய பின்னர் சந்நிதியில் வைத்து அருச்சனை செய்து உபயதாரருக்கு மாலை மரியாதைகள் அளிக்கப்படும்.

ஆடி, புரட்டாசி ஆகிய மாதங்களில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையன்று மாலையில் 108 திருவிளக்கு பூஜை வெகு விமரிசையாக நடத்தப் பெறும். தியாகராஜமண்டபத்தில் வரையறுக்கப்பட்ட இடங்களில் மகளிர் அமர்ந்தவாறு விளக்கு பூஜை நடத்துவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

### மாதாந்திர பண்டிகைகள்

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆகிய மாதங்களில் நால்வர் திருநட்சத்திரமும் அதிபத்தநாயனார் உற்சவமும் நடைபெறுகின்றன. ஆடிப்பூரத்தன்று திரிபுரசுந்தரி காமதேனு வாகனத்தில் அமர்ந்து வீதிவலம் வருவது உண்டு. ஆவணியில் விநாயக சதுர்த்தி பண்டிகை கொண்டாடப்படுகிறது. புரட்டாசி நவராத்திரியின் போது சுக்கிரவார அம்மன் சிறந்த அலங்காரத்துடன் கொலுவிருப்பார்; ஐப்பசி மாதத்தில் மருந்தீசருக்கு அன்னாபிஷேகம் நிகழும். கந்தசஷ்டியின் போது சூரசம்ஹாரம் சிறப்பிக்கப்படும்; அப்போது லட்சார்ச்சனைகளும், ஆறு நாட்களுக்கு அபிஷேகமும் நிகழும். சுப்பிரமணியர் திருக்கல்யாண வைபவம், மயில்வாகன உற்சவம், கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம் ஆகியனவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. கார்த்திகை சோமவாரத்தன்று நூற்றெட்டு சங்கு அபிஷேகமும், தைமாத மூன்றாவது வெள்ளிக்கிழமையன்று 108 திருவிளக்குப் பூஜையும், மாசி மகாசிவராத்திரி இரவில் நான்கு காலச்சிறப்பு அபிஷேகங்களும் செவ்வனே நடைபெறுகின்றன.

### பங்குனி பிரம்மோத்சவம்

பங்குனியில் நடைபெறும் பிரம்மோற்சவமே இங்கு நடைபெறும் பெருவிழாவாகும். இத்திருவிழாவில் ஏழாம் நாள் தேர்த்திருவிழாவும், ஒன்பதாம் நாள் வன்னிமர சேவையும், 10-வது நாள் வான்மீக முனிவருக்காக இறைவன் ஆடிய திருநடனமும், பதினொன்றாம் நாள் தெப்பமும் நடைபெறும். வான்மீக முனிவர், நீண்ட காலம் தவமிருந்து இறைவனின் நடனக் காட்சியைக் கண்டார். அகத்தியர் ஈசனைத் திருமணக் கோலத்தில் கண்டார். இந்த இரு நிகழ்ச்சிகளும் பெருவிழாவின் போது சிறப்பிக்கப்படுகின்றன. இவ்விழாவில் ஏராளமான மக்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

திருவிழாவின் கடைசி இரு நாட்களின் போது ஆலயத்திற்கு வரும் வழியெங்கும் எண்ணற்ற சிறுகடைகள் அமைக்கப்படும்.

**பிரம்மோற்சவத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்**

பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு முந்தைய இருநாட்களில் இரவு நேரத்தில், அருள்மிகு செல்லியம்மன், அருள்மிகு விநாயகர் ஆகியோரின் திருவீதியுலா நடைபெறும்

முதல் நாள்

இரவு : கொடியேற்றம், யாகசாலை பூஜை, பஞ்ச மூர்த்திகள் வீதியுலா.

இரண்டாம் நாள்

காலை : அருள்மிகு சந்திர சேகரர் சூரிய பிறையில் காமதேனுவுக்குக் காட்சி

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் சந்திர பிறையில் காட்சி

இரவு :அருள்மிகு தியாகராஜர் வீதியுலா.

மூன்றாம் நாள்

காலை : அருள் மிகு சந்திரசேகரர் சூரியனுக்கு அருளல்

மாலை : அருளமிகு சந்திரசேகரர் சந்திரனுக்கு அருளல்

இரவு : அருள்மிகு தியாகராஜர் மூன்றாம் திருபவனி. பார்த்தசாரதிக்கு அருளல்.

நான்காம் நாள்;

காலை : அருள்மிகு சந்திரசேகரர் பிருங்கிக்குக் காட்சியளித்தல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் நான்காம் திருபவனி. சந்திரனுக்கு அருளல்.

ஐந்தாம் நாள்

காலை :அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா. இமயனுக்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் விடையூர் திருக்காட்சி, ரிஷப வாகனம், பஞ்சமூர்த்திகள் வீதியுலா

இரவு : அருள்மிகு தியாகராஜர் ஐந்தாம் திருபவனி. இராமருக்கு அருளல்

ஆறாம் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் இரட்சகவிற்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் ஆறாம் திருபவனி. இந்திர னுக்கு அருளல்.

**ஏழாம் நாள்**

காலை : அருள்மிகு சந்திரசேகரர் தேர்த் திருவிழா, பிரம்ம னுக்குக் காட்சியளித்தல்.

இரவு : அருள்மிகு சந்திரசேகரர் சத்தியகிரி விமானம், அருள்மிகு தியாகராஜர் வீதியுலா

**எட்டாம் நாள்**

காலை : அருள்மிகு சந்திரசேகரர் நான்கு மறைகளுக்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் பரிவேட்டை விழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் திருவீதியுலா

**ஒன்பதாம் நாள்**

காலை : கலியாண சுந்தரர் திருக்கல்யாணம். விமானக் காட்சி

மாலை : அகத்தியருக்குத் திருமணக் காட்சி

இரவு : அருள்மிகு தியாகராஜர் திருவீதி உலா

**பத்தாம் நாள்**

காலை : அருள்மிகு சந்திரசேகரர் கடல் நீராடல்

இரவு : அருள்மிகு திரிபுரசுந்தரி, தியாகராஜ சுவாமி திருமண விழா. கொடியிறக்கம். வான்மீக முனிவருக்கு 18 திருநடனக் காட்சியருளி வீடுபேறு அளித்தல், பெருஞ் சிறப்பு விழா

**பதினொன்றாம் நாள்**

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தெப்ப விழா

இரவு : வெள்ளியங்கிரி விமானத்தில் சுவாமி வீதியுலா

## ஆடும் தியாகர்

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலுக்கேயுரிய சிறப்பு அம்சமாக ஆடும் தியாகரைக் குறிப்பிடலாம். தியாகராஜரின் உருவம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கான வரலாறு ஒன்றைக் கூறுகின்றனர். அகிதவுஷ்டிரன் என்ற அரக்கனால் விரட்டப்பட்ட தேவேந்திரன் பூவுலகில் பார்புகழச் செங்கோலாட்சி செலுத்தி வந்த முசுகுந்தச் சக்கரவர்த்திகளின் உதவியை நாடினான். முசுகுந்தனின் படைபலத்தால் இந்திரன் இழந்த அரியணையை மீண்டும் கைப்பற்றினான். நன்றிக் காணிக்கையாக முசுகுந்தன் விரும்புவதையளிப்பதாக தேவர்கோன் உறுதியளித்தார். வானுலகில் இந்திரன் மனமாரப்

பூசித்து வந்த சுவர்ண தியாகராஜரின் திருவுருவத்தை அளிக்குமாறு முசுகுந்தன் வேண்டினான். தான் உள்ளன்புடன் பூசிக்கும் தெய்வ உருவை அளிக்க மனம் ஒவ்வாத இந்திரன் அதேபோல் ஒரு தியாகராஜரின் திருவுருவத்தைப் படைத்து அதனையளித்தான். பெரும் ஞானியான முசுகுந்தன் உண்மையை யுணர்ந்து அதனை ஏற்க மறுத்தார். இவ்வாறு பல முறை நடந்தது. முசுகுந்தனை ஏமாற்றவியலாது என்று அறிந்த இந்திரன் தான் வழிபடும் மூல தியாகரையும் தான் உருவாக்கிய தியாகரின் உருவங்களையும் முசுகுந்தனிடம் அளித்தான்.

பூவுலகில் காவிரியின் கரையில் திருவாரூரில் மூல தியாகரை யும் அவ்வூரைச் சுற்றியுள்ள திருநள்ளாறு, நாகைக் காரோணம் திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய ஆறு தலங்களிலும் ஆறு உருவங்களையும் முசுகுந்தன் நிறுவினார்.இந்த ஏழும் சப்தவிடங்க ஸ்தலங்கள் என்று போற்றப் படுகின்றன. இவை தவிரத் தொண்டை நாட்டில் திருவான்மியூர், திருவொற்றியூர், திருக்கச்சூர் ஆகிய மூன்று திருத்தலங்களில் எஞ்சிய மூன்று தியாகரின் திருவுருவங்களை நிறுவினார். திருவான்மியூரில் பிரம்மோற்சவத்தின் இரண்டாம் நாள் நள்ளிரவில் தியாகர் முசுகுந்தனுக்கு அருள்புரிந்த சம்பவம் நினைவுகோரப்படுகிறது.

**தியாகர் திருநடனம்:**

அருள்மிகு தியாகராஜர் வீதிப் புறப்பாடும், உற்சவமும் இரவுக் காலத்திலேயே நடைபெற்று வருவது வழக்கம். தியாகராஜரின் வீதிப் புறப்பாட்டிற்கும், மற்ற சுவாமிகளின் வீதிப் புறப்பாட்டிற்கும் நிரம்ப வித்தியாசங்கள் உள்ளன. தியாகராஜரைத் தனிக் கணையிலே (தியாகர் கணை என்று பெயர்) வைத்துக் கயிறு வைத்துக் கட்டாமல் ஸ்ரீபாதம் தாங்கிச் சென்று வீதிப் புறப்பாடு செய்யப்படுகிறது. வீதிப் புறப்பாட்டின் போது சுவாமியின் திருநடனக் காட்சியைக் காண்பிக்கின்றனர்.

இத்திருநடனக் காட்சி ஒவ்வொரு வீதிப்புறப்பாட்டின் போதும்,பின் கோபுர வாயிற்படியில்(வான்மீகருக்குத் திருநடனக் காட்சி அருளுவதாக ஐதீகம்) நடப்பது வழக்கம். மேலும் பெருந் திருவிழாவின் போது 3-ம் நாள், 4-ம் நாள், 5-ம் நாள், 6-ம் நாள் ஆகிய நாட்களில் பவனி மேடையில் தியாகர் பவனி நடைபெறும். திருவிழாவின் பத்தாம் நாளன்று 16 கால் மண்டபத்தைச் சுற்றியும், 11-ம் நாளன்றும், ஆருத்ரா,அரைக்கட்டு உற்சவத்தின் போதும் திரிபுரசுந்தரி அம்மன் சன்னதிக்கெதிரிலும், 18 திரு

நடனக் காட்சி நடைபெறுகிறது. கார்த்திகை தீபத்தின் போது, சொக்கப்பானை ஏற்றியபின் அருள்மிகு தியாகராஜரின் 18 திருநடனம் 16கால் மண்டபத்திற்கும், பவனி மேடைக்கும் இடையில் நடைபெறும்.

பவனி மேடையில் நடைபெறும் திருநடனக் காட்சிக்குத் தியாகர் பவனி என்று பெயர். இப்பவனிக் காட்சிக்கும், திருநடனக் காட்சிக்கும் வித்தியாசம் உள்ளது. நடனம் என்பது சாதாரணமாக சுவாமியை தலைகீழாகச் சாய்த்து நடம் புரியச் செய்வது. பவனி என்பது தலைகீழாகச் சாய்த்து இரண்டடி தூரம் சுவாமியை அணைத்துச் செல்வதாகும். இந்நடனத்தின்போது, பிரம்மதாளம், பூரி ஆகிய வாத்தியங்களும், விசிறி, பஞ்சா, குடை ஆகியவைகளும் இயங்கும் விதமும், ஸ்ரீபாதம் தாங்கிகளின் கால் அசைவுகளும் கவனிக்க வேண்டிய அம்சங்களாகும்.

# 8. இன்றைய நிலை

*நிர்வாகம்*

துவக்கத்தில் திருவான்மியூர் ஜமீன் எஸ்டேட்டாக இருந்தது. தற்போது தமிழக அரசின் சார்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் இக்கோயில் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

**வருமானமும் சொத்துக்களும்**

இக்கோயிலுக்கான முக்கிய வருமானம் நிலங்களிலிருந்தும், கட்டிடங்களிலிருந்தும் கிடைக்கிறது. பக்தர்களின் உபயங்களைக் கொண்டும், ஆலயத்தின் வருமானத்திலிருந்தும் உற்சவங்கள், திருவிழாக்கள் போன்றவை நடத்தப்படுகின்றன. இக்கோயில் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாக இருப்பதால் காணிக்கைகள், நன்கொடைகள் போன்றவற்றின் மூலம் சிறிது வருமானம் கிடைக்கிறது. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் அரசினரால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இதன் மூலம் பெற்ற தொகையை வங்கிகளில் வைப்புநிதியாக முதலீடு செய்யப் பட்டுள்ளது. அத்தகைய முதலீடுகளிலிருந்து வரும் வட்டித்தொகை கோயிலின் செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. ஆலயத்திற்குச் சொந்தமாக நன்செய், புன்செய் நிலங்கள், காலிமனைகள், குடியிருப்புகள், கடைகள் ஆகியன உள்ளன. இவற்றிலிருந்து வரப்படும் குத்தகைப்பணம், அடிமனை வாடகை கட்டிட வருவாய், உண்டியல் வருமானம், அர்ச்சனை,

அபிஷேகக் கட்டணங்கள் போன்றவற்றின் மூலம் ஆலயத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

**கட்டளைகள்**

இத்திருக்கோயிலுக்கு இராமன் செட்டியார் என்பவரால் தனித்தனி இனங்களாகப் பல கட்டளைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவை இராமன் செட்டியார் அறக்கட்டளை என்ற பெயரில் அருள்மிகு மருந்தீசர் திருக்கோயிலுடன் இணைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெறும் வருமானம் ஆலயத்தின் அன்றாட பூசைகளுக்கும், விசேட நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பங்குனிப் பெருவிழாவின் ஆறாம்நாள் உற்சவ செலவுகளுக்காக ஆறாம் நாள் அறக்கட்டளை என்ற ஒரு கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருவிழாவின் போது பக்தர்களுக்கு நீர்மோர் வழங்குவதற்காகத் திரு. வீராசாமி என்பவரால் வீராசாமி தண்ணீர்ப்பந்தல் கட்டளை நிறுவப் பட்டுள்ளது.

ஆலயத்தின் மேற்குக் கோபுரத்திற்கு எதிராக உள்ள இக்கோயிலுக்குச் சொந்தமான 6.04 ஏக்கர் நிலத்தைத் (106 / 324) தமிழக அரசு ஆர்ஜிதம் செய்தது. இதனையறிந்த காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 30—6—86 அன்று தமிழக அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்நிலத்தை அரசு எடுத்துக் கொண்டால் கோயிலில் நித்திய வழிபாடுகள் தடை படும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார். தமிழக அரசும் சுவாமிகளின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து அந்நிலத்தை ஆலயத்திற்கே திருப்பியளித்தது. இவ்விடத்தில் இரு கலியாணமண்டபங்களும், ஒரு கடைகளின் தொகுதியும் (ஷாப்பிங் காம்பிளக்ஸ்) கட்டுவதாக நிச்சயிக்கப்பட்டது. தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் பெருமுயற்சியால் இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. சுமார் 48 இலட்ச ரூபாய் செலவில் இரு திருமண மண்டபங்கள் மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்டன. பெரிய திருமணமண்டபம் (டீலக்ஸ் வகை) 31 லட்ச ரூபாய் செலவில் கட்டப் பட்டு அருள்மிகு தியாகராஜ சுவாமிகளின் பெயரால் வழங்கப்படுகிறது. சிறிய திருமண மண்டபம் ரூபாய் 17.5 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மனின் பெயரால் இயங்கி வருகிறது. இவ்விரு மண்டபங் களிலும் திருமணம் நடத்துவோர்களின் வசதிக்காக நாற்காலிகள், கட்டில்கள், அலமாரிகள், சமையல் பாத்திரங்கள் ஆகியன அளிக்கப்படுகின்றன. அனைத்து வசதிகளையும் பெற்றுள்ள

இம்மண்டபங்களைப் பொதுமக்களின் வசதிக்காக மிகக் குறைந்த வாடகைக்கு அளித்து வருகிறார்கள். இம் மண்டபங்களைச் சுற்றி அழகிய நந்தவனம் அமைக்கப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருமண மண்டபத்தையடுத்துள்ள இடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் 51 கடைகளையுடைய வர்த்தகத் தொகுதி கட்டப்பட்டுள்ளது. இக் கடைகளிலிருந்து வாடகைப் பணம் வருமானமாகப் பெறப்படுகிறது.

கோயிலின் உட்பகுதிகள் தூய்மையாக நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வெளிப்பிரகாரத்தில் பல மலர்ச் செடிகள் அழகாக வளர்ந்துள்ளன. நன்கு பராமரிக் கப்படும் சிறந்த திருக்கோயிலுக்கான பரிசை 1991-ஆம் ஆண்டு மயிலாப்பூர் அகாடமி இக்கோயிலுக்கு அளித்தது.

இவ்வாலயத்தின் விமானங்கள், கோபுரங்கள் சுதைச் சிற்பங்கள் ஆகியவற்றிற்கு வண்ணப்பூச்சு அடிக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீ பவ ஆண்டு தை மாதம் 27-ஆம் நாள் (10—2—1995) வெள்ளிக்கிழமையன்று காலை 8 மணி முதல் 9 மணி வரை மீன லக்னத்தில் 'புனராவர்த்தன, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது. சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் வெள்ளிக்கிழமை விழாக் குழுவினரின் தனிமுயற்சியால் இவ்வைபவம் நடைபெறும்.

# 9. பாம்பன் ஸ்வாமிகள் வாழ்க்கை வரலாறு

தமிழ் மொழிக்கும், முருகப் பெருமானின் நெறிக்கும் அருந்தொண்டாற்றிய சான்றோர்களுள் பாம்பன் குமரகுருதாச ஸ்வாமிகள் குறிப்பிடத் தக்கவர். சிறு வயதிலிருந்தே முருகப் பெருமானின் மீது பேரன்பு கொண்டிருந்த அப்பெருமான், தனது இறுதிக் காலம் வரை உண்மையான தவச்சீலராக வாழ்ந்தார். அவர் ஆறாயிரம் பாடல்களுக்கு மேல் இயற்றி முருகனுக்குச் சூட்டினார்.

இராமேஸ்வரத்தில் (1850-1852) சாத்தப்பா பிள்ளைக்கும், செங்கமல அம்மாளுக்கும் அப்பாவு எனும் மைந்தன் தோன்றி னான். இளவயதிலேயே அப்பாவுவின் மனதில் இறைவனின்

திருவருள் நிரம்ப அளவில் குடிகொண்டிருந்தது. தந்தையுடன் ஆலயத்திற்கு அடிக்கடிச் சென்றதால் அவருக்கு ஆன்மிக மார்க்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது.

சிறுவயதில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது அவருக்குப் பல ஆன்மிக அனுபவங்கள் ஏற்பட்டன. குந்துக்கால் எனும் கிராமத்தில் விளையாடிக் கொண்டிருக்கையில் இலங்கையிலிருந்து திரும்பிய சோதிடர் ஒருவரை அப்பாவு சந்தித்தார். அப்பாவுவின் கைரேகைகளையும் அவரது நாவின் வித்தியாசமான அமைப்பையும் கண்டு, ''எதிர்காலத்தில் பெரிய ஞானியாக வருவாய்'' எனச் சோதிடர் ஆசீர்வதித்தார். மற்றொருநாள் அஸ்வத மரத்தின் பொன்னிற இலைகள் வானில் வரிசையாகச் செல்லுவதைக் கண்ட அப்பாவு, பொன் இலைகளால் அலங்கரிக்கப்பட்ட தெய்வீகத் தேர் வானவீதியில் செல்லுவதாக எண்ணினார். ஒரு வெள்ளிக்கிழமையன்று தனது குடும்பத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்புக்குச் சென்ற போது, இறையருளால் தன் கையிலுள்ள சஷ்டி கவசத்தைப் படிக்கத் தூண்டியது. வானில் இளஞ்சூரியன் தோன்றிய காட்சி ஒரு உந்துதலை ஏற்படுத்த, அருணகிரிநாதர் போல் தானும் முருகன் மீது பாடல்களை இயற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. கையில் ஓலையுடன் வடக்குமுகமாக அமர்ந்து அருணகிரிநாதர் பெயருடன் முடியுமாறு பதிகங்களை எழுத அருள் புரியுமாறு முருகனிடம் இறைஞ்சினார்.

ஈசன் அருளால் அவரையும் அறியாமல் ''கங்கையைச் சடையிற் பரிந்து'' என்ற மொழி தோன்றியது. அன்று முதல் ஒவ்வொரு நாளும் பகலுணவிற்கு முன் ஒரு பாடல் எழுத வேண்டும் என்ற உறுதியுடன் நூறு பாடல்களை நூறு நாட்களில் எழுதினார். இப்பாடல்களுடன் மூன்று தெய்வ வணக்கப் பாடல்களையும் சேர்த்து ஒரு தொகுப்பாக வைத்துக் கொண்டார்.

அப்பாவு எழுதிய பாடற் தொகுப்பினைச் சேதுமாதவ ஐயர் எனும் தீவிர முருக பக்தர் படித்தார். இறைவனின் இன்னருள் அப்பாவுவிடம் நிரம்ப இருப்பதைக் கண்டு, அதனைச் சரியான பாதையில் செலுத்த எண்ணினார். அவரது கட்டளையின் பேரில் அப்பாவு விஜயதசமி நன்னாளன்று விடியற்காலை தீர்த்தத்தில் நீராடி ஆறெழுத்து மந்திர உபதேசம் பெற்றார். வடமொழி நூல்களையும் பயிலுமாறு சேதுமாதவ ஐயர் கட்டளையிட்டார்.

அப்பாவு முருகனையே முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டார். திருஞான சம்பந்தருக்கு ஞானப்பாலை

உமையன்னை அளித்தது போலவே அப்பாவுவுக்கும் முருகப் பெருமான் ஞானப்பாலை அளித்தார். ஒருநாள் அவரது கனவில் ஒரு முதிர்ந்த சிவனடியாராகக் குகப் பெருமான் தோன்றினார். அப்பாவுவை அவ்வடியார் ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்று சுவை மிக்க பால்சோறு அளித்தார். அன்று முதல் அப்பாவுவின் வடமொழிப் புலமையும், பாடல்களைப் புனையும் திறனும் பலமடங்கு அதிகரித்தன.

அப்பாவு இளவயதிலேயே துறவு பூண விரும்பியபோதும் அவரது உறவினர்களும் ஆசிரியரும் அவரை இல்லறத்தில் ஈடுபடுத்த எண்ணினர். தனது இருபத்தைந்தாவது வயதில் காளி முத்தம்மாள் எனும் மங்கை நல்லாளை இராமநாதபுரத்தில் திருமணம் செய்து கொண்டார். இருவருக்கும் இரு ஆண் குழந்தைகளும், ஒரு பெண்ணும் பிறந்தன. இல்லற வாழ்வில் ஏற்பட்ட பல இன்னல்களை குகப் பெருமானின் நல்லருளால் களைய முடிந்தது.

ஒருநாள் தென்னந்தோப்பில் நடந்து செல்லுகையில் அவரது காலில் கூரிய முள் தைத்து உதிரம் பெருகியது. முருகப் பெருமானும் ஒரு தச்சனின் கனவில் தோன்றி அப்பாவுவிற்குப் பாதரட்சைகள் செய்து கொடுக்குமாறு கட்டளையிட்டார். தெய்வபக்தி நிறைந்த அந்தத் தச்சனும் அவ்வாறே செய்தான். மற்றொரு நாள் அப்பாவுவின் பெண் குழந்தை உடல் நலமின்றி இடைவிடாது அழுதபோது காவியுடை அணிந்த ஒரு சிவனடியார் திருநீறு அளித்து அக்குழந்தையின் இன்னலைப் போக்கினார். அப்பாவு நோய்வாய்ப்பட்டு வாந்தி, சீதபேதி ஆகியவற்றால் தொல்லையுற்றபோது ஒரு காவியுடை அணிந்த அடியவர் திருநீறு அளித்து அவற்றை நீக்கினார். அப்பாவுவின் குடும்பம் சம்பந்தப் பட்ட பல வழக்குகளில் இறைவன் அவருக்கு வெற்றி பெற அருளினார்.

இல்லறத்தில் ஈடுபட்டபொழுதும் அவருக்குத் துறவறத்திலேயே நாட்டம் ஏற்பட்டது. துறவு பூண அருள் புரியுமாறு முருகப் பெருமானிடம் பலமுறை வேண்டிக் கொள்ளுவார். அப்பாவு பழனிக்குச் செல்ல விரும்பினார். தனது நண்பர் அங்கமுத்துப் பிள்ளையிடம் இதுபற்றி உரையாடிக் கொண்டிருந்தபோது முருகன் தன்னைப் பழனிக்குச் செல்லுமாறு கட்டளையிட்டதாகப் பொய்யுரைத்தார். ஒரு சிறுவன் வடிவில் தோன்றிய குகப் பெருமானும் அப்பாவுவைப் பொய் கூறியதற்காகக் கண்டித்தார். தானே பழனிக்கு வருமாறு கட்டளையிடும் வரை பழனிக்குச் செல்லக் கூடாது என்ற உறுதி

மொழியையும் முருகன் பெற்றுக் கொண்டார். அப்பாவுவை இறுதி நாள் வரை பழனிக்கு வருமாறு முருகன் கட்டளையிட வில்லையாதலால் அவர் பழனிக்குச் செல்லவேயில்லை.

1891 ஆம் ஆண்டில் ஒரு துன்பத்திலிருந்து தம்மைக் காத்த முருகப் பெருமானின் மீது 'சண்முகக் கவசம்' பாடினார். முருகப் பெருமானே பெரிதும் விரும்பிய பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம், மயூர பந்தம், முரச பந்தம், தசபங்கி போன்ற நூல்களையும் எழுதினார். குமரகுருதாசர் என்ற பெயர் அவருக்கு வழங்கலாயிற்று.

சுவாமிகள் தல யாத்திரை மேற்கொண்டு பல திருப்பதி களுக்குச் சென்றார். காஞ்சிபுரத்திலுள்ள அடிசன் பேட்டை யில் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கையில் முருகப் பெருமான் சிவனடியார் வேடத்தில் தோன்றிக் குமரக் கோட்டம் இருந்த இடத்தைக் காட்டிவிட்டு மறைந்தார். முருகப் பெருமான் மாறு வேடத்தில் வந்தபோது அவரை அறிய முடியாத அளவு அஞ்ஞானி யாக இருந்தமைக்காக சுவாமிகள் வருந்தினார். மற்றொரு முறை அவரது கனவில் சிவனடியாராகத் தோன்றிய முருகன் எக்கோயிலுக்குச் சென்றாலும் அங்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யத் தவறக் கூடாது என வலியுறுத்தினார்.

குமரகுருதாசர் தனது 41-வது வயதில் பாம்பனுக்கு அருகே யுள்ள பிரப்பன்வலசை எனுமிடத்தில் புரிந்த தவம் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பிரப்பன்வலசையிலுள்ள இடுகாட்டில் ஒருவர் அமரும் அளவு ஒரு சதுரக் குழியை அமைத்து அதனைச் சுற்றி முள்வேலியும், அதன் மேல் கீற்றுக் கொட்டகையும் அமைத்தார். இறைவன் மேல் சிந்தையைச் செலுத்துமாறு நண்பர்களுக்கும் அறிவுரை அளித்தபின், சுவாமிகள் தியான யோகத்தில் அமர்ந்தார். தவத்திலிருந்து எழுமாறு ஆறாம் நாள் ஒரு ஒலி கூறியது. ஏற்க விரும்பாத சுவாமிகள் முருகனே தனக்கு ஞானாசிரியனாக வர விரும்பினார். தனித்து தியானம் செய்ய அவ்விடம் ஏற்றதாக இருந்ததால் மொத்தம் 35 நாட்கள் தவம் புரிந்தார். 35வது நாளன்று காலை நான்கு மணியளவில் ஏகாதச ருத்திரர்கள் வரவிருப்பதால் எழுமாறு குகனின் கட்டளை பிறந்தது. தவமிருந்த இடத்தை மும்முறை வலம் வந்தபின் மேற்றிசை வானில் நிலவைக் கண்டு அன்றைய தினம் சித்ரா பௌர்ணமி என அறிந்தார். சுவாமிகள் நிட்டையிலிருந்ததன் விளைவாகவே தகராலய இரகசியம் எனும் நூல் பிறந்தது.

கூண்டிலிருந்து பறவை விடுபடுவது போல சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு முழுத் துறவியாக மாற சுவாமிகள் விரும்பினார். அவரது மனைவியாரையும், தாயாரையும் தேற்றி ஆறுதல் மொழிகள் கூறியபின் பாம்பன் நீங்கி சென்னை வந்தடைந்தார். வெள்ளை மேலாடையும், கீழ் ஆடையும் அணிந்தவராய் உண்மையான துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் அனைத்தையும் கடைப்பிடித்தார். சமய நூல்கள் இயற்றுவதிலும், முருகப்பெருமானுக்குப் பாமாலை சூட்டுவதிலும் அவர் முழு மூச்சாக ஈடுபட்டார்.

சென்னை நகருக்கு முதல் முறையாக வருகை தந்த சுவாமிகள் மு ்றிலும் புதிய சூழ்நிலையில் தமக்கு வழிகாட்டுமாறு முருகனிடம் இறைஞ்சினார். வைத்தியநாத தெருவிலுள்ள ஒரு மூதாட்டி அவரை வரவேற்றுத் தனது வீட்டின் மாடியில் தங்குமாறு செய்தாள். அம் மூதாட்டி குமரகுருதாசருக்கு உணவளித்து, அவரிடம் ஆறெழுத்து மந்திர உபதேசம் பெற்றார். குமரானந்தம் எனப் பிற்காலத்தில் அழைக்கப்பட்ட அந்த மூதாட்டி குமரகுருதாசரின் இறுதிக் காலத்தில் அவருக்குப் பல உதவிகளைச் செய்தார். ஓராண்டு காலம் சென்னையில் தங்கியிருந்த சுவாமிகள் பலருக்கு ஞான தீட்சை அளித்தார்.

1896ஆம் ஆண்டில் சிதம்பரத்தை அடுத்துள்ள குயவன் பேட்டைக்குச் சென்ற சுவாமிகள் அங்கு சிலகாலம் தங்கியிருந்தார். கும்பகோணம், தஞ்சாவூர் முதலிய இடங் களுக்குச் சென்று, பின் திருநெல்வேலி வரையிலுள்ள பல தலங்களுக்குச் சுவாமிகள் சென்றார். ஒரு வயதான மாதுவின் கனவில் மயில் நடனமாடும் காட்சி தோன்றியது; அவ் வம்மையாருக்கும் சுவாமிகள் உபதேசம் செய்தார். முருகப் பெருமானின் ஆணைப்படியே மறுபடியும் சென்னை சென்றார்.

சென்னை நகரில் பற்பல இன்னல்களுக்கு இடையில் பல சமய நூல்கள் எழுதினார். 1902இல் காசி நகருக்குச் சென்று, அங்கிருந்து பல வடநாட்டுத் தலங்களுக்கும் சென்றார். காசியில் குமரகுருபரர் மடத்தில் தங்கியிருக்கையில் ஒரு முதியவர் அவருக்குக் காவியுடையை அன்பளிப்பாக அளித்தார். இதுவரை வெண்மை நிற உடைகளையே அணிந்திருந்த சுவாமிகள் காவியுடை அணியவேண்டும் என்பது முருகனின் விருப்பம் போலும்.

1904-1911 வரை நடைபெற்ற வழக்காடுகள், சர்ச்சைகள் ஆகியவற்றில் வென்று சைவ சமயத்தின் சிறப்பை

நிலைநாட்டினார். இவ்வாறு குகப் பெருமான் அருளால் நீதிமன்றங்களிலும் இவரது சமயக் கொள்கை வெற்றி பெற்றது.

சென்னையிலுள்ள புதுப்பாக்கத்தில் தங்கியிருந்த சுவாமிகள் பல சமய நூல்களை எழுதினார். 1923 டிசம்பர் மாதம் தம்புச் செட்டித் தெருவில் ஒரு குதிரை வண்டியின் சக்கரம் அவரது காலில் ஏறி எலும்பு முறிவு ஏற்பட்டது. பொது மருத்துவ மனையிலுள்ள வைத்தியர்களும் அவரது கால் குணம் அடைவது கடினம் என்று கூறிவிட்டனர். சுவாமிகளின் சீடரான சுப்பிரமணிய தாசன் என்பவர் சண்முகக் கவசத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்து சுவாமிகளின் கால் குணமடைய வேண்டும் என்று பிரார்த்தித்தார். ஒருநாள் உடைந்த எலும்புகள் வேலின் முனையால் ஒன்று சேர, அதனை மற்றொரு வேல் தாங்குவதைப் போன்ற காட்சி அவரது மனதில் தோன்றியது. வைத்தியர்களும் வியப்புறும் வகையில் சுவாமிகளின் காலில் ஏற்பட்டிருந்த எலும்பு முறிவு குணமாகியது.

இச்சம்பவத்திற்குப் பின் சுவாமிகள் ஒரு அற்புதக் கனவு கண்டார். பெரியதும் சிறியதுமாக இரண்டு மயில்கள் தோன்றின. பெரிய மயில் வானம் முழுவதும் மறையுமாறு தனது தோகைகளை விரித்து நடனம் ஆடியது. அதனைத் தொடர்ந்து சிறிய மயிலும் ஆடியது. மார்கழி மாதம் வளர்பிறையின் முதல் நாளில் இக்காட்சியை சுவாமிகள் கண்டதால் ஆண்டு தோறும் அதே நாளில் மயூரவாகனச் சேவை நடைபெறுகிறது.

வெய்யிலின் கடுமை தாங்க முடியாமல் சுவாமிகள் பெங்களூர் சென்றபோது, அங்கும் இரு அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒரு பேரொளி சுவாமிகளின் உடலில் புகுந்து அவரை மேலெழுப்பியது போன்ற உணர்வு ஏற்பட்டது. மற்றொரு சமயம் மின்சார விளக்குகள் அணைந்தபோது, சுவாமிகளைச் சுற்றி நான்கு தீவட்டிகள் ஒளியளிப்பது போன்ற ஒரு காட்சியை அவர் கண்டார்.

தனது முடிவை உணர்ந்த சுவாமிகள் தனது சீடரான சின்னசாமிப் பிள்ளையிடம் திருவான்மியூரில் ஒரு இடம் பார்க்குமாறு கட்டளையிட்டார். நூல்கள் எழுதிச் சேர்த்த தொகையைக் கொண்டு நிலம் வாங்கப்பட்டது. உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாயிற்று. 30-5-1929 அன்று வைகாசித் தேய்பிறை ஆறாம் நாளில் அவரது மூச்சு அடங்கியது. அவரது பூதவுடலின் மேலெழுப்பப்பட்ட சமாதியும், முருகன் கோயிலும் திருவான்மியூரில் கலாக்ஷேத்திரத்திற்கு அருகே உள்ளன.

